Registered as a News Paper

# ஈழநாதம்

Eelanatham வெள்ளிநாதம்

பக்கங்கள்:16 விலை:12.00

நாதம் 13 திருவள்ளுவர் ஆண்டு 2033 ஆவணி -21 06 - 09 - 2002 வெள்ளிக்கிழமை ஓசை 200

எண்பதுகளின் பின்னர்மீண்டும் சுன்னாகத்தில்

போட்டோ சனிகோ

கலர் லாப்

30 நிமிடத்தில் படம்

- எமது கலையகத்தில் கறுப்பு வெள்ளை. கலர்ப் படங்கள் உடனுக்குடனும் அனைத்து வைபவங்களுக்குமான படங்கள் விழா மண்டபத்திலும் வழங்கப்படும்.

84. காங்கேசன்துறை வீதி. சுன்னாகம். (சி-7348) 204. கண்டி வீதி. வவுனியா.



சமாதானத்துக்கான நிகழ்ச்சிநிரல் பக்கம் 03



அமெரிக்க மைய நவீன மயமாக்கலும்... பக்கம் 05



சிங்கள சினிமாவின் சின்னத்தனங்கள் ... பக்கம் 14

# மத மற்றும் அரசியல் தலைவர்களின் ஆலோசனையின் பேரிலேயே புலிகள் மீதான தடைநீக்கப்பட்டுள்ளது



~பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன

(கொழும்பு)

மத மற்றும் அரசியல் தலைவர்களின் ஆலோசனையின் பேரிலேயே தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான தடையை ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் நீக்கியிருப்பதாக படைத்துறை அமைச்சர் திலக் மாரப்பன தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தமிழீழ விடுதலைப் புலிகளின் தடை நீக்கும் அதிகாரம் தனக்கே வழங்கப்பட்டிருப்பதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். இந்த அதிகாரத்தின் பிரகாரம் விடுதலைப் புலிகளின் தடையை விதிக்க பயன்படுதப்பட்ட சட்டப் பிரிவினையையும் ரத்துச் செய்தி ருப்பதாகவும் திலக் மாரப்பன மேலும் கூறியுள்ளார். அத்துடன் தேவையேற்படின் சட்டப் பிரிவை மீண்டும் அமுல்படுத்துவதன் மூலம் விடுதலைப் புலிகள் மீதான தடையை மீண்டும் நடைமுறைக்கு கொண்டு வர முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகள் மீதான தடை சிறிலங்காவில் நீக்கப்பட்ட போதும் அது வெளிநாடுகளில் உள்ள விடுதலைப்புலிகள் மீதான தடையினை எந்த வகையிலும் பாதிக்கமாட்டாது என்றும் சிறிலங்காஅமைச்சின் படைத்துறை அமைச்சர் திலக் மாரப்பன மேலும் தெரிவித்துள்ளார்.

## கைதிகள் பரிமாற்றம் மேலும் தாமதமடையலாம்

சிறிலங்கா அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான கைதிகள் பரிமாற்றம் மேலும் தாமதமடையலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதற்கு சட்டப் பிரச்சினைகளே முக்கிய காரணமென்றும், விடுதலைப் புலிகளால் குறிப்பிடப்பட்ட இருபத்து மூன்று பேரை விடுதலை செய்வதில் சட்டப் பிரச்சினைகள் காணப்படுவதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

மத்திய வங்கி குண்டு வெடிப்பு, தெகிவளை தொடரூந்து குண்டு வெடிப்பு, ஹலதாரி விடுதி மீதான குண்டுத் தாக்குதல் போன்றவற்றோடு தொடர்புடைய சிலரிற்கு எதிராக குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டிருப்பது இந்த சட்டச் சிக்கலில் ஒன்று எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## மங்களவின் சூளுரைப்பு

பத்தொன்பதாவது அரசியலமைப்பு திருத்தச் சட்டத்திற்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை வாக்குகள் கிடைக்கமாட்டாதென்று பொதுசன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

எனவே ஆளும் அரசு நாடாளுமன்றத்தில் அதனைச் சமர்ப்பிக்காது மீளப் பெற முனைவதாக கூறியிருக்கும் அவர் முடிந்தால் அதனை வெற்றி பெறச் செய்யட்டும் என்று சூளுரைத்துள்ளார்.

## யாழில் அடேல் பாலசிங்கத்தின் "சுதந்திர வேட்கை" நூல் வெளியீடு



(அலுவலக நிருபர்)

பெருமதிப்புக்குரிய திருமதி அடேல் பாலசிங்கம் அவர்கள் எழுதிய சுதந்திர வேட்கை நூல் வெளியீட்டு விழா எதிர் வரும் 8ம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது. சுதந்திர வேட்கை என்ற இந்தப் புதுமையான நூல் விடுதலைப் புலிகளின் போராட்ட வாழ்வை உள்ளிருந்த பார்வையாக ஆழமாக தரிசிக்கின்றது. சுயசரிதை விபரணமாகவும் வரலாற்று நோக்குடனும் இந்த நூல் எழுதப்பட்டுள்ளது.

கடந்த இருபது ஆண்டு காலமாக தமிழீழ சுதந்திரப் போராட்டத்தின் படி நிலை வளர்ச்சிகள் நிகழ்ந்த முக்கிய வரலாற்று நிகழ்வுகளையும் திருப்பங்களையும் இந் நூல் கூறுகி றது.

மேற்படி சுதந்திர வேட்கை (தமிழீழ விடுதலைப் போராட்டம் உள்ளிருந்து ஒரு நோக்கு) வெளியீட்டு விழாவினை விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகம் மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கருத்தரங்கு

இலங்கை கூட்டுறவு முகாமை நிறுவனம், கூட்டுறவுத் திணைக்களம் மற்றும் கூட்டுறவு சபையுடன் இணைந்து பத்து நாள் கருத்தரங்கு ஒன்று கிளிநொச்சி நிர்வாக சேவை பணிமனையில் நடைபெற்று வருகிறது.

கடந்த 2ஆம் திகதி ஆரம்பமான இக்கருத்தரங்கு வரும் 11ஆம் திகதி முடிவடையும்.

இக்கருத்தரங்கில் ஏராளமானவர்கள் பங்கு பற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## வீரவணக்கம்

கடந்த 25.08.2002 அன்று கேணல் ராயு அவர்கள் சுகவீனம் காரணமாக சாவடைந்துள்ளார்.



கேணல் ராயு/ குயிலன்
(அம்பலவாணன் நேமிநாதன்)
ஏழாலை தெற்கு, சுன்னாகம்,
யாழ்ப்பாணம்.
தற்போதைய முகவரி: 7ம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு, முல்லை.

கேணல் ராயு அவர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றனர்.

## சிங்கள மக்களிற்கு அரிசி வழங்கி சமாதானம் வேண்டும் பிரதி அமைச்சர்

சிங்கள மக்களை சமாதானத்தை ஆதரிக்குமாறு கோரி ஐக்கிய தேசிய முன்னணி அரசின் பிரதி அமைச்சர்களில் ஒருவரான சஜித் பிரேமதாச பத்துக் கிலோ அரிசி வழங்கி வருகின்றார்.

ஜனசுவய என்ற திட்டத்தின்கீழ் பத்துக் கிலோ அசிரியினை பொதி செய்து அதன் கீழ் சமாதானத்தை ஆதரிப்போம் என பொறித்து சிங்கள மக்களிற்கு வழங்கி வருகின்றார்.

தென்பகுதி மக்கள் மத்தியில் பத்துக் கிலோ அசிரி மூலம் சமாதானத்தை இவ் அமைச்சர் வேண்டி நிற்பது கேலி செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ். சாலை, கிளிநொச்சி. 06-09-2002

## பொறுத்த நேரமும், பொருத்தமற்ற நிகழ்வுகளும்

பருத்தித்துறை சம்பவமானது, விடுதலைப்புலிகளுக்கும் அரசுக்கும் இடையேயான புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்னர் நடைபெற்ற மற்றொரு படைத்தரப்பினரின் புரிந்துணர்வற்ற நம்பிக்கை என்றே கூறவேண்டும்.

மாணவர்கள் பொது மக்கள்- மேற்கொண்ட நியாயபூர்வமான போராட்டத்தை இராணுவம் கண்ணீர் புகைக் குண்டுகளை வீசியும் துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்டும் அடக்க முற்பட்டிருப்பது சமாதான சூழ்நிலையிலான இயல்பு நிலையை படைத்தரப்பினர் ஏற்றுக்கொள்ளக் கூடிய மனநிலையில் இல்லை என்பதையே எடுத்துக் காட்டுகிறது.

இதுவே மாணவர்களையும் பொது மக்களையும் கொதிப்படைய செய்துள்ள்து எனலாம். ஒப்பந்தம் ஒன்றை மேற்கொண்ட சிறிலங்கா அரசாங்கம் அந்த ஒப்பந்தத்தில் கூறப்பட்ட அல்லது ஒப்புக் கொள்ளப்பட்ட சரத்துக்களை சரியாகவும் நேர்மையாகவும் அமுல் செய்வதில் காலதாமதம் செய்து இழுத்தடிப்பதே இத்தகைய விரும்பத்தகாத நிகழ்வுகளுக்கு எல்லாம் காரணமாகும்.

குறிப்பாக பொது இடங்கள், வணக்கஸ்தலங்கள், "பாடசாலைகள்" போன்றவற்றில் நிலைகொண்டுள்ள படையினரை அவ்விடங்களிலிருந்து வெளியேற்றும்: ஒப்புக்கொள்ளப்பட்ட சரத்துக்களை நிறைவேற்றுவதில் அரசுக்கும் இராணுவத் தரப்புக்குமிடையில் தொடர்ந்தும் புரிந்துணர்வற்ற தன்மையுடன் கூடிய இழுபறி நிலை தொடர்வதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க அரசு தயங்குவதாகவே உள்ளது.

முப்படைத் தளபதி என்ற வகையில் சர்வாதிகார வலுக்கொண்டவராக விளங்கும் சிறிலங்கா ஜனாதிபதி சந்திரிகா இந்த இராணுவ வெளியேற்ற நடவடிக்கைகளுக்கு எந்த வகையிலும் பாதுகாப்பு அமைச்சுடன் மனப்பூர்வமாக ஒத்துழைப்பு தருபவராக இல்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

பொதுவாக சமாதான முயற்சிகளுக்கு தான் ஆதரவு என்று அவ்வப்போது அறிக்கைகளை மட்டும் வெளியிட்டு வரும் சந்திரிகா அம்மையார் அந்த முயற்சியின் நகர்வுகள் ஒவ்வொன்றிற்கும் ஏதோ ஒரு வகையில் முட்டுக்கட்டை போடுபவராகவும், எதிர்ப்பு தெரிவிப்பவராகவும் அதனையும் மீறி அரசு செயற்பட முனையும் போது அதனை எச்சரித்து அச்சுறுத்துபவராகவும் உள்ளமையானது சமாதான சூழலின் அடியாதாரமாக இயல்பு நிலையை தோற்றுவிக்கும் நடவடிக்கைகளுக்கு தடையாகவே உள்ளது.

இது சிறிலங்காவில் நடைபெறும் முரணான இரு கட்சிகளின் தலைமையிலான இரட்டை ஆட்சியின் எதிரொலி என்றே கூறமுடியும்.

ஆளும், எதிர்க் கட்சிகளின், இன்றும் தெளிவாக ஜனாதிபதி - பிரதமர் ஆகிய இருவரின், இரு திசை நோக்கி நகரும் வண்டியிலான சமாதான யாத்திரை தென்னாலிராமனின் குதிரைப் பயணம் மாதிரி "மாதம் போம் காதவழி" என்ற கதையாகவே உள்ளது.

ஒரு புறம் தாய்லாந்தில் பேச்சுவார்த்தைக்கான நாள் குறிக்கப்பட்ட நிலையில், பேச்சுவார்த்தை மேசையில் அமரும் முன் மேற்கொள்ளப்பட வேண்டியதான - ஒப்புக் கொள்ளப்பட்ட - விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கம் என்ற விடயம் திரிசங்கு சொர்க்கமாகவே இன்னமும் உள்ளது.

ஜனாதிபதி மற்றும் ஜே.வி.பி. யினரின் வழிகாட்டலிலான எதிர்க்கட்சியும், பௌத்த மத பீடங்களும், பேரினவாத கும்பல்களும் தடை நீக்கத்திற்கு எதிராக பெரும் பிரச்சாரங்களையும், சிங்கள மக்களை கொதிப்புடையவர்களாக மாற்றும் அறிக்கைகளையும் வெளியிடுவதுடன் பேரணிகள், ஊர்வலங்கள் போன்ற வற்றையும் தொடர்ந்து மேற்கொண்டு வருவதானது அமைதி, சமாதானம், தீர்க்கமான அரசியல் தீர்வு, சர்வதேச சமூகத்தின் ஆதரவு, தென்பகுதி மக்களின் எதிர் பார்ப்பு வடக்கு - கிழக்கு தமிழ் மக்களின் அபிலாஷைகள் அனைத்தையும் முழுமையாக நிராகரிக்கும் தன்மையை கொண்டதாகவே உள்ளது.

அரசு இவர்களின் இந்த எதிர்ப்புக்களை கடந்து எவ்வாறு உறுதியான தீர்வொன்றிற்கான பேச்சுவார்த்தை தளத்தை நிறுவப் போகிறது என்பது தான் இன்றுள்ள முக்கியமான கேள்வி ஆகும். எதிர்க்கட்சிகள் குறிப்பாக பௌத்த மத பீடங்களின் எதிர்ப்புகளை புறம் தள்ளிவிட்டு துணிச்சலாக அரசியல் தீர்வொன்றை எட்டுவதற்கான திடசங்கற்பத்துடன் முனைந்து செயற்படும் திறன் அரசுக்கு இருப்பதாக முழுமையாக கூறிவிடமுடியாத நிலையில் இங்கு தொடர்கிறது.

இரண்டாம் திகதி அன்று நடைபெற்ற பருத்தித்துறை சம்பவத்தை அடுத்து மேலதிக படையினர் அங்கு குவிக்கப்பட்டுள்ளதுடன் விசேட கொமாண்டோ மோட்டார் வண்டிப் பிரிவினரும் சந்திக்குச் சந்தி நிறுத்தப்பட்டுள்ளதும் சேதமடைந்த காவலரண்கள், புதுப்பிக்கப்பட்டு முகாமை அண்டிய பகுதிகளுடன் நுழைந்தால் சுடப்படும் என எச்சரித்து அச்சுறுத்தும் அறிவுப்புப் பலகைகள் தொங்கவிடப்பட்டுள்ளதும் நம்பிக்கை தரும் சங்கதிகளாக இல்லையென்றே கூறமுடியும். இதே வேளை அப்பகுதி வாழ், பொதுமக்களும் வர்த்தகர்களும் படையினரால் மிரட்டப் பட்டுள்ளதுடன் , மூடப்பட்டிருந்த வர்த்தக நிலையங்களைத் திறக்க மறுத்த கடை உரிமையாளர்களின் வர்த்தக நிலையங்கள் அனைத்தையும் வீடியோ படமும் எடுத்து சென்றுள்ளமையானது சமாதானம் குறித்த படைத்தரப்பினரின் மனோ நிலையை தெளிவாக எடுத்துக்காட்டுவதாகவும் உள்ளது.

பேச்சுவார்த்தைக்கு முன்னரான இயல்பு நிலையை எவ்வாறு அரசு உறுதி செய்யப் போகிறது என்பதற்கு அரசு உறுதிரியான பதில் எதனையும் தரும் வல்லமை கொண்டதாகத் தெரியவில்லை. இதற்கு உதாரணமாக "ஹாட்லிக் கல்லூரி" பாதை திறந்து விடப்படமாட்டாது என சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சர் திலக்மாரப்பன அறிவித்துள்ளதை கூறமுடியும். இது இராணுவத்தை திருப்திப்படுத்த நினைக்கும் அரசின் குரலாகவே உள்ளது.

இது யுத்த நிறுத்தம் தான் ஏற்பட்டுள்ளது. யுத்தம் முற்றாக ஓய்ந்து விடவில்லை, முடிந்துவிடவில்லை என தமிழ் மக்களை எச்சரிப்பது போன்றே உள்ளது.

அரசு இதற்கு என்ன உத்தரவாதம் வழங்கப் போகிறது?

சர்வதேச- சமாதானம் விரும்பும் சமூகம் மிக உன்னிப்பாக நிலைமைகளை அவதானித்து யார் சமாதானத்தின் விரோதிகள் என்பதை தீர்மானிக்க வேண்டிய தருணம் இதுதான் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## பருத்தித்துறையில் பொதுமக்கள் மீது முகமூடி அணிந்தோர் தாக்குதல்

பருத்தித்துறைப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு அப்பிரதேசத்தில் முகமூடி அணிந்த இனந் தெரியாதவர்களால் பொது மக்கள் தாக்கப்பட்டுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலின்போது காயமடைந்த இருபத்து இரண்டு வயதுடைய அல்பேட் கொன்ஸ்டைன் என்பவர் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

அத்தோடு வடமராட்சி கரையோர கடற்றொழிலாளர்கள் சிறிலங்கா கடற்படையினரின் கெடுபிடிகளிற்கு உள்ளாகி வருவதாக வடமாரட்சி மீனவர் சமாசம் தெரிவித்துள்ளது.

இதேவேளை ஹாட்லிக் கல்லூரி அசம்பாவிதங்களால் அந்த முகாம் பகுதிக்குள் சிக்கியிருந்த நாற்பது குடும்பங்களில் ஆறு குடும்பங்கள் இடம்பெயர படையினரால் அனுமதிக்கப்பட்டுள்ளன.

## புலிகள் மீதான தடைநீக்கத்திற்கு அரசியல் தலைவர்கள் பலரும் பாராட்டு

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் பேச்சு வார்த்தைக்கு முன்னர் தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை சிறிலங்கா அரசு நீக்கியுள்ளதை பல அரசியல் கட்சித் தலைவர்களும் வரவேற்றுள்ளனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட உபதலைவர் ஜோசப் பரராஜசிங்கம் கருத்துத் தெரிவிக்கையில் சமாதானப் பேச்சு வார்த்தைக்கு முன்னர் நடைபெற்ற முக்கியமான நடவடிக்கை இது என்று தெரிவித்துள்ளார். இதன் மூலம் தமிழ் பேசும் மக்களின் ஏக பிரதிநிதிகள் விடுதலைப் புலிகள் என்பதை சிறிலங்கா அரசு அங்கீகரித்துள்ளதாக அவர் கூறியிருக்கின்றார். இந்த தடை நீக்கம் ஒரு சனநாயக நடவடிக்கை என்றும் இதனை தாம் பெரிதும் வரவேற்பதாகவும் புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் விக்கிரமபாகு கருனாரட்ண கூறியுள்ளார்.

இந்த தடைநீக்கத்தை நீண்டகாலமாக வலியுறுத்தி வந்துள்ளதாகவும் தமிழ் மக்களுக்கு ஏதோவொரு வழியில் அரசியல் சனநாயக தீர்வு வழங்கப்பட வேண்டுமென்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான தடைநீக்கம் நல்லதொரு சமாதான சமிக்ஞை என்று புதிய சனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார். இதேபோன்று ஏனைய பல கட்சிகளின் தலைவர்களும் விடுதலைப்புலிகள் மீதான தடைநீக்கத்தை பெரிதும் வரவேற்றுள்ளார்கள்.

## நிரந்தர வைத்தியசாலை இன்றி மாங்குளத்தில் மக்கள் அவதி

மாங்குளம் கிராமத்தில் வைத்தியசாலை ஒன்றில்லாததால் அப்பகுதி மக்கள் அவசர வைத்திய சிகிச்சையைப் பெறுவதில் பலத்த கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இப்பகுதியில் முன்னர் வைத்தியசாலை ஒன்று செயற்பட்டு வந்தபோதிலும் ஜயசிக்குறு இராணுவ நடவடிக்கையையடுத்து இடம்பெயர்ந்தது. இப்பகுதிக்கு மக்கள் மீளக்குடியேறி வருகின்ற போதிலும் வைத்தியசாலை இன்னமும் வந்து சேராததால் அவசர சிகிச்சையைப் பெறுவதற்காக மக்கள் மல்லாவி வைத்திய சாலைக்கு கஷ்டத்தின் மத்தியில் செல்ல நேரிடுகிறது. (யோ)

## குடிநீர் தட்டுப்பாடு

மல்லாவிப் பகுதியில் குடிநீருக்குப் பலத்த தட்டுப்பாடு தற்போது ஏற்பட்டுள்ளது. இப்பகுதியில் ஏற்பட்டுள்ள கடும் உஷ்ண நிலையையடுத்து இக்கஷ்டநிலை ஏற்பட்டுள்ளது.

கடும் வெப்பம் காரணமாக இங்குள்ள நீர் நிலைகள் வற்றி வருவதனாலும், முழுமையாக வற்றிப் போய்விட்டதனாலும் இக்குடிநீருக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. (யோ)

## யாழ் தீவகப் பகுதியில் வாந்திபேதி வயோதிப தாய் ஒருவர் மரணம்

யாழ் தீவகம் நெருஞ்சிமுனைக் கிராமத்தில் வாந்திபேதி ஏற்பட்டு ஒரு வயோதிபத்தாய் இறந்ததுடன் பத்துப்பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகினறனர்.

மற்றும் யாழ்ப்பாணத்தில் பல இடங்களிலும் வயிற்றோட்ட நோயாளர்கள் பலர் யாழ்போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

எனவே யாழ்ப்பாண பகுதி மக்களை வாந்திபேதி நோய் பரவாமல் இருக்க விழிப்புணர்வுடன் இருக்குமாறு தமிழீழ சுகாதார சேவையினர் கேட்டுக் கொள்கின்றனர்.

அத்துடன் நெருஞ்சிமுனைக்கிராமத்தில் தமிழீழ சுகாதார சேவையினரும், தியாகி லெப்.கேணல் திலீபன் மருத்துவசேவையினரும், சுகாதார வைத்திய அதிகாரிபிரிவினரும் இணைந்து வாந்திபேதி நோய் தடுப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

அத்துடன் விழிப்புணர்வுக் கருத்தரங்குகளையும் நடத்தி வருகினறனர்.

## அரசின் சமாதான முயற்சிகளை தடுத்து நிறுத்த வேண்டும்

- விமல் வீரவன்ச

சிறிலங்கா அரசின் சமாதான நடவடிக்கைகளை தடுத்து நிறுத்த வேண்டும் என்று ஜே.வி.பி.யின் பிரச்சார செயலாளர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

கொழும்பு தொடரூந்து நிலையத்திற்கு முன்பாக மதகுருமார், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் தொழிலாளர்கள் ஏற்பாடு செய்துள்ள எதிர்ப்பு பேரணியில் சலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வட-கிழக்கில் முக்கிய இடங்களிலிருந்து படைமுகாம்கள் அகற்றப்பட்டு வருவதால் நாடு மிகவும் ஆபத்தான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.





யுத்தத்தில் பேரரசுகளை அணிதிரட்டி பிரிவினையை தடுக்க முயன்றார்கள். இப்பொழுது சமாதானத்திலும் பேரரசுகளை அணிதிரட்டி பிரிவினையைத் தடுக்க முயல்கிறார்கள். யுத்தத்தைப் போலவே சமாதானமும் பிரிவினையைத் தடுக்கும் நோக்கிலானதே.

# சமாதானத்துக்கான நிகழ்ச்சி நிரல்

**நிலாந்தன்**

தேன்னிலங்கையிலிருந்து வந்த ஒருவரோடு கதைத்துக் கொண்டிருந்தேன் இடையில் அவர் கேட்டார் "இது சமாதான காலம் இக்கால கட்டத்திலாவது தமிழ்ப் புத்திஜீவிகள், கலைஞர்கள் பத்திரிகையாளர் போன்றோர் இன ஐக்கியத்திற்காக எழுதலாம் தானே? ஏன் யுத்தத்தின் பக்கம் நிற்க வேண்டும்?" என்று.

நான் திருப்பிக் கேட்டேன் "கணவனால் சதா அடிக்கப்படும் ஒரு மனைவியின் விசயத்தில் அவளுக்குச் சட்டரீதியாகப் பாதுகாப்பைத் தரும் விவாகரத்து உரிமை பற்றிக் கதைப்பீர்களா அல்லது சட்டவலு இல்லாத அறநெறிகளின் பிரகாரம் அவளை அட்ஜஸ்ற் பண்ணச்சொல்லி கேட்பீர்களா?'' என்று

அதற்கு அவர் சொன்னார் ''மனைவிக்குள்ள விவாகரத்து உரிமையைப் பாதுகாப்பதால் மட்டும்தான் அவளைக் கணவனுக்குச் சமமானவள் ஆக்கலாம்'' என்று.

அப்பொழுது நான் சொன்னேன்- ''இனப்பிரச்சினைக்கும் இது பொருந்தும் தமிழர்களுக்குள்ள பிரிந்து போகும் உரிமையை சிங்களவர்கள் முதலில் ஒப்புக் கொள்ளட்டும் அப்பொழுதுதான் தமிழரும் சிங்களவரும் சமம் என்ற நிலை வரும். அதுதான் மெய்யான ஐக்கியமும்" என்று.

இந்த உதாரணத்தோடு அவர் அந்த விசயத்தைப்பற்றி கதைப்பதை நிறுத்திவிட்டார்.

இது ஒன்றும் புதிய உதாரணம் அல்ல. ஏற்கனவே ஈழப்போரின் ஆரம்பக் காலங்களில் இடது சாரிகளால் சுயநிர்ணய உரிமையை விளக்கக் கூறப்பட்ட ஒரு உதாரணம் தான்.

அதாவது- ஒரு இனத்தின் சுயநிர்ணய உரிமை எனப்படுவது திருமணஉறவில் கணவன்- மனைவிக்குள்ள விவாகரத்து உரிமை போன்றது. இந்த உரிமை காரணமாகவே இருவரும் சமமாகி விடுகிறார்கள். ஒருவர் மற்றவரை நசுக்க முடியாது. அப்படி நசுக்கினால் மற்றவர் பிரிந்து போகலாம்.

முன்பு இந்த உதாரணத்தைக் கூறிய சில இடது சாரிகள் இப்பொழுது கருத்தாலும் வயதாலும் கிழண்டிப் போய் விட்டார்கள். பலர் காட்டிக் கொடுப்போராய் மாறி விட்டார்கள்.

சுமார் 30 ஆண்டுகாலப் போர். தமிழருக்குள்ள பிரிந்து போகும் உரிமையை சிங்களவர் ஏற்றுக் கொள்ள மறுத்துச் செய்யப்பட்ட யுத்தம். இப்பொழுது தமிழர்களிடம் ஒரு படையும் விடுதலைப் பிரதேசமும் உண்டு.

ஆனால் இப்பொழுதும் கூட தமிழருக்குள்ள பிரிந்து போகும் உரிமையை சிங்களவர் ஏற்றுக்கொள்வதாக தெரியவில்லை. அதற்காக தமிழ்ப்பகுதிகளில் ஒரு சர்வசன வாக்கெடுப்பை நடத்தலாமா என்று கேட்டால் அதற்கும் தயாரில்லை.

மிகவும் தெளிவான, மிகவும் எளிமையான, மிகவும் வெளிப்படையான ஒரு உண்மையை வேண்டுமென்றே மிகவும் சிக்கலான ஒரு கோட்பாட்டு பிரச்சினையாக மாற்றிவிட்டு இப்பொழுது அகச்சுயநிர்ணய உரிமை புறச்சுயநிர்ணய உரிமை என்றெல்லாம் வாதப் பிரதிவாதங்கள் நடக்கின்றன.

ஆனால் மெய்நிலை என்னவென்றால்- தமிழர்களைப் பிரிந்து போகவிட அவர்கள் தயாரில்லை என்பதுதான்.

இதில் மிகவும் வெளிப்படையாக கதைப்போமாயிருந்தால் சமாதானமும் கூட பிரிவினையைத் தடுப்பதற்கு தான்.

யுத்தத்தில் பேரரசுகளை அணிதிரட்டி பிரிவினையை தடுக்க முயன்றார்கள். இப்பொழுது சமாதானத்திலும் பேரரசுகளை அணிதிரட்டி பிரிவினையைத் தடுக்க முயல்கிறார்கள். யுத்தத்தைப் போலவே சமாதானமும் பிரிவினையைத் தடுக்கும் நோக்கிலானதே.

அப்படியென்றால் பிரிவினைக்கு ஈடாக ஒரு தீர்வைத் தர அவர்கள் தயாரா?

இங்கேதான் பிரச்சினை இருக்கிறது.

பேராசிரியர் ஜெயதேவ உயாங்கொட போன்றோர் 13ஆவது திருத்தச் சட்டத்தைத் தாண்டிப் போவதில் உள்ள நடைமுறைச் சிக்கல்களை சுட்டிக்காட்டுகிறார்கள்.

13ஆவது திருத்தச்சட்டம் எனப்படுவது இந்திய இலங்கை உடன்படிக்கையின் பிரகாரம் மாகாணசபைகளை நிறுவுவதற்குரியது.

மாகாணசபை பிரிவினைக்கு ஈடாகாதபடியால் தான் யுத்தம் தொடர்ந்தும் நடந்தது. இந்நிலையில் இனி வரப்போகும் எந்தவொரு தீர்வும் மாகாணசபையைத் தாண்டிப் போகவேண்டும். அது பிரிவினைக்கு ஈடானது என்று தமிழர் நம்பவும் வேண்டும்.

இந்த இடத்தில் ஒன்றைச் சுட்டிக்காட்ட வேண்டும், அமெரிக்காவின் ஆசீர்வாதத்தோடு கிழக்கைரோப்பாவிலும் உலகின் பிறபாகங்களிலும் செய்யப்பட்ட அனேகமான எல்லா சமாதானங்களின் போதும் அமெரிக்காவில் இருப்பது போன்ற ஒரு கூட்டாட்சிக்கு நிகரான தீர்வே கொடுக்கப்பட்டது. இலங்கைத் தீவிலும் நோர்வே செய்யும் சமாதானம் அமெரிக்காவின் பூரண ஆசீர்வாதங்களைப் பெற்ற ஒன்று தான்.

ஆனால் இப்பத்தியில் திரும்பத் திரும்ப கூறப்படுவது போல சிங்களவர் யுத்த நிறுத்தத்திற்கு தயார். தீர்வுக்கு தயாரில்லை. அதற்கு வேண்டிய மனவிரிவு இன்னமும் அவர்களிடம் உண்டாகவில்லை. அதிலும் குறிப்பாக சமஷ்டி என்ற சொல் அவர்களுக்கு அதிகம் முற்கற்பிதங்களால் சூழப்பட்ட ஒரு சொல்லாயிருக்கும் ஒரு நிலையில் பிரிவினைக்கு ஈடான ஒரு தீர்வைப்பற்றி சிந்திப்பது எப்படி?

சரியாக இன்னும் 10 நாட்களில் தாய்லாந்தில் பேச்சுக்கள் ஆரம்பமாகப் போகும் ஒரு சூழலில் இப்படி எதிர்மறையான விவகாரங்களை ஏன் எழுத வேண்டும் என்று வாசகர் யோசிக்கக்கூடும்.

ஆனால் சமாதானத்தைக் குறித்து விஞ்ஞான பூர்வமாக சிந்திக்கும் இடத்து இத்தகைய விவகாரங்களைப்பற்றிக் கதைப்பதற்கு இதுதான் உகந்த தருணம் என்று தெரியவரும்.

ஏனெனில் பேச்சுவார்த்தைக்கான நிகழ்ச்சி நிரலைத் தயாரிப்பதே முதற்கட்ட பேச்சுவார்தைகளின் பிரதான நோக்கம் என்று கூறப்படுகிறது.

விஞ்ஞான பூர்வமாக அணுகப்படும் எந்தவொரு சமாதானத்திலும் நிகழ்ச்சிநிரல் எனப்படுவது சமாதான அளவுக்கு முக்கியத்துவம் உடையது.

அதுதான் எலும்புக்கூடு. அதன் மீது தான் எல்லாமும் கட்டியெழுப்பப்படும்.

நிகழ்ச்சி நிரலை வைத்தே சமாதானத்தின் போக்கை ஓரளவுக்கு எதிர்வுகூறி விடலாம்.

எனவே சமாதானத்திற்கான நிகழ்ச்சி நிரலில் முதலிலேயே தீர்வைப்பற்றிக் கதைப்பது என்பது நாம் முன்கண்டவைகளின் படி சமாதானத்தைத் தலைகீழாக அணுகும் ஒரு பொறிமுறையே அது எந்த வகையிலும் விஞ்ஞான பூர்வமாக இருக்காது.

இன்னும் சரியாகச் சொன்னால்- நிகழ்ச்சிநிரலில் எடுத்த எடுப்பிலேயே தீர்வைப்பற்றிய உரையாடல் வர வேண்டும் என்று கூறும் எவரும் ஒன்றில் பைத்தியக் காரர்களாய் இருக்க வேண்டும் அல்லது சமாதானத்தை இடையில் முறிக்க நினைக்கும் யுத்த வியாபாரிகளாய் இருக்க வேண்டும். அல்லது அதிசயங்கள் அற்புதங்களுக்காக காத்திருக்கும் புராணகாலத்து பேர்வழிகளாயிருக்க வேண்டும்.

ஈழப்போரை உற்று கவனித்து வரும் எல்லா மெய்யான சமாதான விரும்பிகளும் கூறுகிறார்கள் முதலில் நம்பிக்கைகள் பரஸ்பரம் கட்டியெழுப்பப் படவேண்டும் என்று சமாதானம் ஒரு சூதான வியூகம் அல்ல என்று இருதரப்பும் பரஸ்பரம் நம்பவேண்டும்.

கல்லைக் காணும் வரை நாயைத் தடவுவது சமாதானம் ஆகாது.

யுத்தத்தைப்பற்றிய அச்சமும் சமாதானம் ஆகாது.

மாறாக சமாதானம் எனப்படுவது பாதிக்கப்பட்ட மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதே.

அது அவர்களின் பயங்களை அகற்றுவதிலிருந்தும் காயங்களை ஆற்றுவதிலிருந்தும் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

கடந்த 8மாதகாலமாக புரிந்துணர்வு உடன்படிக்கையின் மீது கட்டியெழுப்பப்பட்டு வரும் புரிந்துணர்வையும் நம்பிக்கைகளையும் அடுத்தடுத்த கட்டங்களுக்கு எடுத்துச் செல்லவல்ல ஒரு முதற்கட்ட நிகழ்ச்சி நிரலையே சமாதான விரும்பிகள் எல்லோரும் ஆவலோடு எதிர்பார்த்து இருக்கிறார்கள்.

ஒரு இடைக்கால நிர்வாக அமைப்பு தான் சமாதானத்தை அதன் அடுத்த கட்டத்துக்கு எடுத்துச் செல்லும் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள்.

இடைக்கால நிர்வாக அமைப்பு என்ற தவிர்க்க முடியாத ஒரு ஊடகத்தில் தான் யுத்தத்திலிருந்து சமாதானத்தை நோக்கிப் போகும் இடைமாறு காலகட்டத்தை சுமுகமாக கடக்கமுடியும்.

தீர்வுக்கெதிரான யுத்த வியாபாரிகளை தோற்கடிக்க முடியும். சமாதானம் ஒரு வியாபாரம் ஆவதை தடுக்கவும் முடியும்.

எனவே பரஸ்பரம் நம்பிக்கைகளை கட்டியெழுப்பும் ஒரு நிகழ்ச்சித் திட்டத்தின் இறுதிக் கட்டமாகவே தீர்வைப்பற்றிய உரையாடல் அமைய வேண்டும்.

மாறாக தீர்வைப்பற்றி முதலிலேயே கதைக்கும் ஒரு நிகழ்ச்சிநிரல் நிச்சயமாக சமாதானத்தை இடையில் முறித்து விடக்கூடியது என்பதால் அதை யுத்தத்துக்கான ஒரு நிகழ்ச்சி நிரல் என்றே அழைக்க வேண்டியிருக்கும்.

❋❋❋❋



# நிலவின் ஒளியை மறைத்த மெழுகுவர்த்தி

அவன் ஒரு அரசன். 'தான்' என்ற அகங்காரம் நிரம்பியவன். வேட்டைக்குச் சென்ற போது காட்டிலே ஒரு துறவியைச் சந்தித்தான். கண்களை மூடித் தியானம் செய்துகொண்டிருந்தார் துறவி. ''நான் பல நாடுகளை வென்று, என் நாட்டோடு இணைத்திருக்கிறேன். நான் வென்று வந்த செல்வத்தால், என் கஜானா நிரம்பி வழிகிறது. அந்தப்புரம் எங்கும் நான் கவர்ந்து வந்த மாற்று தேசத்து அழகிகள் இருக்கிறார்கள். ஆனால், நான் சந்தோஷமாக இல்லை. எனக்கு எப்போது மகிழ்ச்சி கிடைக்கும்...?''- அரசன் கேட்டான்.

தியானம் கலைந்ததால் கண்விழித்த துறவி சற்றே கோபமாக, ''நான் செத்தால் தான் உனக்குச் சந்தோஷம் கிடைக்கும்...'' என்று சொல்லி விட்டு கண்களை மூடி, மீண்டும் தியானத்தில் ஆழ்ந்தார். ''நான் எத்தனை பெரிய அரசன்... என்னையே அவமானப் படுத்துகிறாயா...?'' என்றபடி கொஞ்சமும் சிந்திக்காமல், துறவியைக் கொல்வதற்காக இடுப்பிலே இருந்த கத்தியை உருவினான். ''அட மூடனே... நான் என்றால், என்னைச் சொல்லிக் கொள்ளவில்லை... 'நான்' என்ற இறுமாப்பு செத்தால் தான் உனக்குச் சந்தோசம் கிடைக்கும்...'' என்று துறவி விளக்கினார்.

நம்மைவிடப் படிப்பிலோ, பதவியிலோ, செல்வத்திலோ குறைவானவன் என்று நாம் மதிப்பிட்டு வைத்திருக்கும் ஒருவர் ஒரு விவா தத்தின் போது நாம் சொல்லும் கருத்துக்கு 'ஆமாம் சாமி' போடாமல் மாற்றுக் கருத்தைச் சொல்லும்போது அதை ஏற்றுக் கொள்ள நம் 'ஈகோ' இடம் கொடுப்பதில்லை.

இன்னும் கொஞ்சம் ஆழமாகச் சிந்தித்துப் பாருங்கள். இது போன்ற ஈகோ உடையவர்கள், ''நாம் சொல்லும் கருத்தை எல்லோரும் ஏற்றுக்கொள்ள வேண்டும்... நமக்கு எல்லோரும் மரியாதை கொடுக்க வேண்டும்...'' என்று தான் நினைக்கிறார்கள். அப்படியென்றால் என்ன அர்த்தம்...? மற்றவர்கள் இவர்களுக்கு மரியாதை கொடுத்தால் தான் இவர்கள் சந்தோஷப்படுவார்கள். இதையே வேறு வார்த்தைகளில் சொன்னால், இவர்கள் தங்களின் மகிழ்ச்சிக்காக மற்றவர்களின் தலையாட்டலை எதிர்பார்த்திருப்பார்கள்! இன்னும் பச்சையாகச் சொன்னால், ''எனக்ககு மரியாதை கொடு... எனக்கு மரியாதை கொடு...'' என்று மற்றவர்களிடம் மறைமுகமாகப் பிச்சை எடுப்பவர்கள் இவர்கள் மரியாதை என்ற பிச்சையை மற்றவர்கள் இவர்களுக்குக் கொடுக்க மறுக்கும் போது, இவர்களின் அமைதி பறிபோய் விடுகிறது. சந்தோஷம் தொலைந்து விடுகிறது.

நமது வேதங்கள் ஆண்டவனை 'ஆனந்தம்' என்று குறிப்பிடும். இதை ஏன் சொல்கிறேன் என்றால் Edging God Out என்பதன் சுருக்கம் தான் EGO அதாவது, நம்மைவிட்டு ஆண்டவன்... அதாவது, ஆனந்தம் வெளியேறும் நிலைதான் 'ஈகோ'!

''கடவுளே! 'நான்' என்ற அகங்காரத்தை இதோ உனக்கு எதிரே உடைத்து விடுகிறேன்...'' என்று நமக்கு நாமே உணர்த்தத்தான் தேங்காயை ஒரு அடையாளப் பொருளாகக் கோயிலிலே உடைக்கிறோம்.

தேங்காயின் கடுமையான ஓடு உடையும் போது எப்படிச் சுவையான இளநீர் வெளிப்படுகிறதோ, அதேமாதிரி நமது அகங்காரம் என்ற ஈகோ உடையும்போது சந்தோஷம் வெளிப்படும்.

அலுவலகத்திலோ அல்லது நண்பர்கள் மத்தியலோ உங்களின் கருத்தைச் சொல்ல வேண்டும் என்று நினைக்கிறீர்கள். அதை அழுத்தமாகவும் சொல்கிறீர்கள். ஆனால், நீங்கள் சொன்ன கருத்து எடுபடவில்லை. நீங்கள் ஈகோ இல்லாதவராக இருந்தால், இதுபற்றிக் கவலைப் படமாட்டீர்கள். உங்களின் கருத்தை மற்றவர்கள் பாராட்டினாலும் சரி, கிண்டல் செய்தாலும் சரி, ஏற்றுக்கொண்டாலும் சரி, கண்டு கொள்ளா விட்டாலும்சரி... இதனால் பாதிக்கப்படாமல் இருப்பீர்கள்.

கவிஞர் தாகூரின் வாழ்க்கையில் நடந்த சம்பவம் இது. ஒருமுறை படகில் ஏறி, யமுனை நதியைக் கடந்து கொண்டிருந்தார் தாகூர். அது இரவு நேரம். படகிலே இருந்த சின்ன அறையில் மெழுகுவர்த்தியின் வெளிச்சத்தில் தாகூர் கவிதை எழுத முற்பட்டார். ஆனால், அன்று ஏனோ தெரியவில்லை...... பிடிபடாமல் தாகூரிடமே கவிதை கண்ணாமூச்சி விளையாடியது கடைசியில் சோர்ந்துபோன தாகூர் மெழுகுவர்த்தியை அணைத்து விட்டார். மெழுகுவர்த்தியை அணைத்தது தான் தாமதம் .... நதியும் படகும் நிலாவின் வெளிச்சத்தில் அழகாக ஒளிர்வது தெரிந்தது. இதைப் பாத்ததும் தாகூருக்குக் கவிதை பெருக்கெடுக்க ஆரம்பித்துவிட்டது.

இந்தச்சம்பவத்துக்கும் ஈகோவுக்கும் என்ன சம்பந்தம்...? ஒரு சின்ன மெழுகுவர்த்தி எப்படி நிலாவின் ஒளியையே தாகூரின் கண்ணிலிருந்து மறைத்து விட்டதோ, அதேமாதிரித்தான் ஈகோ!நிலா என்ற சந்தோசத்தை அது மறைத்துவிடும்.

**- சுவாமி சுகபோதானந்தா**

# நறுக்கென...



சிறிலங்கா அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கு மிடையிலான பேச்சுவார்த்தைகளுக்கு முன்னர் விடுதலைப்புலிகள் மீதான

## சந்திரிகாவின் எதிர்ப்பும் சமாதான முயற்சிகளும்

தடையை நீக்குவதற்கு அந்த நாட்டின் நிறைவேற்று அதிகார வலுவினைக் கொண்டவரான ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரனதுங்க தாம் எதிர்ப்பு தெரிவிப்பதாக தெரிவித்துள்ளமையானது ஒரு வியப்பிற்குரிய செய்தியல்ல. எதிர்பார்த்தது தான். சட்டியில் உள்ளது தானே அகப்பையில் வரும்!

அதுமட்டுமல்ல பிரதான பிரச்சினை தொடர்பான விடயங்களில் இரு தரப்பினருக்குமிடையே உடன்பாடு எட்டப்படுவதன் முன்னர் இடைக்கால நிர்வாகம் ஒன்றை உருவாக்குவதற்கும் அவர் ஆதரவளிக்கப்போதில்லை என்றும் திருவாய் மலர்ந்தருளியுள்ளார்.

பிரதான விடயங்கள் குறித்து பேசுவதற்கு ஒரு பரஸ்பர நம்பிக்கைத்தளம் வேண்டும். அது தடைநீக்கத்தையும் இடைக்கால நிர்வாகத்தையும் அடி ஆதாரமாய் கொண்டது என்பதை இன்று சர்வதேசசமூகமே ஏற்றுக்கொண்டு பேச்சு வார்த்தைக்கான தங்களின் ஆதரவை வெளிப்படையாகவே தெரிவித்துள்ள நிலையில் சந்திரிகா அம்மையார் இப்படித் தெரிவித்திருப்பது சமாதானம் விரும்பிகள் மத்தியில் அதிருப்தியையும் அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ள நிலையில், ஜே.வி.பி உட்பட பேரினவாத சக்திகளுக்கு உற்சாகத்தையும் ஏற்படுத்தியுள்ளதை மறுக்க முடியாது. இன்னும் சொல்லப்போனால் பௌத்த சிங்கள பேரினவாத சக்திகளினதும் சாயம்போன இடதுசாரிகளினதும் எடுபிடியாக அல்லது ஊதுகுழலாக சந்திரிகா அம்மையார் முற்றுமுழுதாக மாறிவிட்டதையே அவரது இந்த கூற்றுகள் தெளிவுபடுத்துகின்றது.

பொ.ஐ.முன்னணிக்குள் ஜே.வி.பியின் ஆதிக்கம் அநுராவின் அனுசரணையுடன் தீவிரமடைந்துள்ள நிலையில், கூட்டுகட்சிகளிடையே அவநம்பிக்கையும், சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் கருத்து ரீதியிலான முரண்பாடுகளின் அடிப்படையிலான பிரிவும் அதிகரித்துள்ள சூழலில் சந்திரிகா சுயசிந்தனையின் பாற்பட்டு முடிவெடுக்க முடியாத நிலையிலேயே கருத்துக் குழப்பம் கொண்டவராகி விட்டுள்ளார் என்பதை அவரது அண்மைக் கால பேச்சுக்கள், அறிக்கைகள், அச்சுறுத்தல்கள், அதிகாரம மதையுடன் கூடிய நடவடிக்கைகள் யாவும் புலப்படுத்துகின்றன. இதே வேளை சந்திரிகா எந்தக்காலத்திலுமே தமிழ் மக்களின் பிரச்சினைக்கு நியாயமான தீர்வொன்றை தீர்க்கமான முறையில் முன்வைக்கும் மனோபாவம் சிறிதுமற்ற-தமிழ்மக்களை முற்றிலும் சகலவிதத்திலும் ஓரம்கட்டி, ஏமாற்றி, அழிக்கும் அல்லது அடிமைகளாக்கி வைத்திருக்கும் மனோபாவத்தை வரித்துக்கொண்ட, இராணுவ ரீதியிலான தீர்வுகளில் நம்பிக்கை கொண்ட பண்டாரநாயக்க பாரம்பரியத்தின் வாரிசாக தன்னை நிலைநிறுத்திக் கொள்வதில் உறுதியான முடிவெடுத்தவராகவே தன்னை இனம்காட்டிவந்துள்ளார். வருகிறார்.

ஆகவே, தடைநீக்கம், இடைக்கால நிர்வாகம் என்பன பௌத்த சிங்கள பேரினவாதப் பாரம்பரியத்திற்கும், பண்டாரநாயக்க பாரம்பரிய அபிலாஷைகளுக்கும் ஏற்றவையாக இருக்கப்போவதில்லை.

இந்த நிலையில் ரணிலும் அரசும் தென்பகுதி மக்களின் சமாதானம் மீதான அக்கறையும், சர்வதேச சமூகத்தின் அமைதி நடவடிக்கை தொடர்பான ஆர்வமும் சந் திரிகாவின் இந்த அழுங்குப் பிடியைத் தளர்த்த என்ன நடவடிக்கையை மேற்கொள்ளப் போகிறது என்பதே இப்போது பலகோடிரூபாய் பெறுமதியான வினாவாகியுள்ளது.

□□□



பொதுசன ஐக்கிய முன்னணி பாராளுமன்ற கட்சிக்கூட்டத்தில் அந்த அமைப்புக்குள் ஏற்பட்டுள்ள முரண்பாடுகள் மிகவும்

## முற்றிவிட்ட முரண்பாடுகள்

உச்சமான மோதல் நிலைக்கு போயுள்ளதாக தெரிகிறது.

குறிப்பாக எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவுக்கும் ஜனாதிபதியின் நெருங்கிய சகாவும் கடந்த பொ.ஐ.முன்னணி ஆட்சிக்கால கதாநாயகர்களில் ஒருவருமான மங்கள சமரவீரவுக்குமிடையிலான கருத்து மோதல் அந்தக் கூட்டத்தில் மிகவும் உச்சநிலையினை அடைந்த வேளையில் மகிந்த மங்களவை நோக்கி 'வாயைமூடு' என்று கூறுமளவுக்கு வார்த்தைப் பிரயோகம் சூடுபிடித்ததாகக் கூறப்படுகிறது.

இதன்போது மங்களவுக்கு ஆதரவாக ஜே.வி.பியினரும், குறிப்பாக விமல் வீரவன்சவும், மக்கள் ஐக்கிய முன்னணியில் தினேஷ் குணவர்த்தனவும் குரல் கொடுத்ததுடன், அவருடன் இணைந்து அந்தக் கூட்டத்தை விட்டு வெளியேறியுமுள்ளனர்.

பொ.ஐ.முன்னணியின் பாராளுமன்றக் கட்சிக் கூட்டத்தில் விமல் வீரவன்சவும் கலந்து கொண்டமையானது பொ.ஐ.முன்னணி- ஜே.வி.பி கூட்டின் இறுக்கத்தை உறுதிப்படுத்துவதாகவே அமைந்துள்ளது.

அதேவேளை இந்த மகிந்த எதிர்ப்பு அணி, அநுரா ஆதரவு அணியென்றும் கருதப்படுகிறது. பொ.ஐ.முன்னணி மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அடுத்த தலைமையைக் கைப்பற்றும் போட்டி அநுராவுக்கும், மகிந்தவுக்குமிடையே பகிரங்கமாகவே ஏற்பட்டுள்ளது.

மகிந்த மீது அவரது எதிர்ப்பு அணியினர் அவர் அரசுக்கு ஆதரவாகச் செயற்பட்டு வருவதாகக் குற்றம் சாட்டியுள்ளனர், தொடர்ந்தும் குற்றம் சாட்டி வருகின்றனர்.

இதேவேளை ஜனாதிபதி சந்திரிகாவும் கட்சித்தலைமை பண்டாரநாயக்க குடும்பத்தை விட்டு கைமாறுவதை விரும்பாத காரணத்தால் தனது தம்பிக்கு அதாவது அநுராவுக்கு ஆதரவு வழங்கும் அணியை மறைமுகமாக உற்சாகப்படுத்தி மகிந்தவை ஓரம் கட்டும் நடவடிக்கைகளுக்கு திட்டமிட்டு வருவதாகவும் தெரியவந்துள்ளது.

ஜே.வி.பியின் பின்பலம் மட்டுமே அநுராவை தீவிரமாக ஆதரிக்கும் சக்தியாக இயங்கி வருகிறது.

இதன்மூலம் சிறிலங்கா அரசியலில் இரண்டாவது சக்தியாக தன்னை நிலைப்படுத்த பொ.ஐ.முன்னணிக் கூட்டையும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியையும் சிதைவடையச் செய்யும் மித்திர பேதப் பஞ்சதந்திர மூலோபாயத்தை மேற் கொள்வதற்கான ஊடுருவலை ஜே.வி.பியினர் வெற்றிகரமாக முன்னெடுத்துள்ளதாகவே அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

-மகிந்த சந்திரிகா முரண்பாடு
-மகிந்த ரத்னசிறி முரண்பாடு
-மகிந்த அநுரா முரண்பாடு
-மகிந்த மங்கள முரண்பாடு...

என்பனயாவும் அதன் வெளிப்பாடுகள் என்றே கூறவேண்டும்.

எவ்வாறாயினும் பொ.ஐ.முன்ன ணிக்குள்ளான பூசல்கள் அடுத்துவரும் மாதங்களில் தென்னிலங்கை அரசியலில் சில திருப்பங்களை ஏற்படுத்தும் என்றே நோக்கர்கள் எதிர்பார்க்கின்றனர்.

□□□



சிறிலங்காவில் அரச பீடங்களின் (அதாவது சனாதிபதி ஆட்சிபீடம் மற்றும் ரணிலின் ஆட்சிபீடம்)

## மத பீடங்களின் அறிக்கைகள்

முரண்பாடுகளும் மதபீடங்களின் (மல்வத்த மற்றும். அஸ்கிரிய பீடங்கள்) அரசியல் சார்ந்த கருத்துக்களும், அந்த நாட்டைமிக மோசமான அவலநிலைக்கு இட்டுச் சென்றுள்ளதை அனைவரும் அறிவர்.

குறிப்பாக தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பான சகல நடவடிக்கைகளுக்கும், பொறுப்பேற்க வேண்டியவர்கள் இவர்களேயாவர்.மதபீடங்களின் ஆசீர்வாதத்தில் ஆட்சிநடத்த அரச பீடங்கள் விரும்புவதில் எவரும் ஆட்சேபம்தெரிவிக்கப்போவதில்லை.ஆனால் மதவெறியுடன் மதபீடாதிபதிகள்ஆசீர்வாதம் வழங்குவதுடன் அவர்களின் அதே மதவெறியுடன் கூடிய வழிகாட்டல்களை அரசியல் நடவடிக்கைகளிலும் கடைப்பிடிக்க முயல்வதானது சிறிலங்காவை அதலபாதாளத்தக்கு இட்டுச்செல்வதைஅரசியல் ஞானிகள்(!) புரிந்துகொள்ளாதிருப்பது தான் துயரமான விடயமாகும்.

இன்று ஒரு அமைதிநிலைக்கான சமிக்ஞைகள் சர்வதேச அனுசரணையுடன் தெரியும் வேளையில் தென்னிலங்கையில் பிக்குமார்களில்சமாதானத்திற்கு எதிரான ஒரு குழுவினர் சனாதிபதியுடன் இணைந்து சமாதான முயற்சிகளைக் குழப்பும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அறிக்கைகள் விடுகின்றனர்,
பேரணிகள் நடத்துகின்றனர்
போராட்டங்களை மேற்கொள்கின்றனர்.

இது அமைதியை நேசிக்கும் ஆன்மீகத் துறவிகளின் செயற்பாடுகளாகவே தெரியவில்லை. இவர்களின் தவறான மதவெறி மிக்க அழுத்தங்களுக்கு ஜனாதிபதியும் தலையசைப்பதுதான் அதிகாரவலுமிக்கதான சிறிலங்கா ஆட்சிப்பீடத்தின் மிக மோசமான பரிதாபகரமான பலவீனமான அம்சமாகும்.

நாளுக்கொரு அறிக்கைகளை ஒன்றிற்கொன்று முரண்பாடாக விடுத்துவரும் அஸ்கிரிய, மல்வத்த பீடங்கள் ஒருநாள் சமாதானத்திற்கு ஆதரவு என்கின்றனர். மறுநாள் அந்த சமாதான முயற்சிகளை முளையிலேயே பிடுங்கும் தன்மையுடன் அதன் நகர்வுகளுக்கு எதிரான அறிக்கைகளை விடுக்கின்றனர்.

இதனைப் பார்க்கும்போது இது ஒருதிட்டமிட்ட, காலங்கடத்தும் சமாதான விரோத-தமிழின விரோத நடவடிக்கையாகவே தெரிகிறது.

பிக்குகளின் ஒருசாரார் சமாதானத்திற்கும், புலிகள்மீதான தடைநீக்கத்திற்கும் இடைக்கால நிர்வாக அமைப்பிற்கு எதிராகப் பேரணி நடத்தி ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுக்கும் அதேநாளில் சமாதான முயற்சிகளுக்கு மல்வத்த பீடாதிபதி ஆதரவு என்ற செய்தியும் வெளியாகியுள்ளது.

தாய்லாந்துப் பேச்சுவார்த்தைகள் தொடர்பாக மல்வத்தை பீடாதிபதியை அமைச்சர் பீரிஸ் சந்தித்து விபரித்த பின்னரே அவர் இந்த ஆதரவு அறிக்கையை பிரகடனம் செய்துள்ளார்.

சரிதான், பிக்குகளுக்கும், பீடாதிபதிகளுக்கும் ஏனிந்த முரண்பாடு. ஏன் பீடாதிபதிகள் அனைவரும் ஒன்றிணைந்து ஒரு பொது அறிக்கையை விட்டு, சமாதானத்திற்கு ஆதரவா இல்லையா என்பதை உறுதிசெய்யாதுள்ளனர்.

ரணில் சந்தித்துப் பேசியவுடன் ஒரு அறிக்கை, சந்திரிகா சந்தித்துப்பேசியவுடன் மற்றொரு அறிக்கை.........
ஏன் இந்த முரண்பாடு....?இதனைக் கேட்க வேண்டியவர்கள் தென்னிலங்கையில் சமாதானத்துக்கு ஆதரவாக வாக்களித்த பொதுமக்களேயாவர்.

மதபீடங்களைத் தட்டிக்கேட்கும் துணிச்சல் அவர்களுக்கு இருக்கிறதா?அமைதியையும் சமாதானத்தையும் விரும்பும் மக்கள் சக்திக்கு அந்தத் துணிச்சல் இப்போது தேவை....... அதுதான் சிறிலங்காவை மட்டுமல்ல பௌத்த தர்மத்தையும்காப்பாற்றும் சக்தியாகவும் அமையும்.

□□□



இந்தியாவின் கர்நாடக மாநிலத்தின் முன்னாள் அமைச்சர் நாகப்பாவை வீரப்பன் கடத்திச் சென்று

## ஜெயலலிதாவும் குற்றச்சாட்டும்

வைத்துள்ள விடயம் இன்று தென்னிந்தியாவின் பரபரப்பான செய்தியாக உள்ள நிலையில், தமிழக முதல்வர் செல்வி.ஜெயலலிதாவின் அறிக்கையொன்று மேலும் பரபரப்பொன்றினை ஏற்படுத்தியுள்ளது.

'நாகப்பாவின் கடத்தலின் பின்னணியில் தி.மு.க தலைவர் கருணாநிதி உள்ளார்' என இந்த தமிழ்நாட்டு சர்வாதிகார சந்திரிகாவான ஜெயலலிதா விடுத்துள்ள குற்றச்சாட்டானது தமிழக அரசியலின் கோமாளித்தனத்திற்கு எடுத்துக்காட்டாக உள்ளது என்றே கூற வேண்டும்.

நெடுமாறன் வெளியே இருந்திருந்தால் நாகப்பனை கடத்தி வீரப்பனிடம் நெடுமாறனே ஒப்படைத்தார் என்று கூட ஜெயலலிதா குற்றம் சுமத்தியிருப்பார்.

வை,கோ. வெளியில் இருந்திருந்தால் நாகப்பனை வீரப்பன் மூலம் வை.கோ கடத்தி வன்னிக்கு அனுப்பி விட்டார் என்று கூட அவர் குற்றம் சுமத்த தயங்கியிருக்கமாட்டார்.

அகப்பட்டவர் கருணாநிதி தான்.

'கருணாநிதியின் பெங்களூர் பயணத்திற்கு பின்னரே வீரப்பன் கர்நாடக முன்னாள் அமைச்சரைக் கடத்தினார்' என்று ஜெயலலிதா குற்றம் சாட்டியுள்ளதுடன் கருணாநிதி கோவா செல்வதாகக் கூறி வீரப்பனைச் சந்திக்கச் செல்கிறார் என்றும் கூறியுள்ளார்.

ஜெயலலிதாவின் இந்த அபத்தங்களையெல்லாம் வெளியிட தமிழக-இந்திய ஊடகங்களும் தயாராக இருப்பது தான் எல்லாவற்றையும் விட கோமாளித்தனமானது.

'யார் கண்டது எதிர்காலத்தில் பின்லேடன் கருணாநிதியின் மகன் ஸ்டாலின் வீட்டிலோ அல்லது, முரசொலிமாறன் வீட்டிலோ தான் மறைத்து வைக்கப்பட்டிருக்கிறார்' என்றும் ஜெயலலிதா அறிக்கை விடவும் கூடும்.

பாவம் எம்.ஜி.ஆர்!

இப்படி ஒரு வாரிசை உருவாக்கிய தவறுக்காக தலையிலடிக்கும் சத்தம் கேட்கவே செய்கிறது...

□□□

## உள்ளத்தை உருக்குபவை

பெற்றோர்கள் என்றும் நடமாடும் தெய்வங்கள். அவர்களை எத்தனை பிள்ளைகள் மதிக்கின்றார்கள், பூசிக்கின்றார்கள் என்பது இன்றும் பெரும் கேள்விக் குறியாகவே உள்ளது.

தாம் பெற்றெடுத்த பிள்ளைகளை நோய் நொடிகளிலிருந்து இரவு பகலாக பல வருடங்கள் பாதுகாத்து வளர்த்து விட அந்தப் பெற்றோர்களை அந்த பிள்ளைகள் மறந்து விடுகின்ற போது அவர்கள் படும் துயரம் வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது.

அவர்கள் அப்போது குஞ்சுகளால் மிதிபட்டு முடமாகிப் போன கோழிகளாகவே மாறுகின்றனர்.

குடும்பத்தில் ஆண் பிள்ளைகளாயினும் சரி பெண் பிள்ளைகளாயினும் சரி கடமைக்கு என்றில்லாமல் புரிதலின் மூலம் தம்மை பெற்ற அந்த தெய்வங்களை போற்றுதல் அவசியமாகின்றது.

அவரவர் தமது திருமண பந்தங்களின் பின்பு தமது பெற்றோர்களை மறந்து விடுகின்ற பெரும் துயரம் இப்பொழுதும் நிகழ்கின்றது.

ஒரு குடும்பத்தில் கணவனும் மனைவியும் தம்மையும் பெற்றவர்கள் பெற்றோர்களே என்பதை புரிந்து கொண்டு மதித்து நடந்தால் தாயும் தந்தையும், மாமாவும் மாமியும் தெய்வங்க ளாகவே அவர்கள் கண்களுக்குத் தெரியும். அத்தோடு தமது பிள்ளைச் செல்வங்களுக்கு அவர்களை கனம் பண்ணும் படி சிறு பிராயம் தொட்டு வளர்த்து வருவதன் மூலம் தமது பிள்ளைகளின் பிள்ளைகளும் தம்மை மதித்து போற்றி பார்க்கும் வாய்ப்பையும் அல்லவா வளர்க்கின்றார்கள்.

வேழினி

# அமெரிக்க மைய நவீன மயமாக்கலும் சந்திரிகா - ரணில் அதிகாரப் போட்டியும்





மு.திருநாவுக்கரசு

"வரலாற்றில் முன்னெப்போதையும் விட ஐரோப்பா இன்று அதிகம் அமைதியானதாகவும் ஐக்கியம் மிக்கதாகவும், ஜனநாயக பூர்வமானதாகவும், சமாதான பூர்வமானதாகவும் காணப்படுகின்றது" என்று கிளின்டனின் தேசிய பாதுகாப்பு ஆலோசகராக இருந்த சாமுவெல் ஆர். பெகர் கூறியுள்ளார். அவர் மேலும் கருதுவது என்னவென்றால் ஐரோப்பிய நாடுகளுக்குள்ள எந்தொரு தனி அச்சுறுத்தலையும் விட அந்நாடுகள் ஒன்றுடன் ஒன்று பகிர்ந்து கொள்ள வேண்டியதான நீடித்து நிலைக்கவல்ல நலன்களை நோக்கி உறுதியாக அமைப்பு ரீதியாக்கப்பட்டு விட்டன என்பதாகும்.

"பனிப்போர் காலத்தையும் விட தற்போது அமெரிக்க இராணுவம் அதிக சிக்கல்களை எதிர்கொள்ள நேர்கிறது" என்று பேராசிரியர் எலியட் எ. கொகென் கூறுகிறார்.

சோவியத் யூனியனது தோல்வியின் பின்பு ஐரோப்பாக் கண்டம் இப்போது இராணுவ பயன்பாடு தேவையற்ற பிராந்தியமாகிவிட்டது. ஆதலால் அமெரிக்காவினதும் அதன் கூட்டாளி நாடுகளினதும் இராணுவம் இனிமேல் ஆசியாவை ஒரு கை பார்க்கலாம் இனிவரும் காலத்தில் உலக அரசியலில் இராணுவக் கொள்கை வகுப்பு என்பது ஆசிய இராணுவ மையக் கொள்கை தான்.

பனிப்போர் காலத்தில் வல்லரசுகள் நேரடி இராணுவ நடவடிக்கையில் ஈடுபடுவதில் பெரும் பிரச்சினைகள் இருந்தன. உதாரணமாக வியட்நாமில் அமெரிக்க இராணுவம் நேரடியாக ஈடுபட்ட போது சோவியத்தும், சீனாவும் வியட்நாமியருக்கு முழு அளவில் அரசியல் இராணுவ ரீதியில் உதவியதன் விளைவாக அமெரிக்கா அதில் முழுத் தோல்வி அடைய நேர்ந்தது. இத்தகைய பின்னணியில் அப்போது வல்லரசுகள் இராணுவத்தை தரையிறக்குதல் என்னும் தெரிவிற்கு கடைசி முக்கியத்துவமே கொடுக்க வேண்டி இருந்தது.

ஆனால் இப்போது ஏட்டிக்குப் போட்டியான பனிப்போர் வல்லரசுகள்இல்லை. அமெரிக்க கொள்கை வகுப்புத் திட்டமிடலாளர்களும் ஆராட்சியாளர்களும் இப்போது அமெரிக்காவை வல்லரசு (Super power) என்ற பதத்திற்குப் பதிலாக உச்ச வல்லரசு (Hyper power) என்ற பதத்தால் அழைக்கின்றனர். பனிப் போர் கால இருமைய அரசியற் குவிவுக்கு (Bi polarity) பதிலாக தற்போது ஒருமைய அரசியற்குவிவு (Unipolarity) இருப்பதால் அமெரிக்கா ஏக பெரும் வல்லரசு என்ற நிலையில் இராணுவத்தைத் தரையிறக்கும் தெரிவில் கவனம் செலுத்துகின்றது. அதாவது இதனால் முன்போலன்றி இராணுவத்தை நேரடியாக தரையிறக்குவதற்கு வழியேற்பட்டுள்ளதால் இராணுவம் அதிகம் களத்தில் செயற்பட வேண்டியதாகின்றது. எனவே இராணுவத்திற்கு முன்பிருந்ததை விடவும் இப்போது பிரயோகத் தேவை அதிகம். பிரயோகத் தேவையினால் நடைமுறைச் சிக்கல்களும் அதிகம். இந்த இராணுவ பிரயோகப் போக்கை ஈராக் யுத்தம், ஆப்கான் யுத்தம், கொஸோவா, பொஸ்னியா விவகாரம் ஈரான் மீதான அச்சுறுத்தல் கள் மீண்டும் ஈராக் மீதான அச்சுறுத்தல் எனப் பலவற்றிலும் காணலாம்.

ஆப்கான் சமரில் பாகிஸ்தான் தன்னுடன் ஒத்துழைக்க மறுத்தால் முதலில் பாகிஸ்தான் மீது படையெடுத்து அதன் அணுவாயுத கேந்திர நிலையங்களை கைப்பறுவது என அமெரிக்கா திட்டமிட்டிருந்தது. அமெரிக்காவின் இத்தகைய தீர்மானத்தை தெரிந்து கொண்ட பின்பு தான் பாகிஸ்தானை முஷரப் அமெரிக்காவுக்கு திறந்து விட்டார். இப்படி இந்து சமுத்திரத்தின் எந்த ஒரு அரசின் மீதும் இராணுவ நடவடிக்கை எடுக்க அமெரிக்கா தயாராகவுள்ளமை இரண்டாம் உலகமகா யுத்தத்தின் பின்னான உலக அரசியலில் ஒரு புதுப்பரிணாமமே.

காஷ்மீர் பிரச்சினையை இந்தியா ஓர் உள்நாட்டு விவகாரம் என எப்படித்தான் சொல்லிக்கொண்டாலும் அது பற்றி இந்தியா அப்போதும் அமெரிக்காவிற்கு அறிக்கை கொடுக்க வேண்டிய நிலையிலும், அமெரிக்காவிடம் முறையீடு செய்ய வேண்டிய நிலையிலுமே உள்ளது. இதுதான் இந்து சமுத்திரத்தின் மிகப் பெரிய நாடான இந்தியாவின் கதி.

கார்க்கிலிலிருந்து பாகிஸ்தான் படையை வாபஸ் பண்ணிய பின்பு தான் தன்னைச் சந்திக்கலாம் என அப்போதைய ஜனாதிபதி கிளிங்டன் தொலைபேசி மூலம் அப்போதைய பிரதமர் நவாஸ் ஷறிப்புக்கு கொடுத்த இறுதி எச்சரிக்கையின் பின்பு தான் பாகிஸ்தானிய படைகள் கார்க்கிலை விட்டு விலகின.

"யுத்தத்தில் வெல்லலாம்; ஆனால் தரையையோ கடலையோ தொடர்ந்து வைத்திருக்க முடியாது" என்று ஒரு இராணுவக் கோட்பாடு பனிப்போர் காலத்தில் வளர்ந்து வந்தது. ஆனால் பனிப்போர் முடிந்த பின்பு அமெரிக்கா ஒன்றை தெளிவாக நம்புகின்றது. அதாவது இந்து சமுத்திரத்தில் இனிமேல் கடலை தொடர்ந்து வைத்திருக்கலாம் என்பதே. அதே வேளை தரையை முற்றிலும் வைத்திருக்கலாமா என்பதில் கேள்வி இருந்தாலும் பதிலாட்கள் மூலம் அதைச் செய்வது இப்பொழுது பரிசோதனையில் உள்ளது.

கடலை வைத்திருக்க முடிந்தாலே தரை நிரந்தர நோயாளியாகி விடும். அல்லது முடமாகி விடும். கடலையும் வானத்தையும் தன் கையில் வைத்திருப்பதன் மூலம் ஈராக்கை அமெரிக்கா குறிப்பிடக் கூடிய அளவு முடமாக்கியுள்ளது.

பிரித்தானியாவை வீழ்த்துவதற்கு 19ம் நூற்றாண்டு முற்பகுதில் நெப்போலியன் "கண்டத்திட்ட முறையை" அறிவித்தான். அதாவது பிரித்தானியாவுடன் எந்த ஒரு நாட்டையும் ஏற்றுமதி இறக்குமதி செய்யாமல் பண்ணுவதன் மூலம் அதனை வீழ்த்துவது என்பது! ஆனால் பிரித்தானியாவின் கையில் உலகின் கடற்பரப்பு முழுதும் இருந்ததால் நெப்போலியனது திட்டம் படுதோல்வியில் முடிந்தது.

இப்போது அமெரிக்காவுக்கு இந்து சமுத்திரத்தின் கடற்பரப்பில் சவால்' என்பதே இல்லை என்பதால் அதுவே அதன் முதல் பலமாக உள்ளது. அதாவது உலகின் எந்தொரு தேசத்தினதும் ஏற்றுமதி இறக்குமதி பொருளாதார வாழ்வுக்கான மூலவழி கடலாகும். ஆதலால் இந்து சமுத்திரம் அமெரிக்காவின் கையில் என்ற ஜதார்த்தத்திலிருந்தே உலக அரசியலையும் எந்தொரு நாட்டினதும் உள்நாட்டு அரசியலையும் ஆராயவேண்டும்.

1990ம் ஆண்டு ஈராக் மீது அமெரிக்கா யுத்தத்தைப் பிரகடனப்படுத்த தீர்மானித்த போது சீனா அதற்கு எதிராக ஐ.நா பாதுகாப்பு சபையில் தனது வெட்டு வாக்கைப் பிரயோகிக்கப் போவதாக அறிவித்தது. ஜெனிவாவை நோக்கி சீன வெளிவிவகார அமைச்சர் விமானத்தில் ஏறும் போது இத் தீர்மானத்தை தான் அறிவித்தார். ஆனால் சீன அமைச்சரை அமெரிக்க வெளிவிவகார செயலாளர் ஜெனிவாவில் வைத்து சிறிது நேரம் சந்தித்து உரையாடியதும் சீனா தனது தீர்மானத்தை மாற்றிக்கொண்டது. சீனா வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை; தீர்மானம் நிறைவேறியது. சீனா இதில் ஏன் மடங்கிப் போனது?

இங்கு விருப்பங்களும் ஆசைகளும் அல்ல முதன்மையானவை ஜதார்த்தமே முதன்மையானது. அமெரிக்காவிடம் இராணுவ பரிணாமத்திற்கு அப்பால் சீனாவை திருப்பதிப்படுத்த வல்ல ஒரு பொருளாதார பிடி அல்லது சீனாவின் அபிலாஷையில் மண்ணைப் போடத்தக்க வல்ல ஒரு பொருளாதாரப்பிடி அமெரிக்காவின் கையில் இருந்துள்ளமையால் தான் சீனா தனது வீட்டோ அதிகாரத்தை சுருட்டி சட்டைப் பைக்குள் வைக்க நேர்ந்தது.

முதலாவது அர்த்தத்தில் அல்லது பிரதானமாக அரசியல் என்பது பொருளாதாரம் பற்றிய தீர்மானம் எடுக்கும் துறைதான். அனைத்து அரசியல் இராணுவ நடவடிக்கைகளில் இறுதி இலக்கு பொருளாதாரம் தான். ஆதலால் உலக அளவில் பொருளாதார நிறுவனங்களையும் (உதாரணமாக உலக வங்கி, I.M.F தொண்டர் ஸ்தாபனங்கள், உதவி நிறுவனங்கள்) அவற்றுக்கான உப அமைப்புக்களையும் பிரச்சார நிறுவனங்களையும் உருவாக்குவதன் மூலம் அரசியலில் வலுவான ஓர் இராஜதந்திர பொறிமுறையை உருவாக்கி விடலாம். இந்த வகையான அனைத்து இராஜ தந்திர பொறிமுறைகளினது மையமும் பாதுகாவலனும் அமெரிக்கா தான் என்பதால் இத்தகைய பொறி முறைக்கு ஊடாகவே நோகாமல் ஓர் அரசியல் பொருளாதாரம் நகர முடிகின்றது. அத்தகைய ஒரு பொறி முறைக்குள் சீனாவை அமெரிக்கா சிக்கவைத்ததால் தான் சீனா தனது வெட்டு வாக்கை சுருட்டிக் கட்டியது.

இப்போதைய நிலையில் நாம் உள்நாட்டு அரசியலையோ, உலக அரசியலையோ விளங்க வேண்டும் என்றால் அதிகம் அதிகம் உலகளாவிய நிறுவனங்களைப் பற்றிப் படிக்க வேண்டியுள்ளது. நேரடியாக அரசுக்கு உள்ளால் மட்டும் அரசியல் நிகழ்ந்து கொண்டிருப்பதாக அரசுகளின் கைகளை மட்டும் பார்த்துக் கொண்டு இருக்க வேண்டியதில்லை மாறாக நிறுவனங்களின் ஊடாக உலக அரசியல் ஒரு பொறி முறையில் இயங்குகின்றது.

அமெரிக்கா இராணுவ ரீதியிலான (Hyper power) மட்டுமல்ல அது பொருளாதார ரீதியானதும் தான். ஜப்பான் இராணுவ ரீதியாக ஒரு வல்லரசு அல்ல. ஆனால் பொருளாதார ரீதியாக வல்லரசு தான் உலகளாவிய பொருளாதார மற்றும் அரசியல் நிறுவனங்கள் அனைத்துக்குள்ளும் வலைப்பின்னலான அமெரிக்க மின்னோட்டம் இருப்பதனால் அவற்றுடன் இணைந்து அமெரிக்கா உலகளாவிய பொருளாதார கைப்பபவராகவும் இருப்பது சாத்தியம் ஆனால் இத்தகைய முழுஅளவிலான உலகளாவிய நிறுவன ஓட்டம் ஒப்பீட்டு ரீதியில் ஜப்பானுக்கு மிதமாக இருப்பதனால் பொருளாதார வல்லரசு என்று ஓர் இடை மட்டத்திற்கு மேல் ஜப்பானால் போகமுடியவில்லை.

இவ்வாறு நேரடியான இராணுவ பொருளாதார மேலாண்மை மட்டுமன்றி அரசியல், பொருளாதார நிறுவனங்கள், தொண்டர் ஸ்தாபனங்கலென பல சார்ந்த பல்வேறு கருவி கார்ரணங்களினதும் உதவியுடனேயே அமெரிக்கா இந்து சமுத்திரத்தில் தனது கொடியை விரித்துப் பறக்க விட்டுள்ளது.

இவ்விடத்தில் அமெரிக்காவிற்கு அதன் நட்பு வட்டத்திற்குள் உள்ள எதிர்ப்பின் தன்மையையும் எடை போடுதல் அவசியம். உலக வர்த்தக பொருளாதாரத்திற்கு மேற்கு ஐரோப்பிய நாடுகளையும் ஜப்பானையும் உள்ளிட்டு அமெரிக்கா தலைமை தாங்குகின்றது. அத்தகைய தலைமை தாங்கலை இந்நாடுகள் ஏற்கின்றன.

இதில் இந்நாடுகளின் விசனம் என்னவெனில் புஷ் நிர்வாகம் ஐரோப்பிய நாடுகளை பொருட்படுத்தாது மமதையுடன் தன்னிச்சையாக தீர்மானங்களை எடுத்து தம்மீது திணிக்கின்றது என்பதே. புஷ்ஷின் இத்தகைய தீர்மானப் போக்கிற்கு எதிராக ஐரோப்பிய நாடுகள் ஈராக் விவகாரத்தில் தமது விசனத்தை வெளிப்படுத்தியுள்ளன. இத்தகைய விசனங்களின் இன்னொன்று தான் அமெரிக்காவிற்கு எதிரான டபிள்யூ. ரி. ஓ. வினது தண்டப் பண விவகாரம். தண்டப் பணம் நடைமுறைப்படுத்தப் படமாட்டாது எனவும், அது குறியீட்டு ரீதியிலான ஒரு நடவடிக்கை மட்டுமே என டபிள்யூ.ரி.ஓ. தலைவர் அறிவித்துமுள்ளார். அமெரிக்காவிற்கும் ஐரோப்பிய நாடுகளுக்குமிடையிலான முரண்பாடுகள் பகை முரண்பாடுகள் அல்ல. 'அவை ஒத்த சக்திகளுக்கு இடையேயான சாதாரண உள் முரண்பாடு தான். ஏனெனில் அமெரிக்காவின்றி இந்த நாடுகள் தமக்கு உலக வர்த்தக நலன்களை பங்கு போட முடியாது.

அமெரிக்காவுடன் ஒத்தோடுவதையே இலட்சியமாகக் கொண்ட இவ்வைரோப்பிய நாடுகள் அவ்வாறு தாம் ஒத்தோடக் கூடிய அளவிற்கு புஷ் நிர்வாகத்தின் வேகத்தை சற்று மிதப்படுத்தவே விரும்புகின்றனர். அமெரிக்காவின் துணை இன்றி இந்து சமுத்திரத்தில் எந்தொரு ஐரோப்பிய நாடும் வர்த்தகப் பொருளாதார நலன்களை அனுபவிக்க முடியாது என்பதால் இறுதி அர்த்தத்தில் இந்நாடுகள் அமெரிக்கா பக்கம் தான்.

இந்து சமுத்திரத்தின் இத்தகைய பரந்த அரசியல், பொருளாதார இராணுவ பரிமாணங்களுடன் கூடிய அமெரிக்க பின்னணியில் வைத்து தான் அமெரிக்காவுடனான ஐ.தே.க., சு.க. உறவினை ஆராய வேண்டும். சு.க. ஓர் அமெரிக்க எதிர்ப்புக் கட்சியல்ல, ஆனால் ஐ.தே.க.வுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான உறவு இரத்த பாசம் மிக்கதாகும்.

'ஒரு நாட்டினது உள்நாட்டு கொள்கைதான் அதன் வெளிநாட்டு கொள்கை; ஒரு நாட்டினது வெளிநாட்டு கொள்கைதான் அதன் உள்நாட்டு கொள்கை'

இதன்படி ரணிலின் உள்நாட்டு கொள்கை என்பது அமெரிக்காவின் வெளிநாட்டு கொள்கை தான். ரணில் - அமெரிக்க இரத்த பாசத்தின் கீழ் இலங்கை இரண்டாவது தடவையாக நவீனமயப்படவுள்ளது. இது வரை தென்னாசியாவிலே அதிக நவீனமயப்பட்ட நாடு இலங்கை தான். இது இரண்டாவது தடவையாகவும் நவீனமயப்பட்டு விட்டால் இது தென்னாசியாவின் அரசியல் பொருளாதார பரிமாணத்தையே அதிகம் மாற்றிவிடக் கூடிய நொதியம் (Catalyst) ஆகிவிடும்.

இந்நோக்கு நிலையிலான ரணில் - அமெரிக்க உறவு ஸ்தாபிதம் அடைந்து விட்டால் குறைந்தது தொடர்ந்து 20 வருடங்களுக்கு ஐ.தே.க. பதவியில் இருக்க முடியும் என்று கணிக்கப்படுகின்றது. இந்த 20 வருட கால பதவிக் காலம் பற்றி பல ஐ.தே.க. தலைவர்கள் வெளிப்படையாகவே கூறியும் வருகின்றனர்.

இனப்பிரச்சினைக்கான தீர்வில் கால் ஊன்றியே ஐ.தே.க. இதில் எழும்பிப் பாயவேண்டியுள்ளது. இனப்பிரச்சினை விவகாரத்தில் ரணிலை பொறிப்பதைத் தவிர ஐ.தே.க. வினை வீழ்த்த வேறு வழியில்லை என்பதே சந்திரிகாவின் நிலை. ரணிலை வீழ்த்துவதாயின் சில வாரங்களுக்குள் வீழ்த்த வேண்டும் தவறினால் பின்பு வீழ்த்தவே முடியாது என்பது தான் நிபுணர்களின் கணிப்பு. ஆதலால் தான் சந்திரிகா தறிகெட்டு அவசரப்படுகிறார். அந்நிய எதிர்ப்பு என்ற கொள்கை நிலைப்பாடு சந்திரிகாவிடம் ஒருபோதும் இல்லை. தமிழரின் உரிமையை ஏற்றுக்கொள்வதை விடவும் நாட்டை அந்நியருக்கு விற்பது என்பது, அல்லது அந்நியரிடம் சரணடைவது என்பதில் ஐ.தே.க., சு.க. ஆகிய இரு காட்சிகளும் ஒரே மாதிரியானவை தான்.

(15ம் பக்கம் பார்க்க)

# දේදුන්න

නිදහසේ අපේක්ෂාව

# வானவில்

**தமிழீழ விடுதலைப் புலிகளின் சிங்கள பத்திரிகையான வானவில் குறித்து 'ராவய' பத்திரிகையில் வெளியான கண்ணோட்டத்தின் தமிழாக்கம்**

## விடுதலைக்கான எதிர்பார்ப்பு

**- மஞ்சுள வெடிவர்த்தன -**

வேதனைச் சுவாலையிலிருந்து விடுபட்டு, ஓரளவு நிம்மதிப் பெருமூச்சு விடும் வடக்கு-கிழக்கு மக்களின் போராட்டப் பின்னணியில் புதியதொரு வாழ்வு கிட்டுமென்று இம்மக்கள் வெளிறிப் போய்க்கிடக்கும் ஆகாயத்தைப் பார்க்கிறார்கள். புதிய மழை பெய்யுமென்று எதிர்பார்க்கிறார்கள். வானவில் சுதந்திரத்தின் எதிர்பார்ப்பு அதுவே.

தமிழ் மக்களின் தேசியப் போராட்டம் தொடர்பாக பொய்களைப் புனைந்து குரோதத்தை வடித்தெடுத்து, இறையாண்மை என்ற மாயைக்குள் சிக்கி உண்மையை வெளிப்படுத்தாது, தறிகெட்டுப் போய்நிற்கும் தெற்கில் உள்ள சிங்கள ஊடகங்கள் செய்யத தவறிய கடமையைச் செய்ய வந்துள்ளது வானவில். யதார்த்தம் கூற,நம்பிக்கையூட்ட வந்துள்ளது வானவில். தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் சிங்கள பிரசுரமாகத் தோன்றியுள்ளது இந்த ''வானவில்''. Tabloid எனப்படும் சிறியளவில் எட்டுப் பக்கங்களுடன் வெளிவந்துள்ளது இப்புதிய மலர். உள்ளடக்கம் சகலதுமே சிங்கள மக்களைச் சகோதரர்களாகக் கூவியழைக்கும் அம்சங்களை உள்ளடக்கிய இந்த ஏட்டில் எவ்விடத்திலுமே குரோத்தம் தொனிக்கவில்லை, துவேஷம் தெரியவில்லை. உண்மையில் உள்ளடக்கம் எல்லாவற்றிலுமே தமிழ் மக்களின் விடுதலை தேடும் ஆத்ம ராகம் அடிநாதமாகத் தொனிக்கின்றது. தமிழர் போராட்டத்தின் பிரதி விம்பம் நிழலாடுகிறது. அடக்குமுறையிலிருந்து மீள அவர்களின் ஆத்துமங்கள் துடிப்பதன் உண்மை, வரிக்கு வரி இழையோடுகிறது.

முதலாம் பக்கத்தில் தமிழீழவிடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் அழகான நிழல்படம் இடம் பெற்றுள்ளது. அதன்கீழே கடந்த நவம்பர் 27இல் அவர் ஆற்றிய மாவீரர் தின உரையின் சில பகுதிகள் தரப்பட்டிருக்கின்றன.

''தமிழ் மக்கள் தமது இனத்துவ அடையாளத்துடன் தமது சொந்த மண்ணில், வரலாற்றுரீதியாக தாம் வாழ்ந்து வந்த தாயக மண்ணில், நிம்மதியாக, சமாதானமாக கௌரவத்துடன் வாழவிரும்புகிறார்கள். அவர்களது அரசியல் பொருளாதார வாழ்வை அவர்களே நிர்ணயித்துக்கொள்ள விரும்புகிறார்கள். தம்மை நிம்மதியாகத் தம்பாட்டில் வாழவிடுமாறு கேட்கிறார்கள். இதுதான்தமிழர்களது அடிப்படையான அரசியல் அபிலாசை. இது பிரிவினைவாதமோ,பயங்கரவாதமோ அல்ல. தமிழர்களது இக்கோரிக்கை சிங்கள மக்களுக்கு எந்த வகையிலும் ஓர் அச்சுறுத்தலாக அமையவில்லை. சிங்கள மக்களது அரசியற் சுதந்திரங்களையோ அல்லது அவர்களது சமூக,பொருளாதார,கலாச்சார வாழ்வையோ இக்கோரிக்கையானது எவ்வகையிலும் பாதிக்கவில்லை. தமது சொந்த நிலத்தில்,தம்மைத்தாமே ஆளும் ஆட்சியுரிமையோடு வாழ வழிவகுக்கும். ஓர் அரசி யல் தீர்வையேதமிழ் மக்கள் விரும்புகிறார்கள். சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் அரசியற் தீர்வு அமைய வேண்டுமென அவர்கள் வலியுறுத்துவதும் இதைத்தான்''

காலம் காலமாக அடக்குமுறைக்கு உட்பட்டு வேதனை தாங்க முடியாதவிடத்து விடுதலைக்கான குரல் நசுக்கப்பட அதுவே ஓர் ஆயுதப் போராட்டமாக பர்ணமித்து, வியாபித்து நிற்கும் நிலையில் தனது மக்களின் போராட்ட நிலைப்பாட்டை சிங்கள மக்களுக்குத்தெளிவுபடுத்தும் ஓர் தலைவனின் உரை இது. இப் போராட்டம் சிங்கள மக்களுக்கு எதிரானது அல்லவென்றும் மாறாக தமது தேசிய விடுதலைக்கான போராட்டம் என்றுமே அவர் குறிப்பிடுகிறார். ஊடகத்துறையை முற்றுமுழுதாக வர்த்தகமயமாக்கி அம்மணமான வேசித்தனம் செய்து புழைப்பு நடத்திய ஊடக முதலாளிகளும் ஊடகவியலாளர்களும் உண்மையில் ஊடகம் என்னும் முகமூடி அணிந்த ஈவிரக்கமற்ற வர்த்தகர்களே. இதுகாலவரை இவர்கள் செய்ததெல்லாம் சிங்கள சமூகத்தின் மத்தியில் தமிழர்கள் சிங்களவர்களின் எதிரிகள் என்றசிந்தனாவாதத்தை வளர்த்தெடுத்தது மாத்திரமே. விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகள் என்று முத்திரை குத்தியும், சிறிலங்கா இராணுவத்தினரைத் தேசத்தைக் காக்கும் வீரர்கள்என்றும் மாயத்தோற்றத்தை ஏற்படுத்தியது. இந்த ஊடகத்துறையின் கைங்கரியமே. தெற்கின் ஊடகத்துறையின் இந்த ஈனச்செயல் ஓர் கொடிய வைசூரி நோயாக பரவியுள்ளது. விடுதலைப் புலிகளின் 'வானவில்' இந்த வகையில் சிங்கள ஊடகத் துறைக்கு ஓர் சவாலாகவே அமைகிறது.

சிங்கள மக்கள் மத்தியில் பேரினவாத விதைகளை விதைக்கும் ஈனச்செயல்களை செய்த ஊடகவியலாளரும், முதலாளிகளும் ''வானவில்'' கண்டு நடுக்கம் கொண்டுள்ளனர். வானவில் இதழில் வந்த கட்டுரைகளையும், கடிதங்களையும், ஆசிரியர் தலையங்கத்தையும் தங்கள் பத்திரிகைகளில் மறுபிரசுரம் செய்வதன் மூலம்இவர்கள் தங்கள் ரத்தக்கறை படிந்த கரங்களைக் கழுவ முயன்றிருக்கிறார்கள் என்பதையும் வானவில்லைப் பிரசுரித்தவர்கள் இதை அறிவார்கள் என்பதையும் சொல்லித்தெரிய வேண்டியதில்லை. ''வானவில்'' கொண்டுவந்த செய்தி முழுவதுமே திரிபுவாத சிங்கள ஊடகவியலாளர்களுக்கு புலிகள்தரும்பதிலாக அமைந்துள்ளது.

சிங்கள மக்கள் மத்தியில் பேரினவாத விதைகளை விதைக்கும் ஈனச்செயல்களை செய்த ஊடகவியலாளரும், முதலாளிகளும் ''வானவில்'' கண்டு நடுக்கம் கொண்டுள்ளனர். வானவில் இதழில் வந்த கட்டுரைகளையும், கடிதங்களையும், ஆசிரியர் தலையங்கத்தையும் தங்கள் பத்திரிகைகளில் மறுபிரசுரம் செய்வதன் மூலம் இவர்கள் தங்கள் இரத்தக்கறை படிந்த கரங்களைக்கழுவ முயன்றிருக்கிறார்கள் என்பதையும் அந்த முயற்சியில் தோற்றுப் போய் சுயரூபம் தெரிய அம்மணமாய் நிற்கிறார்கள் என்பதையும் வானவில்லைப் பிரசுரித்தவர்கள் இதை அறிவார்கள் என்பதையும் சொல்லித்தெரிய வேண்டியதில்லை. ''வானவில்'' கொண்டு வந்த செய்தி முழுவதுமே திரிபுவாத சிங்கள ஊடகவியலாளர்களுக்கு புலிகள் தரும் பதிலாக அமைந்துள்ளது.

இரணைத்தீவுக் கடலில் உண்மையாக நடந்தது என்ன?என்ற தலைப்பில் வெளிவந்திருக்கும் பிரதான செய்தி மூலம், முப்படைகளின் ஒத்துழைப்புடன் ஆயுத வியாபாரம்செய்யும் தரகர்களின் செயற்பாடுகளைச் செய்திகளாக்கி வயிற்றுப் பிழைப்பு நடத்தும் பத்திரிகைக்காரர்களுக்கு வானவில் தக்கபதில் கொடுத்திருக்கிறது. மூன்றாம் பக்கத்தில் ''மௌனித்திருந்தவரின் மௌனக்குரல் '' என்ற தலைப்பில் ஒரு தொடராக ஆரம்பித்திருக்கும் முதற்பகுதிக் கடிதம் வானவில்லின் பிரதான கடிதமாய் அமைந்துள்ளது. அக்கடிதம் சிங்கள சமூகத்தை நேரடியாக அழைக்கிறது: அழைத்து இப்படிப் பேசுகிறது:

''எங்கள் அன்புற்குரிய சகோதர, சகோதரிகளே என உங்களை நாங்கள் விளிப்பது உங்களுக்கு ஒருவேளை ஆச்சரியத்தினைத் தரக்கூடும். பகமை, வெறுப்பு என்பன நிலவும் இரு இனங்களைச் சேர்ந்தவர்கள் நாம் என்கிற எண்ணவாக்கமே இதற்குக் காரணம்..... உண்மையிலேயே எம்மீது பெரும் துன்பங்களை விளைவித்த அரசின் குடிமக்கள் நீங்கள். இறைமை, பிரதேச ஒருமைப்பாடு என மயக்கம் தரும்சொற்றொடர்கள் பின்னே மறைந்து நின்று எம்மீது படுகொலைகளை, நிலப்பறிப்புக்களை நிகழ்த்திய முப்படைகளைச் சேர்ந்தோரைப்பெற்றவர் நீங்கள்,உற்றவர்களாக கொண்டவர்கள் நீங்கள். இவை கசப்பான உண்மைகள். ஆனால் இவற்றினை இன்று நாங்கள் கணக்கிலெடுக்கவில்லை''

இப்படி ஆரம்பிக்கும் இக் கடிதம் தன்னுள்ளே கொண்டிருப்பது முழுவதுமே சகோதரத்துவத்தை கூவியழைக்கும் உறவின் குரலாக அமைந்துள்ளது. காலம் காலமாக சிங்கள அரசுகளால் தமிழ் சமூகத்தின் மீது சுமத்தப்பட்ட துன்பச்சுமைகளைச் சொல்லி அழவழியின்றித் தவித்த மக்களின் குரலாய் இக்கடிதம் தீட்சண்ணியத்துடன்விரிகிறது. ஆத்திரம் கொப்பளிக்காது அன்புறவைக் கூவிநிற்கிறது.

காலம்காலமாக உங்கள் செவிகளில் விழாது தடுக்கப்பட்ட எமக்கான நீதியின் குரலை இப்போதாவது செவிமடுக்க நீங்கள் முன்வரவேண்டும், ஆயத்தமாகவேண்டும், எந்தவித கற்பிதம், கருத்துருவாக்கமுற்ற திறந்தமனதோடு ஏமது தரப்பின் வாதங்களைக் கேட்கவேண்டும்.காலங்காலமாக எம்மீது நிகழ்த்தப்பட்ட சட்டரீதியான ஒடுக்குமுறை, வதை,அவமதிப்பு, படுகொலை, பாலியல் வன்முறை இவையெல்லாவற்றினதும் விளைவாக எமது ஆன்மா வடிக்கும் குருதியை ஒற்றியெடுக்க, ஆறுதல்சொல்ல நீங்கள் முன்வரவேண்டும்'

அது மௌனித்திருந்த ஓர் மக்களின் மனச்சாட்சி எழுப்பிய குரல். 'வன்னியிலிருந்து ஓர் கடிதம்' என்ற தலைப்பில் வெளியாகியிருக்கும் பிறிதொரு கடிதமும் சிங்கள மக்களுடன் நேரில் பேசுகிறது. நெஞ்சைத்தொடும் பழைய நினைவலைகள் ஆற்றொழுக்காக நெளிந்தோடுகின்றன. இவற்றுடன் தமிழ் மக்களின் முக்கிய பிரச்சினைகள் செய்திக் கண்ணோட்டத்துடன் தொகுத்துத் தரப்பட்டிருக்கின்றன. பிறதமிழ் பத்திரிகைகளில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட கட்டுரைகளும் பிரசுரமாகியிருக்கின்றன. A-9என்ற தலைப்பில் வெளிவந்துள்ள உரையாடல் பழைய சிங்கள, தமிழ் நண்பர்களுக்கிடையே நடைபெறும் நினைவுமீட்டலும் , சோகப் பகிர்வுமாக மிக எளிய நடையில் அமைந்துள்ளது. இவையெல்லாவற்றிற்கும் மத்தியில் மிக முக்கியமான பகுதியாக அமைந்திருப்பது வானவில்லின் ஆசிரியர் தலையங்கம். ''சமாதானத்திற்காகத் துணியுங்கள்'' என்பது ஆசிரியர் தலையங்கத்தின் தலைப்பு.

சமாதான முயற்ச்சியில் ஏற்பட்டிருக்கும் மந்தவேக நிலைபற்றியும் சமாதானத்துக்கு எதிராகச் செயற்படும்இனவாத சக்திகள் பற்றியும் சுதந்திரமான ஓர் சமூகத்தை எப்பொழுது கட்டியெழுப்புவது என்பது பற்றியும் ஆசிரியர் தலையங்கத்தில் மிக ஆழமாக ஆராயப்பட்டிருக்கிறது. வானவில் உண்மையில் இன்றைய சமூகத்தின் எதிர்பார்ப்புக்களையும், தேவைகளையும் நிறைவு செய்யும் ஓர் வெளியீடு என்று குறிப்பிடும் அதேவேளை அதனாசிரியர் தலையங்கத்திலிருந்து ஒரு பகுதியைக் கீழே தந்து என் விமர்சனத்தை நிறைவு செய்கின்றேன்.

''வடக்கிலும், கிழக்கிலும் மக்களின் சமாதனத்திற்கான எதிர்பார்ப்பு இவ்வளவு தூரம் வெளிப்படுத்தப்பட்ட பின்பும் கூட, சமாதான முயற்சிகள் வேகம் பெறாமல் இருப்பது ஏன்? இங்குதான் விசுவாசமான அர்ப்பணிப்பும்,துணிச்சலும் தேவைப்படுகின்றன. இருபது வருடங்களாக யுத்தம் நடந்த தேசத்தில் சமாதானத்திற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவதற்குத்துணிவு அவசியமாகிறது. எல்லா இன மக்களும் கௌரவத்துடனும் சம அந்தஸ்துடனும் வாழும் ஓர் எதிர்காலத்தை உருவாக்குவதற்கு இந்தத் துணிவே அவசியமாகிறது. நாங்கள் அதற்கு எந்நேரமும் அர்ப்பணிப்புடன் செயற்படுவதற்குத் தயாராக உள்ளோம். சிங்கள மக்களுக்கு நாங்கள் விடுக்கும் திறந்த செய்தி இதுவே''

✻

- பேராசிரியர் சி.மௌனகுரு -



# தமிழர் மத்தியில் இசை வளர்த்ததும் வளர்க்க வேண்டியதும்

தமிழர் மத்தியில் வழங்கும் இசையினை 4 வகையாக வகுக்கலாம்.

01. செவ்விய இசை
02 நாட்டாரிசை
03 வெகுஜன இசை
04 மக்களிசை

செவ்விய இசைக்கு ஒரு வரலாறுஉண்டு. இவ்விசையைக் கர்நாடக இசை, தமிழிசை என அழைக்கும் மரபு எம் மத்தியில் உண்டு. கர்நாடக இசை , தமிழிசை சம்பந்தமாக ஏராளமான நூல்கள் தமிழிலும், ஆங்கிலத்திலும் வெளிவந்துள்ளன.

செவ்விய இசையை வளர்ப்பதற்கென எம்மத்தியில் ஒரு பிரிவினர் இருந்து வந்துள்ளனர். அரசாலும், பிரபுக்களாலும் கோயிலாலும், நிறுவனங்களாலும் இம்மரபு போஷிக்கப்பட்டதனால் இது வளர்க்கப்பட்டுள்ளதுடன் இவ்விசைமரபே தமிழர் இசைமரபாகக் கூறப்பட்டுள்ளது.

செவ்விய இசைக்குச் சமாந்தரமாக நாட்டாரிசையும் தமிழர் மத்தியில் இருந்துள்ளது. இவ்விசை மக்களின் அன்றாட [illegible]ழ்வுடன் பின்னிப் பி[illegible]ந்திருந்தமையால் இது அழி[illegible]ாமல் இருந்துவந்துள்ளது. எனி[illegible]ம் கால மாற்றத்திற்கு ஏற்ப ம[illegible]ற்றம்பெற்றும் வந்துள்ளது.

செவ்விய இசையும், நாட்டாரிசையும் ஒன்றிலிருந்து ஒன்று பெற்றும், கொடுத்தும் வளர்ந்து வந்துள்ளமையை இசை வரலாறு மூலம் அறிகிறோம். தமிழ் இசை வரலாறு எழுதியோர் நாட்டாரிசையை அதனுடன் இணைத்தாரில்லை.

19ம் நூற்றாண்டில் பார்ளி நாடக மரபின் வருகையுடன் வெகுஜன இசைமரபு தமிழர் மத்தியில் புகுகின்றது. கர்நாடக இந்துஸ்தானி இசைகளை பார்ளி நாடக மரபு மக்கள் மத்தியில் கொண்டு செல்கிறது. பின்னணிச் சினிமா (1930களில்) இவ் வெகுஜன இசையை வளர்க்கும் ஊடகமாயிற்று. அதன்பின் வானொலி,ரெலிவிஷன் என்பன வெகுஜன இசை வளரக் காரணிகளாயின.

வெகுஜனக் கலாச்சாரம் என்பது தொழில்நுட்ப உதவியுடன் செய்யப்படும் மாய்மாலம் என்பர். பணம் மீட்டும் பண்புடைய இவ் வெகுஜன கலாச்சாரம் மக்களை மயக்கத்தில் ஆழ்த்தக்கூடியது. இது செவ்விய கலாச்சாரத்தினதும் நாட்டுப்புற கலாச்சாரத்தினதும் வீரியத்தை நீர்த்துப் போக வைக்கும் தன்மையுடையது. 19ஆம் நூற்றாண்டில் எழுந்த இந்த வெகுஜன இசை(சினிமா இசை) செவ்விய இசையையும், நாட்டுப்புற இசையையும் மக்கள் மத்தியில் ஜனரஞ்சகப் படுத்தியதாயினும் அவற்றின் வீரியத்தை குறைத்து விட்டது. 20ம் நூற்றாண்டில் இவ் வெகுஜன இசை, பணம் பண்ணும் முதலாளிகளினால் திட்டமிட்டு வளர்க்கப்பட்டதை காண்கிறோம். சினிமாவில் 1930 களில் செவ்விய இசை G .இராமநாதன் போன்றோருக்கூடாகவும், 1950, 60 களில் கர்நாடக இசையை அடித்தளமாகக் கொண்ட மெல்லிசை M.S.விஸ்வநாதன் போன்றோருக்கூடாகவும், 1970 களில் கிராமிய இசை பாரதிராஜா போன்றோருக்கூடாகவும், 1980 களில் சிறப்பாக மேநாட்டிசையும் குறிப்பாக கிராமிய, கர்நாடக இசைகள் ரகுமானுக்கூடாகவும் சினிமாவுக்கூடாக வெகுஜன இசையாக பரிணாமிப்பதை காண்கிறோம். இவ்விசை மரபே இன்று பட்டி தொட்டிகளிலெல்லாம் கேட்கப்படுகிறது. இச்சினிமா இசையில் செவ்விய, கிராமிய இசைகள் ஜனரஞ்சகப் படுத்தப்பட்டன. மக்களை மயக்கத்திலாழ்த்திய இவ்விசைப் போக்கிற்கு மாற்றாக எழுந்த இசைமரபே மக்களிசை மரபாகும்.

இவ்விசை மரபு, மக்கள் நலநாட்டம் கொண்ட மக்களியக்கங்களாலும் தனிப்பட்டோராலும் மேற்கொள்ளப்பட்டன. மக்களின் பிரச்சினைகளை மக்களுக்குணர்த்த செவ்விய இசை, நாட்டாரிசை கலந்த

ஒருவித இசை மரபினை இவ்விசையாளர் பயன்படுத்தினர். ஸ்ரீனிவாசன் இதன் முன்னோடியாவார். பாடகர்களின் குரல் வளத்தை மாத்திரமே அடிப்படையாகக் கொண்ட கொயர் இசைக்கு அவர் முக்கியத்துவமளித்தார்.

நிறுவனங்களுக்குள்ளும், கோயில்களுக்குள்ளும் மேலோங்கிகளுக்குள்ளும் (Elitc) ஒடுங்கிக்கொண்ட கர்நாடக சங்கீதத்துக்கும் மக்களை மயக்கத்திலாழ்த்தியடப் பாத்தனமான சினிமா சங்கீதத்திற்கும் மாற்றாகத் தோன்றிய இம் மக்கள் சங்கீதம், மக்கள் கலை இலக்கிய மன்றம், தமிழிசை இயக்கம், நக்ஸல்பாரிக் குழுவினர் போன்ற நிறுவனங்களாலும் குணசேகரன், தேவேந்திரன் போன்றோராலும் முன்னெடுக்கப் படுகின்றன.

தமிழ் நாட்டு அரசியல், சாதிப் பிரச்சினை, பெண்[illegible]ரிமை, சுற்றுச் சூழல் பாதுகாப்பு என்பன இப்பாடல்களின் கருவாக அமைந்துள்ளன.

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் கரிசல்காட்டுப் பாடல்கள், தன்னானே குழுவினரின் நக்ஸல்பாரி இயக்கம் சார்ந்தோர் வெளியிட்ட சமூக அரசியல் இயக்கப் பாடல்கள் தலித்துகளின் கஷ்டங்களை விளக்கும் குணசேகரனின் பாடல்கள் என்பன ஒலி நாடா வடிவில் இன்று பரவலாக விற்பனையாகின்றன. இவை கணிசமான அளவு மக்களைக் கவர்ந்துள்ளதுடன் மக்களைச் சிந்திக்கவும் வைக்கின்றன.

ஈழத்துத் தமிழர் மத்தியிலும் இந்த நான்கு வகை இசை மரபுகளையும் காண்கிறோம். தமிழகத் தொடர்பு காரணமாக

ஈழத்துத் தமிழர் மத்தியில் பண்டுதொட்டு இன்று வரை ஒரு செவ்விய இசை மரபு இருந்து வந்துள்ளது. அரசவை, பெரும் கோயில்களை மையமாகக் கொண்டு வாழ்ந்த இசை வேலாளர் இம் மரபை வளர்த்துள்ளனர். இம்மரபு இன்று கல்வி நிறுவனங்களினால் வளர்க்கப்படுகின்றது.

நாட்டாரிசையை வளர்க்கும் முயற்சிகள் 1960 களில் ஈழத்தமிழர் மத்தியில் உண்டாயின. ஆனால் அவை திட்டமிட்டு வளர்க்கப்படவில்லை.

வெகுஜன இசை ஈழத்துக்கு என்று இல்லாவிடினும் தமிழ் நாட்டு வெகுஜ்ன இசையே எமது வெகுஜன இசையாயிற்று. இன்று இவ்விசை மரபினை தமிழ்நாட்டிலிருந்து இங்கு இறக்குமதியாகும் சினிமாவும், தமிழகச் சினிமாக் கலைஞர்களும், எமது நாட்டு வானொலியும், தொலைக்காட்சி நிறுவனங்களும் பெருமளவில் பரவலாக்கி வளர்த்து வருகின்றன. இவற்றிற்கு மாற்றீடாக எழுந்த மக்களிசை மரபொன்றும் எம்மத்தியில் உண்டு.

1970 களில் எம்மத்தியில் எழுந்த மெல்லிசையில் மக்களிசை மரபின் ஊற்றுக்களைக் காணமுடியும். நாட்டுப் பற்று, மக்கள் பிரச்சினைகள் என்பன அவற்றில் பேசப்பட்டன. தமிழ் தேசிய இயக்கங்கள் தம் கருத்துப் பிரசாரத்திற்கு ஒரு வலிமை வாய்ந்த ஆயுதமாக மக்களிசையைப் பயன்படுத்துகின்றன. கர்நாடக இசை, நாட்டாரிசை கலந்து உருவான இவ்விசை மூலம், பெண்கள் பிரச்சினை (சூர்யா பெண்கள் அபிவிருத்தி நிலைய இசை ஒலி நாடா) போன்றனவும் கூறப்படுகின்றன.

ஏற்கனவே வளர்ந்திருந்த செவ்விய இசை மரபையும், குணாம்சமுள்ள நாட்டாரிசை மரபையும் வெகுஜன இசை அழித்தொழிக்கும் இக்காலகட்டத்தில் இதற்கு மாற்றாக அலைகடலில் ஒரு துரும்பெனக் காட்சி தருவது இம் மக்களிசை மரபேயாகும்.

உலகெங்கணும் அடக்கப்படும் மக்களிடம் இம் மக்களிசை மரபைக் காணுகிறோம். அமெரிக்காவில் மக்கள் பிரச்சினைகளையும் வியட்நாம் எதிர்ப்புப் பிரச்சாரங்களையும் பொப்பில் பாடிய பொட்டிலன். ஜோன் பயஸ் என்போர் வளர்த்த மக்களிசை லத்தீன் அமெரிக்க நாடுகளின் மக்களிசை 3ம் உலக நாடுகளின் மக்களிசை இயக்கம் என்பன மக்களிசை இயக்கம் என்பது உலகம் தழுவியது என்பதற்கு உதாரணங்களாகும்.

தமிழர் இதுவரை வளர்த்தவை செவ்விய இசையும், வெகுஜன இசையுமே. அடக்கப்படும் இனங்களோடும், நாடுகளோடும், மக்களோடும் தமிழ் நாட்டு மக்களிசையினரும் இலங்கை நாட்டு மக்களிசையினரும், ஈழத்தமிழ் மக்களிசையினரும் இணைந்து இன்று வளர்க்க வேண்டியது மாற்று இசையான மக்களிசையே. இப்பணி அங்கொன்று இங்கொன்றாக நடைபெறினும் திட்டமிட்டு ஒருங்கிணைந்து தம் ஆற்றல்களைக் குவிமையப் படுத்திச் செயலாற்றுவதன் மூலமே இம் மக்களிசை மரபு வளர்ச்சியைச் சாதிக்க முடியும்.

பூகோள மயமாக்கலும், திறந்த பொருளாதாரக் கொள்கையும் நாடுகளின் இனங்களின் தனித்துவங்களை அழித்து உலக கலாசாரத்தினுள் அதிலும் வெகுஜன கலாசாரத்தினுள் அனைவரையும் அடக்கும் காலகட்டம் இது.

## கவிஞன்



**கலீல் ஷிப்ரான்**

அவன்
இக்கால வருங்காலங்களை
இணைப்பவன்
அவன்
தாகவிடாயுற்ற அனைவரும் அருந்துகின்ற
தூய்மையான ஊற்று
அவன்
பசியுற்ற உள்ளங்கள் ஏங்கும் அழகெனும் ஆற்றுப்பாய்ச்சலால் வளர்மரங்கள்
தரும்
புசிக்கின்ற கனி
அவன்
அடிவானில் தோன்றி மேல் நோக்கி வளர்ந்து வான்முகத்திற் திரையிட்டுப் பின் பறந்து கீழ்நோக்கி வாழ்க்கையின் சோலையில் ஒளியின் கதிர்களை ஊடுருவச் செலுத்தி மலர்களைத் திறக்கச் செய்கின்ற வெண்முகில்
அவன்
இறைவி தன் நற்போதனைகளைப் போதிக்க அனுப்பி வைத்த நல்தூதன்
அவன்
இரவதனால் வெற்றி காணவும், காற்றினால் அணைக்க முடியாததுமான நெய்யினால் நிறைக்கப்பட்டு இசைவாணியால் ஏற்றப்பட்ட சுடர்விளக்கு
அவன்
அன்பையும் எளிமையையும் பூண்டு தன் உளத்தூண்டுதலுக்காய் இரவின் அமைதியான இயற்கையின் மடிமீது அமர்ந்து சக்தியின் இறங்கலுக்காகக் காத்திருக்கும் தனியன்
அவன்
மனுக்குலத்தின் ஊட்டத்திற்காய் அன்பாம் சமவெளியில் தனது உள்ளத்து விதைகளை விதைக்க, அவர்கள் அறுவடை செய்ய வழி செய்த விதைப்பாளன்
இக்கவிஞன்
வாழ்ந்த இக்காலத்தே மதிக்காத மானுடத்திடம் மண்ணுலகில் விடைபெற்றுத் தன் சுய இடமான சொர்க்கத்திற் சேர்ந்த பின்னரே அங்கீகரிக்கப்படுபவன்.
இக்கவிஞன்
மனுக்குலத்தின் புன்னகையன்றி மற்றெதையும் நாடாதவன்
இக்கவிஞன்
உணர்த்திடும் எழுச்சிமிக்க உயிர்த்துடிப்பு, வான்வெளியின் மேலெழுந்து நிரப்பிடினும், மானுடமே அத்தகைய ஜோதியினை உணர்வதற்கு மறுத்திருக்கும்
எத்தனை காலம்வரை
துயின்றிருப்பார் இம்மக்கள்?
எத்தனை காலம்வரை
இவர்கள், தாம் காலத்தைப் பயன்படுத்தி உயர்நிலை அடைந்தோர்தமை தொடர்ந்து புகழ்பாடுவதேன்?
எத்தனை காலம்வரை
இம்மக்கள் கவின்மிக்க உணர்வுகளையும், அமைதி அளிக்கும் சின்னத்தையும் உணர்த்துவோரை உதாசீனம் செய்திருப்பார்?
எத்தனை காலம்வரை
மானுடரும், இறந்தோர்தம் புகழ்பாடுவதை விடுத்து, வறுமையின் சூழலில் வாழ்ந்து, தம்மையே மெழுகுவர்த்தியாக ஆக்கிக் கொண்டு உருகித் தேய்ந்து, பாமரர்கள் கடந்து செல்ல ஒளிகாட்டும் இந்த வழிகாட்டிகளை போற்றாது இருந்திடுவர்.
கவிஞனே!
நீ இந்த வாழ்வின் உயிர்த்துடிப்பு; காலங்களின் கொடுமைகளை வெற்றி கண்டவன்.
கவிஞனே!
நீ என்றோ ஒரு நாள் இவ்வுள்ளங்களை ஆட்சி புரிவாய்; எனவே, உனது ஆட்சியின் பரப்பும் எல்லையற்றது.
கவிஞனே!
நீ உன் முட்கள் நிறைந்த மகுடத்தை ஆய்ந்து பார். அதனுள்ளே உன் புகழார மொட்டுக்கள் ஒளிந்துள்ளன.

தமிழாக்கம்: கே.கணேஷ்

செயல் மறக்கப்படலாம் ஆனால் அதன் விளைவு தொடர்கிறது
ஒவிட்




# இயல்புநிலை திரும்பாதவர்கள்

ஆதிலட்சுமி சிவகுமார்

நாளைக்குப் பௌர்ணமிதினம். நிலவு பளபளத்துக்கொண்டிருந்தது. சினிமாப்பாடல் ஒன்றை முணுமுணுத்தபடி நான் சைக்கிளை மிதித்துக் கொண்டிருந்தேன்.

எங்கேயோ இரவுச் செய்தி வானொலியில் கேட்டுக் கொண்டிருந்தது. தூரத்தே சிறியனின் சுவையகத்தில் மின்னொளி தெருவரை பளிச்சிட்டுக் கொண்டிருந்தது.

முன்பென்றால் இந்த நேரம் தெருவில் யாருமே நடமாட முடியாது. வீடுகளில் மின்னொளி பாவிக்க முடியாது. ஆயுத்துடன் வீதிகளில் இராணுவத்தினர் நடமாடுவார்கள். தெருவைத் தேய்த்துக்கொண்டு இராணுவ வாகனங்கள் மட்டும் ஓடும். என்னை விலத்திக்கொண்டு மோட்டார் சைக்கிள்கள் பறக்கின்றன. எதிரே ஒளியை உமிழ்ந்துகொண்டு ஏதோ ஒரு வாகனம். இராணுவ சென்றிகள் கூட இப்போது இல்லை.

நான் வீட்டுக்குத் திரும்ப ஒரு நிமிடம் தாமதித்தாலும் முன்பு அம்மா பதறிப்போவாள். இப்படித்தான் முன்பு ஒருதடவை ஏதோ அவசரத்தில் அடையாள அட்டையை வீட்டில் விட்டுவிட்டுப் போய்விட்டேன். சந்தியில் இருந்த சென்றிப் பொயின்ரில்- இராணுவத்தினர் அடையாள அட்டையைக் கேட்டபோது நிலைமை பிசகியது.

உள்ளே அழைத்துப்போய், ஏராளமான கேள்விகள் கேட்டு, கன்னத்தில்இரண்டு போட்டு அனுப்பினார்கள். நிச்சயமாக என் கன்னத்தில் அறைந்தவனுக்கு என்னைவிட வயது குறைச்சலாகத்தான் இருக்கும். அக்கணம் ஆத்திரமும் அவமானமும் எழுந்தன. ஆயினும் இயலாமையுடன் வீடுவரத்தான் முடிந்தது.

எங்கள் வீட்டுக்கு அண்மையில் இருந்த இரு கடைகளும் திறந்திருந்தன. ஒன்று சின்னமணி அக்காவின் பலசரக்குக் கடை. மற்றையது பிரசாந்தின் வீடியோக்கடை.

பின்னேரம் நானும் தேவகாந்தனும் சிற்றுண்டிச் சாலையில் தேனீர் குடித்தபடி தற்போதைய நிலைமைகள் பற்றிக் கதைத்துக் கொண்டிருந்தோம்.

'மச்சான்... பாத்தியெடா... என்னமாதிரி இயல்புநிலை திரும்பியிட்டுதெண்டு....?'

வானத்தில் தெரிந்த நிலவு அவன். முகத்திலும் பளிச்சிட்டது.

'எதை வைச்சுக்கொண்டு அப்படிச் சொல்லுகிறாய் இப்ப...?'

கையில் இருந்த சிகரெட்டை ஒருதரம் உறுஞ்சினேன். சிகரெட் பிடிப்பது எங்கள் பரம்பரையிலேயே இல்லை. ஆனால், கடந்த இரண்டு வருடங்களாக அந்தப் பழக்கம் தவிர்க்க முடியாததாகி விட்டது. அதுவும் இங்கே சிற்றுண்டிச் சாலையில் மட்டும்தான்.

'இரவில் சனம் திரியுது... வாகனங்கள் ஓடுது... கடையள் திறந்திருக்கு... சென்றிப் பொயின்ரில ஆமி நிக்கிறேல்ல... நிண்டாலும் ஐ.சி கேக்கிறேல்லை...'

நான் புன்னகைத்தேன்.

'ஏன் நான் சொல்லுறது பொய்யோ...?'

சின்னவிரல் நகத்தைக் கடித்தபடி அவனைப் பார்த்தேன்....

'சுத்திவளைப்பில்லை... விசாரணை இல்லை... கெடுபிடியள் குறைவுதானே... இயல்பா இருக்கிறம்.. நீ என்ன சொல்லுறாய்...?'

நான் எதுவும் சொல்ல விரும்பாதவனாய் எழுந்தேன். அவ்விடத்திலேயே பிரிந்தோம்.

கடந்த காலத்தின் சில வடுக்களை அசைபோட்டபடி போய்க்கொண்டிருந்தேன். வீட்டினுள் மின் விளக்கு எரிவது தெரிந்தது. அம்மாவும், தம்பியும்,தங்கச்சியும் தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருப்பார்கள். அம்மா இப்போது நன்றாக சினிமாப்படம் பார்ப்பா.

எங்கள் வீட்டுக்கு எதிர் வீடு பரஞ்சோதி அக்காவினுடையது. ஒன்பது மணிக்குப் பிறகு அங்கே சனம் நிக்கும். அவ கொமினிக்கேசன் வைத்திருக்கிறா. வெளிநாட்டுக் கோல்கள் இரவில்தான் வரும். அதனால் -அக்கம் பக்கத்துப்பெண்கள் இரவில் நடுச்சாமம் கழியும் வரை பரஞ்சோதி அக்காவீட்டில் கூடுவது வழக்கமாகியிருக்கிறது.

இராணுவத்தினரும் சில வேளைகளில் தென்னிலங்கையிலுள்ள தம் குடும்பத்தினருக்கு கோல் எடுக்கப் பரஞ்சோதியக்கா வீட்டுக்கு வருவார்கள். ரெலிபோனில் கதைத்துவிட்டு, கூடிநிற்கிற பெண்களுடன் பகிடிவிட்டுச் சிரித்துவிட்டுப் போவர்களாம்.

இப்படி ஒருநாள் ரெலிபோன் கதைக்கவென்று வந்த இரண்டு ஆமிக்காரர் கூறினார்களாம்.



'எங்களுக்குச் சண்டைபிடிக்க விருப்பமில்லை ஒற்றுமையா வாழத் தான் விருப்ப'மெண்டு...

'ஆருக்குத்தான் சண்டைபிடிக்க விருப்பம்... சண்டை வலிய வருகுது போராடுறம்...டே



வீட்டு வாசலில் யாரோ குந்திக் கொண்டிருப்பது தெரிந்தது. வழமையாக வீடு திரும்பும் நேரத்தைவிட இன்று சற்று அதிகமான நேரம்தான் கடந்துவிட்டது. ஏதாவது ஒரு காரணத்தைத் தேடிப்பிடித்து அம்மாவிடம் கூறமுயன்றபடி வாசலில் இறங்கினேன்.

கூர்ந்து பார்த்தபோது - இருளில் குந்தியிருந்தது அம்மாவல்ல! அது- அவன்.

அவனை எல்லோருக்கும் தெரியும். அவனுக்கு இருபது வயதிருக்கலாம். விலா எலும்புகள் வெளித்தெரிய.. அரும்பு மீசை தாடியுடன் ஊரெங்கும் உலாவுபவன்.

இரண்டு கைகளின் சுட்டு விரல்களும் அவனுடைய காதுத் துவாரங்களை அடைத்திருக்க அவன் நடப்பான்.

இப்போது அவனை எனக்கு அடையாளம் தெரிந்தது. அவன் எங்கள் மதிலோரமாய் காதுகளைப் பிடித்தபடியே பதுங்கியிருந்தான்.அவன் மனநிலை குழம்பியவன்.

அவனைப் பார்த்ததும் என்றுமில்லாதளவு துயரம் நெஞ்சுக்குள் பெருகியது.

எங்கள் ஊரைச் சேர்ந்தவன் தான். அவனுடைய தகப்பன் தச்சுவேலை செய்பவர். இந்திய இராணுவம் குண்டு வைத்துத் தகர்த்த எங்கள் வீட்டின் கூரை வேலையை அவர்தான் மீண்டும்செய்து தந்தவர். அவருடன் சிறு பொடியனாய் -எடுபிடி யாய் வந்ததைப் பார்த்தேன்.

பாடசாலையில் எங்கள் தம்பியின் வகுப்பில்தான் படித்துக் கொண்டிருந்தான்.

தொண்ணூற்றி ஐந்தில் யாழ்ப்பாணம் முழுவதும் பலாலியிலிருந்து ஏவப்பட்ட செல்கள் விழுந்து வெடித்துக் கொண்டிருந்த நேரம்.

அவனுடைய வீட்டு முற்றத்திலும் செல்ஒன்று விழுந்து வெடித்தது.தாயும், தங்கையும், அவ்விடத்திலேயே சிதறிச் செத்துவிட, இவனும்இவனுடைய இரண்டு தம்பிகளும், அப்பாவும் மட்டும் பலத்த காயங்களுடன் தப்பினார்கள். தகப்பனுக்கு காலொன்று துடையளவில் துண்டிக்கப்பட்டுவிட, இவன் உடற்காயங்கள் மாறியும் மனநிலை குழும்பிய நிலையில்!

இவனைக்கூட இங்கிருக்கும் இராணுவத்தினர் விட்டு வைக்கவில்லை. இரவில் நடமாடினான் என்று குற்றம் சாட்டி, பிடித்துக்கொண்டுபோய் அடித்துத் துன்புறுத்தியபின் விடுவித்தனர்.

ஒரு இடத்தில் ஐந்து நிமிடங்கள் கூட இவனால் நிம்மதியாக இருக்க முடியாது. எறிகணை இரையும் சத்தம் எப்பொழுதும் இவனுக்குக் கேட்டுக் கொண்டிருக்கும் போல. யாராவது உணவு கொடுத்தால் கூட அதை அள்ளிச் சாப்பிடுவதற்கு கைகளை எடுக்கமாட்டான். காதுகளைப் பொத்தியபடியே குனிந்து, நாய் சாப்பிடுவதுபோல வாயால் கௌவிச் சாப்பிடுவான். சாப்பிட்ட குறையில், காதுகளைக் கூர்மைப்படுத்தி எதையோ கிரகிப்பவன்போலத் தோற்றம் காட்டிவிட்டு ஓடிவிடுவான்.

நிலவு ஒளியில் நான் அவனைப் பார்த்தேன்.

நான் வந்ததுகூடத் தெரியாமல் சுவர் அருகே குந்தியிருந்தான்.

'சாப்பிட்டியா...?'

'..................'

'சாப்பாடு வேணுமா...?'

'................'

அவன் இந்த உலகில் இல்லாதவனாய் தெரிந்தான்.

நான் கேற்றைத் திறந்துகொண்டு உள்ளே போனேன். மனது மிகவும் சோர்ந்து போயிருந்தது. அம்மா குசினி லைற்றைப் போட்டாள்.

'எனக்குச் சாப்பாடு வேண்டாமம்மா...'

'ஏன் தம்பி... நல்ல இடியப்பமும் பால்சொதியும் கிடக்கு... கொஞ்சமாச் சாப்பிடன்....'

'எனக்குப் பசிக்கேல்லை...'

உடைகளை மாற்றிக்கொண்டு படுக்கையில் சாய்ந்தேன். வீதியில் மோட்டார் சைக்கிள் ஒன்று வேகமாய் போவது கேட்டது. யாரோ சினிமாப்பாடல் ஒன்றைப் பெரிதாகப் படித்தப் படி சயிக்கிளில் போய்க் கொண்டிருப்பதும் கேட்டது.

சிறியனின் சிற்றுண்டிச்சாலையில் கொத்துரொட்டி அடிக்கும்சத்தம் துல்லியமாகக் கேட்டது. அதையும் மீறி எங்கோ வெகு தொலைவில் நாயொன்று குரைத்தது. பெரும்பாலான நாய்களுக்கு இப்போது ஓய்வு. இல்லையென்றால் இரவுகள் அவற்றின் கச்சேரியாகத்தான் இருக்கும்.

அம்மாவும் ஒரு நாய்வைத்திருந்தாள். லக்கி என்று அதற்குச் செல்லப்பெயர். அதுவும் இப்போது எங்காவது மூலைக்குள் வாலைச் சுருட்டிக்கொண்டு இயல்பாகத் தூங்குமென நினைத்துக் கொண்டேன்.

இயல்பு என்றதும்.... தேவகாந்தன் சொன்னவைகள் நினைவில் வந்தன.... கூடவே காதுகளைப் பொத்திக்கொண்டு திரியும் அவனும் நினைவுக்கு வந்தான்...

'இயல்புநிலை திரும்பலாம்... ஆனால் இவனும் இவனைப் போன்றவர்களும் இயல்பு நிலை திரும்புவார்களா...?' என்கின்ற ஏக்கம் என்னுள் வியாபித்தது...

எத்தனை எத்தனை இயல்புகள் நிரந்தர இழப்புக்களாகிவிட்டன என்று எண்ணிப் பார்த்தேன்? ஏழுவருட கால நீட்சியில், படு கொலை செய்யப்பட்ட ஆத்மாக்களும், இழக்கப்பட்ட உறுப்புகளும், சிந்தப்பட்ட குருதியும், அழிக்கப்பட்ட சொத்துக்களும்... ஆறாமல் என்றுமே சுமந்து நிற்கும் ரணங்களும் ஒரு போதுமே இயல்பு நிலைக்கு மீண்டும் வரப்போவதில்லை என்பதை நான் உணர்ந்தவனாகினேன். ✲




# நூல் நோக்கு

நூலின் பெயர்:
குழந்தைப் பாடல்கள் (தொகுதி 1, தொகுதி 2)
எழுதியவர் : தமிழ்மணி ஜெயந்தி ஜீவா
வெளியீடு : ஜெயந்தி பதிப்பகம்

குழந்தைகளின் உலகம் கனவுகளாலானது. அவர்கள் ஒவ்வொரு கனவையும் கலைத்துக் கலைத்துப் புதிய கனவுகளைக் காண்பார்கள். இவர்களது செயலில் தெரிகிற வேகமும் துடிதுடிப்பும் ஒரு வண்ணத்துப் பூச்சியின் செயலை ஒத்திருக்கும். குறிப்பிட்ட ஒரு காலத்தில் பாடவும், ஓடவும் எதன்மேலும் தாவி ஏறவும் மணல்வீடு கட்டவும் அதனை அழிக்கவும் செய்வார்கள். பொதுவாக அவர்களது கனவை அவர்களே கலைத்து இன்னொன்றைக் கட்டுவார்கள்.

"குழந்தைகள் எண்ணற்ற கேள்விகளுடன் தான் உலா வருவர். இந்த உலகத்தின் மீது அளவற்ற சுவாரசிமும் வியப்பும் அவர்களை அவ்வாறு கேட்க வைக்கிறது. அவர்களது சூழலில் உள்ள மனிதர்களிடம் மட்டுமன்றி, கதைகளில் வருகின்ற கற்பனை உலகத்திடமும் அதன் பாத்திரங்களிடத்தும் கூட அளவற்ற நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். உண்மையில் அவர்களது நேசங்களில் நோக்கங்களோ ,பாவனைகளோ பதுங்கியிருப்பதில்லை' என்று படைப்பாளி சல்மா கூறுவது போல் "தனது அழகையும் வசீகரத்தையும் இழந்து வரும் உலகில் மிச்சமிருக்கும் கவர்ச்சி குழந்தைகள்தான்"

உண்மையில் இன்றைய நவீன யுகத்தின் குழந்தைகள் அதீத விஞ்ஞான வளர்ச்சியினாலும் அதன் தாக்கங்களினாலும் (தொலைக்காட்சியில் வரும் வன்முறை சார்ந்த படைப்புகள்) குழந்தைகள் அவர்களின் தன்மையில் இருந்து வெளியேற்றப்படுகிறார்கள். குழந்தைகளை நாங்கள் சமுகப் பொறுப்புணர்வோடும் அதிகளவான மனித நேயத்தோடும் அணுகவேண்டும் என்பதற்கு ஆதாரமாக எங்கிருந்தாவது ஒருசில முயற்சிகள் நடந்தேறுகின்றன. அந்தவகையில் ஈழத்தவரும், தற்போதுசுவிஸ் நாட்டில் வசிப்பவருமான கவிஞர் ஜெயந்தி ஜீவாவின் இரண்டு குழந்தைப் பாடல் தொகுதிகளின் வரவு மிகவும் முக்கியமானது. புலம்பெயர் இலக்கியமாக வந்துள்ள இந்நூல் அதற்கான அடையாளங்களைப் பல இடங்களிலும் சுவடு பதித்துள்ளது. உண்மையைச் சொல்லப் போனால் தனது ஆசிரியத் தேவைக்காக எழுதப்பெற்ற பாடல்களை தொகுத்திருப்பதாகவே நான் கருதுகின்றேன். உண்மையில் புலம் பெயர் நாடுகளில் பிறந்து வளர்கின்ற குழந்தைகளுக்கு அந்த மண்ணும், அதன் சூழலுமே தெரியும். அவர்களுடைய சூழல் அதுவாகத்தான் இருக்கிறது. அக்குழந்தைகளு க்கு இந்தியக் கவிஞர்களின் புத்தகங்கள் ஒரு மாற்றுச் சூழலையே அறிமுகம் செய்யும். பொருந்தாத புனைவாக அது மாறிவிடும் சாத்தியமே அதிகம். இந்த நிலையில் தான் அக் குழந்தைகளுக்கு அச்சூழக்கு மிகவும் பொருந்துவதான பாடல்களை ஜெயந்தி ஜீவா பாடியிருக்கிறார்.

செய்திவாக்கில் அம்மா சொல்லுகிற தமிழீழம்,பாட்டி கதைகளில் வருகிற புதிர் மண்டிய, சுவாரசியமான ரசனை உண்டாகிற கதையாக அவர்களுக்கு இருக்கிறது. அச்சூழ்நிலையை ஜெயந்தி ஜீவா நன்றாக இத்தொகுதிகள் எங்கணும் பாடியிருக்கிறார்.இந்த இரண்டு தொகுதிகளிலும் 72 பாடல்கள் தொகுக்கப்பட்டிருக்கின்றன. முதலாவது தொகுதியில் 37 பாடல்கள் இருக்கின்றன. இப்பாடல்கள் ஓசை நயத்தைக் குறைந்தளவுக் கென்றாலும் அவாவி நிற்பது சந்தோசமான விடயம்தான். உண்மையில் குழந்தைப் பாடல்களில்தான் ஆக்கமும் ஓசை நயமும் கவனம் பெற வேண்டும். ஏனெனில் குழந்தைகள் கடினமான சொற்களையோ ,சிக்கலான, கரடுமுரடான பாடல்களையோ மனங்கொள்ளமாட்டார்கள்.

**-முல்லைக்கமல்-**

இதை கவனிக்காது செய்யப்படும் பாடல்கள் குழந்தைகளை வன்முறை சார்ந்து அணுகும் செயலாகவே கொள்ளமுடியும்.

ஜெயந்தி ஜீவாவின் தொகுப்புகளில் சிறந்த பாடல்களை நாம் காணலாம்.

குட்டிக் குரங்கே, குட்டிக் குரங்கே, குழப்படி செய்யாதே
வாலைத் தூக்கி மரத்தில் தாவி பாசாங்கு பண்ணாதே ........

எனவரும் பாடலும், ஆமையும் சிறுவனும், பொம்மைகள், யானைகடிதம், பனிமனிதன் விளையாட்டு என்கிற தலைப்புகளில் வரும் பாடல்கள் மிகக் கச்சிதமாகச் செய்யப்பட்டவையே.

முதலாவது தொகுப்பின் பலவீனமாக குறைந்தது ஐந்து படல்களைக் குறிப்பிட முடியும். நாட்கள் ஒற்றுமை கல்வி போன்ற பாடல்களை தொகுப்பிலிருந்து தவிர்த்திருக்கலாம் இப்பாடல்கள்தான் முதலாவது தொகுதிக்கு அணிந்துரை வழங்கிய 'கலையார்வன்' கூறும் 'புதுக்கவிதை அரசோச்சுவதைக் காணக் கூடியதாக இருக்கிறது' என்ற கூற்றுக்கு ஆதாரமாக அமைந்திருக்கின் றன. (சில பாடல்களில் முழுமைகுன்றியிருப்பது ஓசை முறிவும் கூட அக்கூற்றுக்கு அரண் செய்கின்றன) இரண்டாவது தொகுதியின் வடிவமைப்பும் எழுத்துகளும் ரசனையாக இருக்கின்றன. குழந்தைகளை மட்டுமன்றி பெரியவர்களையும் குழந்தையாக்கும் (மனநிலை சார்ந்தது) நன்மைவாய்ந்த பாடல்களாக இவை அமைகின்றன.'நத்தார் தாத்தா' என்ற பாடல்

நத்தார் தாத்தா வாருங்கள்
நலம்பலவுரைக்க வாருங்கள்
ஈழம்சென்று திரும்ப வேண்டும்
இனிதாய் ஒருமுறை வாருங்கள்

என ஈழத்துக்குப் போகத்துடிக்கிற குழந்தை பாடும் பாடலாக தூதுப் பாடலாக அமைகிறது. அதன் தொடர்ச்சியாக

எங்கள் மண்ணில் போர்க் கோலம்
சிறுவர்கள் எல்லாம் பசிக் கோலம்
கொஞ்சமாய் உணவு தந்திடுவோம்
கொண்டு சென்று கொடுப்பீரோ.

அன்னையை (த்) தந்தையை (த்) தொலைத்தவர்கள் ஆநாதையாய்
ஏங்கித் தவிக்கின்றார்கள் ....
பட்டிகள் போல முகாமிலே பள்ளி இன்றித் தவிக்கிறார்கள்.

இப்பாடல் ஈழத்தின் குழந்தைகளை நினைத்து புலம்பெயர்ந்த நாட்டில்வாழும் ஈழக்குழந்தை உருகிப்பாடுவதாக அமைகிறது. இப்பாடலிலும் சில இடங்களில் ஓசை முறிகிறது 'தவிக்கின்றார்கள்' என்பது 'தவிக்கிறார்' என வந்திருந் தாலே போதுமானது

இரண்டாவது தொகுதியில் சின்னக் குழந்தையே, ஆராரோ கண்ணே, பூனையும் எலியும் , காற்று, வண்டுகளுக்கு வெண்பனியே .... வெண்பனியே... எனும் பாடல்கள் சிறப்பானவை.

பொதுவாகவே மனதுக்கு இனிமை செழிக்கப்பாடுகிற இக்கவிஞர் அதிகம் குழந்தைகளுக்குப் புரியக்கூடிய சொற்களைக்கொண்டு பாடியிருப்பதும் , ஈழத்துச் சூழலைக் காட்சிப் படுத்தியதும் தொகுப்பின் அரசியலும் அதன் மனித நேயமும், குழந்தைகளை அணுகும் விதமும் பாராட்டப்பட வேண்டும். இத்தொகுப்புகளின் மறுபதிப்புகள் தமிழீழக் குழந்தைகளுக்கும் கிடைக்க வேண்டும். ✧



## துரோகத்தின் பரிசு

பொன் . காந்தன்

இது கால வரையிலும் நீ
நிர்வாணத்தையே உடுத்தியிருந்தாய்
உன் செயல் ஒவ்வொன்றிலும்
நீ உன்னையே
களைந்து கொண்டிருந்தாய்
இப்போது
நீ வருடிய பாதங்கள்
உன்னை உதைக்கிறது
ஜீரணிக்க முடியாத பாதாளத்துள்
ஒன்பதாவது திசையும்
உன்மீது
கேலி பொழிகிறது
காதை பொத்திக்கொண்டு
நீ ஓடிவந்து
ஈன்ற மடியில்
முகம் புதைக்க நினைத்தாலும் முடியாதே!
மடிக்கு தீவைத்த
மகா பாவம்
உனக்குரியதாச்சே
எங்கள் காவலரண்களில்
அடுக்கப்பட்ட
மரக்குத்திகளுக்கும்
கிரீடம் கொடுக்க நாம் தயார்
நீ திரும்பத் திரும்ப
உன்னையே எடுத்து
உடுத்திக்கொள்ளவே தகுதி

✲ ✲ ✲



## என் புன்னகையும் உனது மலரும்

என் மீது மீண்டும்மலர்களைத் தூவுகிறாய்
நீயும் பிறரும்
என் உதடுகளில்
என்னை நான் மறந்தே உதிரும்
ஒரு புன்னகையை எதிர்பார்க்கக் கூடும்
ஆனாலும்
'என்னை மறந்தே நான் உதிரும்
என் உண்மைப் புன்னகை'
வந்துபோன
வசந்தத்திற்குரிய காலங்களில்
நீ தூவிய மலர்களின் ?
பாறைகளின் கீழ் நசியுற
புன்னகையின் வதை ,குமுறலில்
மலர்ப்பாறைகள்
பெருவெடிப்புற
அதனூடே
கொதிகுழம்புகள் பரப்பி
உன் கைகள் தறித்து
உன் கண்களைக் குருடாக்கி
என் புன்னகை ஒரு சூரியனாய்
கிளம்பத் தயார் நிற்க!
இதுவும் வசந்தத்திற்குரிய காலம்
அதன் இலக்கணம்
'மலர்களால் புன்னகையை அழைத்தல'.
புன்னகைபற்றியதும்
மலர்கள் பற்றியதுமான
ஒரு தெளிந்த நதி
உன்னிடம் இருக்குமானால் -மீண்டும்
நீ தூவும் மலர்கள்
பாறைபடாதது எனின்
குருடாக்கப்படாத உனது கண்களால் என்
அழகிய,புன்னகையைப் பார்க்கமுடியும்-மலர்தூவும்
உன்கரங்களை நான் வருடி மகிழவும் முடியும்.




# தலைதப்பியது



பேரரசர் அக்பருக்கு கிளி ஒன்றை வெகு மதியாக அளித்தார் துறவி ஒருவர். அது மற்ற கிளிகளைவிட அபூர்வமான கிளியாக இருந்ததால் அக்பர் அதனை வெகுவாக விரும்பினார். எனவே அதற்காகத் தங்கக் கூண்டு ஒன்றைத் தருவித்து அதில் அதனைப் போட்டு தன் நம்பிக்கைக்குரிய பணியாளன் ஒருவனிடம் ஒப்படைத்தார்

அப்போது,'கிளி,பத்திரம்!கவனமாகப் பார்த்துக்கொள்!கிளிக்கு ஏதாவது ஆனால் உன் தலை உன் உடலில் இருக்காது, என்று எச்சரித்து அனுப்பினார்.

பணியாளன் தன் தலைக்கு விலையாக அமைந்த கிளியை மிக மிக கவனமாகப் பார்த்துக்கொண்டான். வேளை தவறாமல் அதற்கு உணவிட்டு,நல்லமுறையில் கண்காணித்தான்.

ஒரு நாள் கிளி எதிர்பாராத விதமாக இறந்துபோனது. இதனைக் கண்ட பணியாளன் நடுநடுங்கிப்போனான்.

இன்றுடன் தானும் இறந்துபோனோம் என்று முடிவெடுத்துக்கொண்டான். அவனுக்குஎன்ன செய்வதென்று தெரியேல்லை.

எப்படிப்பட்ட சிக்கலான வழக்குகளையும் தீர்த்துவைப்பதில் கெட்டிக்காரரான பீர்பாலின் நினைவு அவனுக்கு வந்தது. அவர் ஒருவராலேயே தன்னைக் காப்பாற்ற முடியும் என்று நம்பினான்.

எனவே கிளியை மறைத்துவிட்டு ஓட்டமும், நடையுமாய் பீர்பாலிடம் சென்று அவர் காலில் விழுந்து நடந்ததைக் கூறினான். பீர்பால் பணியாளன்மேல் எவ்வித தவறும் இல்லை என்பதை விசாரித்து உணர்ந்துகொண்டார்

பின்னர் சிந்தனையில் மூழ்கினார். சில கணங்களுக்குப் பிறகு, 'நீ வீட்டுக்குப்போ! நான் உன்னைக் காப்பாற்றிவிடுகிறேன்' என்று ஆறுதல் கூறினார்.

பின்னர் அரண்மனைக்குக் கிளம்பினார்.

'என்ன பீர்பால், ஏதாவது விஷேசம் உண்டா?' என்று அக்பர் கேட்டார் வழக்கம்போல!

'விசேஷம் ஒன்றுமில்லை! உங்களுடைய கிளி செய்த மகத்தான காரியம்தான் விஷேசம்' என்றார் பீர்பால்.

'என்னுடைய கிளி மகத்தான காரியம் செய்து விட்டதா? என்ன காரியம் பீர்பால்அது?' என்று பெருமை பொங்கக் கேட்டார்.

அக்பருக்கு அது தன்னுடைய கிளி என்பதில் அளவற்ற பெருமிதம்.

'அந்தக் கிளியைத் உங்களுக்கு யார் தந்தார்கள் அரசே' என்று கேட்டார் பீர்பால்.

'ஏன், அது ஆசைகளடக்கிய ஒரு ஞானத்துறவிகொடுத்த விலை மதிக்க முடியாத பொக்கிஷம்'என்றார் அக்பர்.

'ஓ,அது தான் விசஷயம்! எனக்குப் புரிந்து விட்டது'என்றார் பீர்பால்.

'புதிர்போடாமல் விளக்கமாகக் கூறுங்கள் பீர்பால்! என்ன விஷயம்!' என்றார் அக்பர்.

'துறவி, என்ன செய்வாரோ அதையே இப்போது தங்கள் கிளி செய்து கொண்டிருக்கிறது. கிளி கண்களை மூடி, வானத்தை நோக்கி தவம் செய்துகொண்டிருக்கிறது அரசே! உணவிலும் அதற்கு நாட்டமில்லை' என்றார் பீர்பால்.

'அப்படியா என்றார்அக்பர் வாருங்கள் போய்ப் பார்க்கலாம்!' என்று கூறிவிட்டு விரைந்து சென்றார்.

கிளி இறந்துபோய்விட்டது என்றுபார்த்தவுடனே புரிந்துவிட்டது அக்பருக்கு. பீர்பால் கிளி செத்து விட்டது என்று சொல்லாமல் சுற்றி வளைத்துக் கூறி நம் ஆவலைத் தூண்டி நம்மை எரிச்சல் அடையச் செய்துவிட்டாரே! என்று எண்ணிக்கொண்டே அக்பர், 'கிளி இறந்துவிட்டது என்று முன்பே சொல்லி இருக்கக்கூடாதா?' என்று ஆத்திரத்துடன் வின்வினார்.

இதைக்கேட்ட பீர்பால் 'நீங்கள் சொல்வது சரிதான்!இதை நான் முன்பே தங்களிடம் சொல்லியிருக்க முடியும் ஏன் சொல்லவில்லை என்றால் என்னுடைய தலையை ஒரு கிளிக்காக இழக்க விரும்பவில்லை என்ற காரணத்தினால்தான்!' என்றார்.

அக்பருக்கு அப்போது தான் தம்முடைய பணியாளனைத் தலையைக்கொய்து விடுவேன் என்று கூறியது நினைவுக்கு வந்தது. பணியாளனைக் காப்பாற்றவே இவர் இப்படி நாடகமாடி இருக்கிறார் என்பதும் புரிந்தது.

'பணியாளனுடன், உம் தலையும் தப்பியது' என்று சிரித்தார் அக்பர்.

ஆட்சியில் இருப்பவர்கள் அறிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால், மக்களுக்குத் துன்பம் நேரிட்டகாலத்தில் உதவி புரிவதே கடமையாகும் என்பதைப் பீர்பால் வாயிலாகச் சொல்லாமல் தெரிந்து கொண்டார் அக்பர்.

## வாரம் ஒரு குறள் அறிவோம்



உலகத்திலேயே நாம் மதிப்பையோ மரியாதையையோ பெறுவதற்கு எமக்கு ஒழுக்கமே முக்கியமானதாகும். நாம் நல்லொழுக்கமுடன் இருக்க வேண்டும். நாம் ஒருபோதும்தீய வழிக்கு செல்லக்கூடாது. அதாவது, பொய்., களவு தீண்டாமை போன்ற செயல்களை செய்யவே கூடாது. அப்போதுதான் நாம் பலர் போற்றும் வண்ணம் இந்த உலகில் வாழலாம்.

அவ்வாறின்றி ஒழுக்கம் தவறி நடப்போமானால் எம்மை யாரும் பெருமையாகப் பேசவும் மாட்டார்கள்.அதாவது நாம் எவ்வளவு கற்றறிந்த பெரியவர்களாக இருந்தாலும் ஒழுக்கம் தவறிவிட்டால் கற்ற கல்விக்கும் மதிப்பில்லை. நம்மையும் ஒருவரும் மதிக்கமாட்டார்கள்.

இதனைத் திருவள்ளுவர் ஒரு குறலில் அழகாகக் கூறியுள்ளார்.

"நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்.''

## ரதனும் - சுதனும்



சுதன்- தொலைக்காட்சிப் பெட்டியில் பகல் ஒளிபரப்பு சில சமயம் தெளிவு இல்லாமலும் இரவு ஒளிபரப்பு தெளிவாகவும் இருப்பதற்குக் காரணம் என்ன?

ரதன்- தொலைக்காட்சி நிலையத்திலிருந்து வரும்மின்காந்த அலை வளிமண்டலத்தில் ஏற்படும் ' மின்னல், கரோனா மின்னிறக்கம்,மின்பொறி (spark) போன்ற இடைய,றுகளால் பாதிப்படைகின்றது. எனவே தொலைக்காட்சிப் பெட்டியில் ஒளியும், ஒலியும் தெளிவற்றுக் கிடைக்கின்றன. மின்னல் உண்டாக இரவு . பகல் என்ற வேறுபாடு இல்லை. கரோனா மின்னிறக்கம் பகலில் அதிகமாக நிகழ்கின்றது. வாகனங்களில் உள்ள ஸ்பார்க்ப்ளக்கிலிருந்தும் மிக்ஸி போன்ற அரைக்கும் சாதனங்களிலிருந்தும் மின் பொறிகள் உண்டாகின்றன. பகலைவிட இரவில் வாகன ஓட்டம் சற்றுக் குறைவடைகின்றது. இதனால் பொதுவாக பகலைவிட இரவில் ஒளிபரப்பு தெளிவாக இருக்கும். நாம் தொலைக்காட்சிப் பெட்டிக்கு அருகில் ஒரு மோட்டார் சைக்கிளை கிளப்பும்போதும், மிக்ஸியை இயக்கும்போதும் படத்தின் தன்மை குறைவாகக் காணப்படுகின்றது.

## பள்ளி வார்த்தை



எங்கள் வகுப்பு விஞ்ஞான ஆசிரியரை அறிவியல் ஆசிரியர் என அழைப்போம். ஆனால் அதற்கு அவர் கடும் எதிர்ப்புத்தெரிவித்தார். "இனி அப்படிக் கூப்பிட்டீர்கள் என்றால் நடக்கிறது வேறை"என ஒரு நாள் கோபப்பட்டார். "ஏன் ரீச்சர் அப்படி?" என ஆசிரியரைக் கேட்டோம். " எனக்கு முன்னால் அறிவியல் ஆசிரியர் என்று சொல்லுவியள். நான் இல்லாத வேளைகளில் அறிவில்லாத ஆசிரியர் என்று சொல்லுவீர்கள் அவைகளைத் தவிர்க்கத்தான்" என்றார்.

## அறிந்து கொள்வோம்



1. நம் நாட்டில் இன்றுள்ள பல்கலைக் கழகங்களின் தொகை? (ஆறு)
2. நம் நாட்டின் பாடசாலைகளை அரசு பொறுப்பேற்ற ஆண்டு எது? (01.12.1960)
3.இலவசக் கல்வி எப்போது ஆரம்பமானது? (1.10.1945)
4. இலவசப் புத்தகம் விநியோகம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு? (1980)
5.தனிச்சிங்களம் சட்டபூர்வமாக்கப்பட்ட ஆண்டு? (05.06.1956)

## வரலாற்றில் தடம் பதித்த விஞ்ஞானி

### ஆன்டனி வான் லீயூ வென் ஹூக்



உந்த 'சயன்ஸ்' பாடத்திலை படிச்சிருப்பியள். 'பக்ரீரியா' எண்டு, இதை ஆர் கண்டுபிடிச்சதெண்டு உங்களுக்கு தெரியுமே? தெரிஞ்சிருந்தா சரி. தெரியாட்டி நான் சொல்லுறன் கேளுங்கோ என்ன.

இதை 1674 ஆம் ஆண்டு 'ஆன்டனி வான் லீயூவென் ஹுக்' எண்டவர்தான் கண்டுபிடிச்சாராம். பள்ளிக்கூட 'லாப்பு'களிலை இருக்கும் 'மைக்ரோஸ்கோப்' எண்டு சொல்லுவினம். இதை பயன்படுத்திறது இவரின்ரை பொழுதுபோக்காம். அதோடை இந்த 'மைக்ரோஸ்கோப்' களையும் செய்யிறதுமுண்டாம். இவர் செய்யிற 'மைக்ரோஸ்கோப்'களுக்குள்ளாலை பார்த்தா சின்னப் பூச்சிகள் எல்லாம் 270 மடங்கு பெரிசாத் தெரியுமாம். அடேயப்பா!

இவரின்ரை பொழுதுபோக்கு 'நடவடிக்கைக்கு ' மனிசரின்ரை தலைமயிர், தோல் திசுக்கள் கூட தப்பவில்லையாம். சரியான 'பயங்கரவாதி' போலை தான் கிடக்கு!

இப்படியான நடவடிக்கைகளின் உச்சகட்டமாகத்தான் 'பக்ரீரி'யாவையும் கண்டுபிடிச்சாராம். அது சரி 'இந்தக் கிருமிகளை கண்டுபிடிச்சதாலை எங்களுக்கென்ன செய்துபோட்டார் இவர்?' எண்டு கூட நீங்கள் நினைக்கலாம் சிலவேளை. ஆனா இதைக் கண்டுபிடிக்காட்டி இண்டைக்கு உலகத்தில அரைவாசிப்பேரும் இருந்திருப்பினமோ எண்டது ஆச்சரியப்படும் விடயமே? அந்தளவுக்கு இந்த 'கிருமி' கள் மனுசரை கொலையெல்லே செய்துபோடுமாம்!

எங்கடை 'பழசு'கள்சில கதைகள் சொல்லக் கேட்டிருப்பியள், அதுதான் எங்கடை தமிழர் ஒருபொருளை கண்டுபிடிச்சா, அதை எப்படி அழிக்கலாம் எண்டதிலைதான் முழுமூச்சா செயற்படுவினமாம். ஆனா எனக்கெண்டா இந்தக் கதைகளிலை நம்பிக்கை இல்லைப் பாருங்கோ. அப்பிடியான 'தமிழரின்ரை' புத்தி தெரிஞ்சுதான் இந்த 'நோய்க்கிருமி' களையும் 'ஆன்டனிவான்' கண்டுபிடிச்சாரோ, என்னவோ தெரியவில்லையாம்.! ஏணென்டா ஒண்டைக் கண்டுபிடிச்சா அதை அழிக்கிறதுதானே இவையளின்ரை வேலை, அதாலைதானாம்.

என்னதான் தமிழருக்காக 'வக்காலத்து' வேண்டியும் பிரியோசனம்தான் இல்லையே . அதுதான் இந்த 'நோய்க்கிருமி'களை அழிக்க மருந்து கண்டுபிடிச்சது ஒரு ஆங்கிலேயர்தானாமே? இனி என்ன செய்யிறது. என்ரை முகத்திலை கரியைப் பூசிப்போட்டியள் , இனியெண்டாலும் ஏதாவது 'கண்டு' பிடிக்கிற வழியையாவது பாருங்கோ என்ன? இல்லாட்டி என்ரை பாடு படு திண்டாட்டம்தான்.

*-கல்யாணி-*

அன்பிற்குரிய !
தம்பி தங்கைகளே உங்கள் இளையநாதம் பகுதியில் பேனா நண்பர்கள் என்ற புதிய பகுதியை ஆரம்பிக்கவுள்ளோம்.
நீங்கள் செய்ய வேண்டியது இது தான்





உங்கள் புகைப்படம் ஒன்றும்,
தெளிவாக உங்கள் முகவரி,
உங்கள் பொழுது போக்கு,
உங்களைப்பற்றிய முழு விபரம்
என்பவற்றை எமக்கு அனுப்பி வையுங்கள்.

நாம் இருப்பதுபோலவே செயல்புரிவோம் நாம் செய்வது போலவே நமக்குச் செய்யப்படும் — ரால்ஃப் ஹால்டோ எமர்சன்









# குதூகலம்

## யார் அந்த இளைஞன்?



விக்டோரியா மகாராணியின் ஆட்சிக் காலத்தில் இங்கிலாந்தின் பிரதம மந்திரியாகவிருந்த சேலிஸ் பிரபு ஒருவிருந்தில் கலந்து கொண்டார். அந்த விருந்திற்கு வந்திருந்த ஓர் இளைஞனை அவருக்கு நிரம்பப் பிடித்துவிட்டது. அவனை யார் என்று தெரிந்துகொள்ள விரும்பினார் அவர்.

அருகிருந்தவரை அழைத்து , "அதோ நிற்கிறானே அந்த இளைஞனைப் பார்த்தீர்களா? எத்துணை அழகாக இருக்கின்றான். யார் அவன்? அவனை எங்கோ பார்த்ததாகக் கூட நினைவிருக்கிறது" என்று கூறினார். அந்த மனிதர் தமக்கு வந்த சிரிப்பை அடக்கிக்கொண்டு "அவன் உங்கள் 'செக்ரடரி'தானே" என்றார்.

## அன்பளிப்புச் செய்த நூல்



ஒரு நாள் பெர்னாட்ஷா பழைய புத்தகங்கள் விற்கும் கடையொன்றிற்குச் சென்றிருந்தபோது அங்கு தம் நூல் ஒன்றும் இருப்பது அறிந்து ஆச்சரியமுற்றார். அது அவரே ஒரு நண்பருக்கு அன்பளிப்புச் செய்ததாகும். 'என் வாழ்த்துக்களுடன்' என்று அவர் எழுதிக் கையெழுத்திட்டது அப்படியே இருந்தது. அதனை அப்பொழுதே விலைகொடுத்துவாங்கி அந்த நண்பருக்கு மீண்டும் அனுப்பிவைத்தார் ஷா.

மற்றொரு முறையும் அவர் அன்பளிப்புச் செய்த நூல் ஒன்று பழைய புத்தகங்கள் விற்கும் கடைக்கு வந்துவிட்டது. அதனை வாங்கி முன்போல் அவருக்கே அனுப்பி வைக்க எண்ணினார் ஷா. அந்த நூலில் முதல் பக்கம் முழுவதையும் அவரே தம் கைப்பட எழுதிய அன்பளிப்புச் செய்தி நிரம்பிக்கொண்டிருந்தது. "என்னப்பா கேட்கிறாய் இந்தப் புத்தகத்திற்கு?" என்று கேட்டார் ஷா. கடைக்காரன் வாங்கிப் புரட்டிப் பார்த்தான். "பன்னிரெண்டு ஷில்லிங்கு வரைக்கும் கூடப் போகும். எவனோ ஒரு கழுதை முன்பக்கம் முழுவதும் கிறுக்கி வைத்திருக்கிறான்.... சரி,மூன்று ஷில்லிங்குகள் கொடுங்கள்!" என்றான்.

## ஸ்டாலினின் சாமர்த்தியம்



இரண்டாம் உலகப் பெரும்போர் நடந்து கொண்டிருக்கும்போது போர் நிலைமை பற்றி ஆலோசிப்பதற்காக முப்பெரும் தலைவர்களான ரூஸ்வெல்ட்,சர்ச்சில், ஸ்டாலின் மூவரும் சந்தித்தார்கள். அவர்கள் முக்கியமான விஷயங்களைப் பற்றியெல்லாம் பேசி முடித்தபின் வேடிக்கையாகப் பேசத் துவங்கினார்கள்.

சர்ச்சில் சொர்னார்: " நான் ஓர் இங்கிலீஷ்காரனாயில்லாவிட்டால் ஓர் அமெரிக்கனாகவே இருக்க விரும்புவேன்." உடனே ரூஸ்வெல்ட், " நான் ஓர் அமெரிக்கனாக இல்லாவிட்டால் ஓர் இங்கிலீஷ்காரனாகவே இருப்பேன்" என்று கூறினார். இவர்கள் கூறியதைக் கேட்டுக்கொண்டிருந்த ஸ்டாலின் அமைதியாக, " நான் ஒரு ரஷ்யனாயில்லாவிட்டால் அதற்காக வெட்கப்படுவேன்" என்றார்.

சிறிய தூறல்கள் நீடிப்பவை; ஆனால் திடும் எனச் சீறும் புயல்கள் குறுகியவை ✪ வில்லியம் ஷேக்ஸ்பியர்

## வரிவிளம்பரம்

**மூக்கு கண்ணாடி**

தரமான மூக்கு கண்ணாடிகளை காலதாமதமின்றி கொழும்பு விலைக்கு பெற்றுக்கொள்ளலாம். ஒளிச்சுடர் மூக்கு கண்ணாடி அகம் (மொறாயஸ்), புதுக்குடியிருப்பு.
(2101)

**பல் கட்டுதல்**

பல் கட்டுதல், பல்கிளிப் போடுதல், நல்ல முறையில் நியாயமான விலையில் செய்து கொள்ளலாம். ஒளிச்சுடர் பல்கட்டுமிடம் (மொறாயஸ்), புதுக்குடியிருப்பு.
(2102)

---

**யாழ். வெளியீடுகள்:**

மிக சொற்ப பிரதிகளுடன் விற்பனையாகின்றது — பிரதிகளுக்கு முந்துங்கள்

☞ **G.C.E A/L 2003** ற்கான பொதுச் சாதாரணப் பரீட்சை வழிகாட்டி நூல்

கடந்தகால, மாதிரி வினாத்தாள்கள் விரிவான விடைகளுடன், 2003Sep.வரையான பொதுஅறிவு விடயங்களும்.

ஆக்கியோர் – P. கமல்தாசன் & P. உமாசங்கர்

☞ **எழுதுநர் சேவைப் போட்டிப்பரீட்சை வழிகாட்டி நூல்**

2002-07-27 வினாத்தாளுடன் 3 வினாத்தாள்கள் விரிவான விடைகளுடன், 125 பொதுஉளச்சார்பு வினாக்கள் மொழித்திறன் விடயங்கள்

ஆக்கியோன் – P. உமாசங்கர்

☞ **மிக விரைவில்** G.C.E A/L 2003 விஞ்ஞானிகளும் கொள்கைகளும் — LOGIC

ஆக்கியோன் – P. கமல்தாசன்

**கிடைக்குமிடம்** வன்னியிலுள்ள சகலஅறிவமுது புத்தகசாலைகள், பிள்ளையார் புத்தகசாலை- கிளிநொச்சி, கவிதா புத்தகசாலை- வவுனியா
(2363)

---

## 31ம் நாள் நினைவலையும் அந்தியேட்டி அழைப்பிதழும்

### இராசையா வேலும்மயிலும்

உரும்பிராய் வடக்கை பிறப்பிடமாகக் கொண்ட அமரர் திரு. இராசையா வேலும்மயிலும் அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் 11-09-2002 புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறவுள்ள கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உரும்பிராய் வடக்கு, உரும்பிராய். (2368)

தகவல்: வே. தவக்குமாரன் (மகன்)

---



அன்னை மடிமீது 19 - 02 - 1946

மாயமாய் மறைந்த போது 08 - 08 - 2002

### பாக்கியநாதன் றெஜினோட்சிறில்

(இல:31, 1st ஒழுங்கை புதுவீதி கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம்.)

வன்னி மண்ணில் வருகை தந்து
இளந் தென்றல் வாணிபத்தின்
விழுதானாய்!
துயர்கள் பல வந்தும்
தூய்மையாய் பணியாற்றியவரே
ஐயா சிறில்!
உன் பணி என்றும் நினைவழியாது
நிமிர்ந்து நிற்கும் – எம்
மனங்களில்

உன் பிரிவால் துயருறும் குடும்பத்தினர், உறவினர்கள், பணியாளர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து நாமும் உன் நினைவில் பங்கு கொள்கிறோம்.

தகவல்: பணியாளர்கள்
இளந் தென்றல் , குடிவகை வாணிபம்
(2132)

---

உ
ஓம் விராட் விஷ்வப் பிரம்மனே நம

## பூப்புனித நீராட்டு விழா அழைப்பிதழ்

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான சித்திரபானு வருடம் ஆவணித்திங்கள் 23ம் நாள் (08-09-2002) ஞாயிற்றுக்கிழமை காலை 7.17 மணிமுதல் 8.31 மணிவரையுள்ள கன்னிலக்கின சுபமுகூர்த்த வேளையில்.

எமது செல்வப் புதல்வி, திருநிறைச் செல்வி

**கி. சஞ்சயனி அவர்கட்கு**

திருவருள் துணைகொண்டு கணுக்கேணி கிழக்கில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் பூப்புனித மங்கள நன்னீராட்டு விழா நடாத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து செல்வியை ஆசீர்வதித்தும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கணுக்கேணி கிழக்கு, முள்ளியவளை. (2131)

இவ்வண்ணம் தங்கள் நல்வரவை நாடும்
திரு. திருமதி. க. கிருஷ்ணசாமி
(P.V.R. ஜுவலரி)

---

## வாகனங்கள் விற்பனைக்கு உண்டு




| | |
|---|---|
| ☆ ஸ்கூஸ் லொறி | 02 |
| ☆ ஒக்ஸ்போட் கார் | 01 |
| ☆ கயஸ் | 01 |
| ☆ ராப் ரைக்டர் | 01 |
| ☆ ELF 150 | 01 |
| ☆ மோட்டார் சைக்கிள் | 01 |




மேற்குறிப்பிட்ட வாகனங்கள் 05.09.2002 தொடக்கம் 10.09.2002 வரை அலுவலக நேரங்களில் நேரில் பார்வையிடலாம்.

**நிர்வாகம்**
மருந்துப் பால்மா தலைமைக்காரியாலயம்,
கிருஸ்ண கோவில் அருகாமை,
ஆனந்தபுரம், 7ம், வட்டாரம்,
புதுக்குடியிருப்பு. (2370)

---

## பதவி வெற்றிடம்

### வவுனியா வடக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் நெடுங்கேணி

மேற்படி எமது சங்கத்தில் கிளை முகாமையாளர், இலிகிதர் பதவி வெற்றிடமாக உள்ளது. கீழ் குறிப்பிடும் தகமையுடைய பணியில் சேர விரும்புகின்ற விண்ணப்பதாரிகள் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்து "தலைவர், வவுனியாவடக்கு ப.நோ.கூ.சங்கம், நெடுங்கேணி." என்ற முகவரிக்கு 30-09-2002ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்பாக நேரிலோ அன்றி பதிவுத்தபால் மூலமோ கிடைக்கச் செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றோம். சங்கத்தின் நிரந்தர தொழிற்பரப்பைச் சொந்த இடமாக கொண்டவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். கடித உறையின் இடப்பக்க மேல் மூலையில் கிளை முகாமையாளர் பதவிக்கான விண்ணப்பம். இலிகிதர் பதவிக்கான விண்ணப்பம் எனக்குறிப்பிடப்படுதல் வேண்டும்.

கிளை முகாமையாளர் - 208/13 (ஆண்கள் விரும்பத்தக்கது)
தங்கியிருப்போர் பட்டியல்
சம்பள அளவுத்திட்டம் 165/88 - 13 (31/97)
2800.00 - 65X10 - 80X10 - 4250.00
33600.00 - 780X10 - 960X10 - 51000.00

**கல்வித்தகைமை**

(அ) கூட்டுறவுப் பணியாளர் 14வது சம்பள அளவுத்திட்டத்தில் குறிப்பிட்ட துறையில் 02 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 15ஆவது சம்பள அளவுத்திட்டத்தில் குறித்த துறையில் 04 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

(ஆ) கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திரம் (சா/தரம்)/க.பொ. த. சாதாரணதரத்தில் கணிதம்/ வர்த்தக கணிதமும் தமிழ் பாசை உட்பட 4 திறமைச்சித்தியுடன் 06 பாடங்களில் சித்தி.

இலிகிதர் 302/14
(தங்கியிருப்போர் பட்டியல்)
சம்பள அளவுத்திட்டம். 165/88 - 14 31/97 இன் படி
2750.00 - 60X10 - 75X10 - 4100.00
33000 - 720X10 - 900X10 - 49200.00

**கல்வித்தகைமை**

(அ) கூட்டுறவுப் பணியாளர் 16வது சம்பள அளவுத்திட்ட இலிகிதர் பதவியில் 02 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

(ஆ) க.பொ.த. சாதாரண தரத்தில் கணிதம்/ வர்த்தக எண்கணிதம்/ எண்கணிதமும் தமிழ் பாசை உட்பட 05 திறமைச் சித்தியுடன் 06 பாடங்களில் சித்தி.

**குறிப்பு:** தெரிவு செய்யப்படுபவர் ஒரு மாத சேவைக்கால பயிற்சியின் பின் வெற்றிடம் ஏற்படுவதற்கமைய தெரிவு ஒழுங்கின்படி நியமனம் வழங்கப்படும் பயிற்சிக் காலத்தில் ரூ.75/= நாளொன்றிற்கு ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்கப்படும்.

(சி.7345) பொது முகாமையாளர்.



**ஞாநி**

# அமெரிக்காவில் பட்டினி கிடப்பது யார்?



> அமெரிக்காவிற்கு போய்விட்டால் வசதியாக வாழ்ந்துவிடலாம் என்று வெளிநாட்டில் பலரும் நம்புகிறார்கள். ஆனால் அமெரிக்காவில் இருந்து கொண்டே வசதியாக வாழ முடியாத அமெரிக்கர்கள் சுமார் 30 சதவிகிதம் என்று வாஷிங்டனில் இருக்கும் எகனாமிக் பாலிசி இன்ஸ்ரியூட்டின் ஆய்வு சொல்கிறது.

அமெரிக்காவின் மறுபக்கங்களுக்கு இரண்டு விதமான எதிர்வினைகள். (response என்பதற்கு எதிர் வினை முழுக்கப் பொருத்தம் தானா? எல்லா response களும் எதிரான வினைகள் இல்லையே. மறுவினை, பதில்வினை, இன்னும் வேறு ஏதாவது யோசிக்கலாமே) சிலர் அமெரிக்காவை இவ்வளவு கடுமையாக விமர்சிக்க வேண்டுமா என்றார்கள். சிலர் 'அப்பாடா. இதுவரை பெரிய பெரிய பத்திரிகைகள் எல்லாம் செய்யாததை நீங்கள் செய்திருக்கிறீர்களே" என்று 'ஓ' போட்டார்கள்.

அமெரிக்காவை பூலோக சொர்க்கம் என்றும் அமெரிக்கா எது செய்தாலும் சரிதான் என்றும் ஒரு பிரமை நமது மத்தியதர இளைஞர்கள் மத்தியில் வலுவாக இருப்பதினாலேதான் மறுபக்கங்களைக் காட்ட வேண்டியதாகிறது. ஏழை என்றும் அடிமை என்றும் அமெரிக்காவில் யாரும் இல்லை என்று எல்லாம் நினைப்பது அசட்டுத்தனம்.

வழக்கறிஞரும் மனித உரிமைக்கழகத் தலைவருமான பொ.வெ. பத்தவத்சலம் எழுதிய கடிதத்தில் 'இரண்டாம் அறுவடை' என்ற அமெரிக்க சேவை அமைப்பைப் பற்றி தெரிவித்திருக்கிறார். இது ஒரு அன்னதான அமைப்பு. அமெரிக்காவில் சோறு (றொட்டி?) இல்லாமல் பட்டினியில் அவதிப்படும் அமெரிக்கர்களுக்கு உணவு வழங்கி வருகிறது. பெரும் நிறுவனங்கள், தனிநபர்களிடமிருந்து நன்கொடை பெற்று உபரியாக இருக்கும் உணவைப் பசியால் வாடுபவர்களுக்கு கண்ணியம் குறையாமல், விளம்பரம் இல்லாமல் வழங்குகிறது. செகண்ட் ஹார்வெஸ்ட்

அமெரிக்காவில் பட்டினியா? சோற்றுக்கு வழியில்லையா? என்று ஆச்சரியப்படுகிறவர்கள் www second harvest. org என்ற இணைய தளத்திற்கு சென்று விசாரித்துத் தெரிந்து கொள்ளலாம். தெரிந்து கொண்டேன்.

அமெரிக்க அரசாங்கத்தின் விவசாயத் துறையின் கணக்குப்படியே சுமார் மூன்று கோடி முப்பது லட்சம். அமெரிக்கர்கள் தங்கள் அடுத்தவேளை உணவு எங்கிருந்து கிடைக்கும் என்று தெரியாத சிரம நிலையில் இருக்கிறார்கள். கடந்த ஆண்டு மொத்தம் இரண்டு கோடி 33 லட்சம் அமெரிக்கர்களுக்கு 'இரண்டாம் அறுவடை'' சோறு போட்டிருக்கிறது இப்படி அவர்களிடம் அன்னதானம் பெறுவோரின் எண்ணிக்கை ஐந்து ஆண்டுகளில் 9 சதவீதமாக அதிகரித்திருக்கிறது.

இப்படி பட்டினியில் தவிப்போரில் நூற்றுக்கு 39 பேர் குழந்தைகள். 11 பேர் 65 வயதைக் கடந்தவர்கள். நூற்றுக்கு 62 பேர் பெண்கள். நூற்றுக்கு 45 பேர் வெள்ளையர்கள். 35 பேர் கறுப்பினத்தவர்.

அன்னதானத்தை நம்பி இருப்பவர்களில் 37 சதவிகிதம் பேருக்கு வேலை வாய்ப்பே இல்லை. அவர்களுக்கு உயர்நிலை பள்ளிப்படிப்புக்கூட இல்லை என்பது ஒரு காரணம். தங்கள், வறுமை, பசி அனுபவங்களை, 32000 பேர் பதிவு செய்திருக்கிறார்கள்.

உலகில் மற்ற நாடுகள் எல்லாம் அமெரிக்காவிடம் கையேந்தி நிற்கவேண்டிய நிலையில் இருப்பதாக அமெரிக்கா பிரச்சாரம் செய்கிறது. அமெரிக்காவிலோ அமெரிக்கர்கள் தங்களுக்கு தாங்களே கையேந்தும் நிலை இருப்பதை செகண்ட் ஹார்வெஸ்ட் தெளிவுபடுத்துகிறது.

அமெரிக்காவிற்கு போய்விட்டால் வசதியாக வாழ்ந்துவிடலாம் என்று வெளிநாட்டில் பலரும் நம்புகிறார்கள். ஆனால் அமெரிக்காவில் இருந்துகொண்டே வசதியாக வாழ முடியாத அமெரிக்கர்கள் சுமார் 30 சதவிகிதம் என்று வாஷிங்டனில் இருக்கும் எகனாமிக் பாலிசி இன்ஸ்ரியூட் டின் ஆய்வு சொல்கிறது.

அமெரிக்காவில் ஒரு கடைக்குமாஸ்தா, ஒரு வீட்டு வேலைக்காரி, ஒரு நர்ஸிங் ஹோம் உதவியாளர், ஒரு ஹோட்டல் எடுபிடி, போன்ற அடிமட்ட வேலைகளில் இருப்பர்களின் வாழ்க்கை எப்படி இருக்கிறது? வீட்டில் வீடியோ, இன்டர்நெட், யாலியாக சொகுசுக்கார் பயணம் என்பதெல்லாம் இவர்களுக்கு கிடையாது. இன்னும் சொல்லப்போனால் இவர்களுக்கு வீடே கிடையாது: கிடைக்காது.

இவர்களுடைய வாழ்க்கை எப்படி இருக்கிறது என்று அறிவதற்காக பத்திரிகையாளர் பார்பரா ஹெரென்ரிக் சென்றார். நம்ம ஊர் மாதிரி சித்தாள். பூக்காரிகளிடம் பத்துக் கேள்விகள் கேட்டு பேட்டி எடுக்கவில்லை பார்பரா.

தானே வீட்டு வேலைக்காறியாக, ஹோட்டல் எடுபிடியாக, கடைக்குமாஸ்தாவாக, வேலை பார்த்தார். மூன்று மாதங்கள், மூன்று வெவ்வேறு அமெரிக்க நகரங்களில் இப்படி வேலை செய்தார். கையில் வேறு பணமோ, கிரடிக்காட்டோ வைத்துக் கொள்ளவில்லை. வாரக்கூலியாக கிடைக்கும் பணத்தில் தான் வாழ்வது என்ற முடிவுடன் இப்படி மூன்று மாதங்கள் வாழ்ந்தார். ஒரு மணி நேர வேலைக்கு 7 டொலர் கூலி என்ற அளவுக்கு மேல் அவருக்கு எங்கேயும் சம்பளம் கிடைக்கவில்லை. இந்தக் காசில் தினசரி சமைத்துச் சாப்பிடப் பொருட்கள், எரிவாயு எதுவும் வாங்க முடியவில்லை. எல்லாவற்றிற்கும் மேலாக வீட்டு வாடகை தரமுடியவில்லை.

நடமாடும் உணவு விடுதியாக இருக்கக்கூடிய வாகனங்களில் வாரத்திற்கு 250 டொலர் வாடகை என்ற அடிப்படையில் காரில் குடியிருந்தார். டிரெயிலர் வண்டிகள் வீடுகளாக வாடகைக்கு விடப்படுகின்றன. (வீரானம் குழாய் மாதிரி) வாடகை மாதத்திற்கு 625 டொலர்.

பார்பரா கூட வேலை பார்த்தவர்கள் எப்படி சமாளிக்கிறார்கள்? தினசரி முதலில் எட்டு மணி நேரம் ஒரு வேலை. அடுத்து ஆறு மணி நேரம் வேறு வேலை. குடும்ப வாழ்க்கை, குழந்தைகளுடன் கொஞ்சுவது என்பதற்கெல்லாம் வழியே கிடையாது. தங்களுக்கு குடியிருக்க வீடு இல்லையே என்று கவலைப்படுவதில்லை. இரவு படுத்துத் தூங்க ஒரு காரோ, வானோ கிடைத்தால் திருப்திதான். மருத்துவ இன்சுரன்சுக்கு மாதம் 100 டொலர் கட்ட முடியாததால் பலருக்கு மருத்துவ வசதியும் கிடையாது.

அமெரிக்க அரசு வறுமைக்கோடு என்பது எப்படி நிர்ணயித்திருக்கிறது தெரியுமா? நான்கு பேர் உள்ள குடும்பத்திற்கு தேவையான குறைந்தபட்ச உணவின் விலையைப்போல மூன்று மடங்கு தொகைக்கு குறைவாக ஆண்டு வருவாய் இருந்தால் அதுதான் வறுமை. அதாவது 17643 டொலர்கள் சம்பாதித்தால் வறுமைக் கோட்டுக்கு மேலே வந்து விடுவார்கள். ஆனால் பார்பராவும் எகனாமிக் பாலிசி நிலைய ஆய்வும் கண்டுபிடித்த விசயம் என்னவென்றால் நான்கு பேர் கொண்ட குடும்பம் ஆண்டு வருமானமாக 33511 டொலர்கள் சம்பாதித்தாலும் அதற்கு அடிப்படையான விசயங்கள் எல்லாம் கிடைப்பதில்லை என்பது தான்.

பார்பரா மூன்று மாதம் ஒரு சாதாரண தொழிலாளியாக வாழ்ந்து தான் சந்தித்த அனுபவங்களை 'நிக்கலரைன்ட் ரைம் (nickel and dimed) என்ற தலைப்பில் புத்தகமாக எழுதியிருக்கிறார். (ஹென்றி கோல்ட் வெளியீடு) "விலை மதிப்பற்ற தன் உழைப்பை விற்கும் ஒருவரை மிகவும் கீழ்த்தரமானவராக இளிவானவராக உணர வைப்பதாகத்தான் நிலைமை இருக்கிறது." என்கிறார் பார்பரா.

இது தான் மக்களின் அமெரிக்கா. அரசாங்கத்தின் அமெரிக்கா வேறு

அமெரிக்கா அரசாங்கம் என்பது வேறு. அது தன்னுடைய இராணுவ மேலாதிக்கத்திலும் பெரும் வர்த்தகர்களின் நலனையும் வளப்பதிலேயே அக்கறையுடன் இருக்கிறது. உலக நாடுகளின் பொது முடிவுகளுக்கு கூட கட்டுப்படுவதில்லை. அண்மையில் உலக குற்றவியல் நீதிமன்றத்தின் உடன்படிக்கையை ஏற்க மறுத்து விட்டது. இந்த உடன்படிக்கைப்படி ஐ.நா.சபை குறிப்பிடும் தனிநபர்களைக் கூட கிரிமினல் குற்றவாளிகளாக விசாரிக்கலாம். கிளிங்டன் செனட்டுக்கு அனுப்பிய இந்த சம்மத மசோதாவை புஷ் அரசு வாபஸ் வாங்கிவிட்டது. இந்திய பகுதியில் தன் இராணுவ நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதில் தான் இப்போது அமெரிகாவின் அக்கறை. இந்திய இராணுவத்துடன் கூட்டு நடவடிக்கை, பயிற்சி என்ற பெயரில் இந்தியாவில் அமெரிக்க இராணுவத்தின் நடமாட்டம் அதிகரிக்கிறது. சென்னைத் துறைமுகத்தில் அமெரிக்க கப்பல் வந்திருந்தபோது அனுமதியின்றி கல்பாக்கம் மீது அதன் விமானங்கள் பறந்து வேவு பார்த்தன. விசோராமில் உள்ள இந்திய இராணுவத்தின் வனயுத்தப் பயிற்சிப் பள்ளிக்குள் இதுவரை அந்நிய நாட்டினரை அனுமதித்ததில்லை. இப்போது அமெரிக்கர்களுக்கு அனுமதி அளிக்க பி.ஜே.பி. அரசும் பரிசீலனை செய்கிறது. அந்தமானில் அமெரிக்க கடற்படைத் தளம் அமைப்பது பற்றி இந்திய அரசுடன் பேச்சு நடத்துகிறது. காஷ்மீரின் எல்லைக்கோட்டுப் பகுதியில் மின்னணு சாதனங்கள் செயற்கைக் கோள்களைப் பயன்படுத்தி உளவு பார்ப்பதற்கான சாதனங்களைத் தரும்படி அமெரிக்க இராணுவத்தின் கண்ட்ராக்டரைக் கேட்பதற்காக நமது இராணுவ மந்திரி ஜோர்ஜ் பெர்னாண்டஸ் அமெரிக்காவிற்கே போய் வந்தார்.

தன்னுடைய இராணுவ பொருளாதார ஆதிக்கத்தை விரிவுபடுத்துவதற்காக மற்ற அரசுகளுடன் அமெரிக்கா கூட்டு வேலை செய்கிறது. தங்கள் வாழ்க்கையை மேம்படுத்திக் கொள்வதற்காக அமெரிக்காவின் ஏழைகளுடன் உலகத்தின் ஏழைகள் கூட்டுச்சேர வேண்டும்.

✪ நன்றி தீம்தரிகிட




செய்தி:- ரத்வத்தையின் சொத்து விபரம் தேடி வங்கி வங்கியாக வேட்டை.

மயிலர்:- ஆட்களை வேட்டையாடி மகிந்த ரத்வத்தையின் வீடுகளுள்ளும் வங்கிப் பெட்டகங்களுள்ளும் 'மோசடி' பணம் தேடி வேட்டை நடக்குது. எத்தனைபேற்றை உயிரைவதைத்தும், நாட்டை ஏமாற்றியும் மோசடியாகச் சேர்த்த சொத்தை இவ்வளவு பாதுகாப்பாக பதுக்கி வைச்ச இறந்த கால பிரதிப் பாதுகாப்பு அமைச்சருக்கு காலம் சரியில்லை. ஏழரைச்சனி கடைக் கூறா தெரியேல்லை... இப்பிடிப் போட்டு உலைக்குது. ஆளை... மாமா இந்தளவு சொத்துச் சேர்க்க காரணமாக இருந்த மருமகளையும் மக்கள் முன் வைத்து விசாரிக்க வேண்டும் பாருங்கோ... பாதுகாப்புச் செலவினத்தால் அரச திறைசேரி காலி... ரத்வத்தை குடும்பத்து திறைசேரி எப்படி உப்பிப் பெருத்திருக்கு பாருங்கோ...

செய்தி:- அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்க எதிரணியிலுள்ளோர் முற்படுகின்றனர்- ஜே.வி.பி உறுப்பினர் விமல் வீரவன்ச.

மயிலர்:- பாவம் இந்த விமல் வீரவன்ச... இப்ப ஆள் பொ.ஐ.முன்னணியின் பிரச்சாரச் செயலாளராகி விட்டார் பாருங்கோ... சந்திரிகாவை விழ விடாது முண்டு கொடுக்கிற முனைப்பான பொறுப்பினை இப்ப அவர்தான் 'கொந்துராத்து' எடுத்திருக்கிறார் போல கிடக்கு... பொ.ஐ.முன்னணியை விட்டா ஜே.வி.பிக்கு வேறுவக்கில்லை... அதே நிலைமை தான் பொ.ஐ.முன்னணிக்கும்... வேலிக்கு ஓணான் சாட்சி எண்ட கதை மாதிரி... எதிரணியிலுள்ளோர் என்றால் யார்? மகிந்த ராஜபக்ஷ கும்பலைக் கூறுகிறாரா...? அப்படியானால் அநுரா... ராஜபக்ஷ மோதலுக்கு வீரவன்ச தூபம் போடத் தொடங்கி விட்டார் என்று தான் அர்த்தம் பாருங்கோ......

செய்தி:- பிரதமர்-புலிகளின் தலைவர் ஒப்பந்தத்தின் அம்சம் பற்றி எனக்கு தெரியாது- சனாதிபதி சந்திரிகா.

மயிலர்:- உலகத்திலேயே ஒண்டும் தெரியாத சனாதிபதி இவர்தான் பாருங்கோ, ஆனா நிறைவேற்று அதிகாரம் பற்றி மட்டும் நல்லாத் தெரியும். சந்திரிகாவும் ரணிலும் ஒப்பந்தம் முடிந்த பிறகு பலதடவை சந்தித்து பேசியிருக்கினம்... நோர்வேக்காரரும் அது தொடர்பாக சனாதிபதிக்கு விளக்கி வருவதாக அடிக்கடி செய்திகள் வந்தபடிதான் இருக்கு... பேப்பரிலையும் இதுபற்றி அவ்வவ்போதே உடனுக்குடன் விளக்கமாக தகவல்கள், கட்டுரைகள் வந்தபடிதான் இருக்கு... இப்ப சிறிலங்காவிலை முக்கியமான அரசியல் நடவடிக்கைகளும் இந்த ஒப்பந்தத்தின் அதையொற்றித்தான் நடக்கிறது... ஆனா அம்மணிக்குத்தான் எதுவுமே தெரியாமல் இருக்கிறது... தூங்குறவனை எழுப்பலாம் பாருங்கோ ஆனால் தூங்குவது போல் பாசாங்கு செய்யிறவனை எழுப்பவே முடியாது... அம்மணியின்ரை பாசாங்கு ஒருத்தருக்கும் தெரியாது எண்டு நினைச்சிட்டா பாருங்கோ... எதுவானாலும் சொல்லுறவை சொன்னா கேட்கிறவைக்கு மதியென்ன பாருங்கோ...?



# சிங்கள சினிமா உலகின் சின்னத்தனங்கள்

'வல்வையூரான்'

✡ அளவுக்கதிகமான ஆபாசக் காட்சிகளைக் காண்பித்ததன் மூலமும், நம்பமுடியாத விதத்தில் கதையை நகர்த்தியதன் மூலமும் விடுதலைப் போராட்டத்தினையும், தம் இன்னுயிர்களை ஈகம் செய்யும் கரும்புலிகளை - விடுதலைப் புலிகளை மாத்திரமன்றி தமிழினப் பெண்களையும் கேவலப்படுத்தும் ஈனச்செயலில் மொஹான் நிலாஸ் ஈடுபட்டுள்ளார். ✡

இருபத்தியொரு வருடங்களின் பின்னால் சென்ற மாதம் கொழும்பிற்குச் செல்லும் வாய்ப்பு எனக்கும் கிடைத்தது.

பத்து நாட்கள் அங்கு தங்கி நின்ற அந்தப் பயணத்தின்போது 'களுசுதுமல்' என்கின்ற சிங்களத் திரைப்படம் ஒன்றினை நான் தேடிச்சென்று பார்த்தேன். 'கறுப்பு வெள்ளைப் பூக்கள்' என அர்த்தத்தினைத் தருகின்ற அந்தப்படத்தைப் பற்றிய விளம்பரம் ஒன்றில் "மனுஷத்தன்மைக்கும் காதலுக்கும் பின்னால் சென்ற பயங்கரவாத ஜோடியின் கதை" எனக் குறிப்பிடப்பட்டிருந்ததனாலேயே நான்



அந்தச் சிங்களத் திரைப்படத்தினைத் தேடிச் சென்று பார்த்தேன்.

கொழும்பு றீகல் திரையரங்கில் நிறைந்து காணப்பட்ட சிங்களவர்கள் மத்தியில் தமிழனாக- தன்னந்தனியனாக நான் அத்திரைப்படத்தினைப் பார்த்து முடித்து வெளியே வரும்வரை என் நெஞ்சத்தினுள் பொங்கிப் பெருக்கெடுத்த ஆத்திரத்தை எப்படித்தான் கட்டுப்படுத்தி வைத்திருந்தேனோ என என்னையே என்னால் நம்ப முடியவில்லை.

மொஹான் நியாஸ் என்பவரால் இத்திரைப்படம் புதிதாகத் தயாரிக்கப்பட்டிருந்தது.

கரும்புலிகள் இருவரைச்சுற்றி (ஒரு இளைஞன், ஒரு யுவதி) கதை பின்னப்பட்டிருந்தது. இலங்கைக்கு வருகை தரும் வெளிநாட்டு அரச தலைவர் ஒருவரைக் கொல்வதன் பொருட்டு அவர்கள் இருவரையும் அவ் அமைப்பு அனுப்பி வைக்கின்றது.

சிங்களத் திரையுலகின் முன்னணிக் கதாநாயகன் கமல் அத்தற ஆரச்சி பயங்கரவாத இளைஞனாகவும், நிர்வாண நடிகை என வர்ணிக்கப்படுகின்ற தில்கானி அசோகமாலா பெண் பயங்கரவாதியாகவும் பாத்திரமேற்றுள்ளனர்.

துப்பாக்கிச் சூட்டுப்பயிற்சி ஒன்றுடன் திரைப்படம் ஆரம்பமாகின்றது. அதன்பின் அமைப்பின் பெண் பொறுப்பாளர் ஒருவர் பாதுகாவலர் சகிதம் வந்து கரும்புலிகள் நிறைவேற்றப்பட வேண்டிய கடமையை ஒப்படைக் கின்றார். 20 லட்சம் ரூபாவுக்குரிய காசோலையும் புத்தம் புதிய காரொன்றும் வழங்கப்படுகின்றது.

"இனிமேல் நாங்கள் தமிழ் பேசக்கூடாது. இனி நீங்கள் சிங்களவர்கள்'' என தமிழில் சொல்லி பொறுப்பை ஒப்படைப்பதன் மூலமும் இது தமிழ்ப் பயங்கரவாதிகளின் கதை என்பது சிங்களத் திரைப்பட ரசிகர்களுக்குப் புரிய வைக்கப்படுகின்றது. பின்பு முற்று முழுதாக சிங்களத்திலேயே உரையாடல்கள் இடம்பெறுகின்றன.

ஆரம்பத்தில் ஒருவரை ஒருவர் அறிந்திராத இவர்கள் இருவரும் தமது அமைப்பினால் தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட ஒப்பந்தத்தை செயற்படுத்தும் பொருட்டு ஒரு பெரிய பங்களாவில் தங்கி திட்டத்தை ஒழுங்கு செய்கின்றார்கள். கணவன் மனைவியாக உலகத்தவர் கண்களின் முன்னால் அவர்கள் நடித்தாலும், அமைப்பின் சட்டத்தின்படி காதலிப்பது அவர்களுக்குத் தடை செய்யப்பட்டிருந்தாலும், அவர்கள் இடையே காதல் தொடர்புகள் ஏற்படுகின்றது. அத்தோடு தாங்கள் மரணத்தின் பொருட்டு அர்ப்பணிக்கப்பட்டிருப்பதும் நினைவுக்கு வருகின்றது. யுவதி பல தடவைகளில் காதல் சைகைகளை வெளிப்படுத்திய போதெல்லாம் ஆரம்பத்தில் எதிர்ப்புத் தெரிவித்த இளைஞனும் காதலில் சிக்குண்டு விடுகின்றான். இறுதியில் இருவரினதும் உறவினால் அவள் கர்ப்பமடைகின்றாள். அதன் பின்னால் மரணத்தினின்றும் தங்களைப் பாதுகாத்து வயிற்றில் உள்ள குழந்தையோடு தப்பி ஓட வேண்டிய தேவை அவர்களுக்கு ஏற்படுகின்றது. இதன்பொருட்டு அவர்கள் இருவரும் தங்கள் திட்டத்தினை செயற்படுத்துவதன் பொருட்டு மாற்றுத்திட்டம் ஒன்றைத் தேர்ந்தெடுக்கின்றார்கள்.

தங்கள் திட்டத்தினை செயற்படுத்துவதன் பொருட்டு வானொலிப் பெட்டி திருத்தும் ஒரு இளைஞனை ஈடுபடுத்துவதற்கு அவர்கள் இருவரும் யோசிக்கின்றார்கள்.

சத்துற என்னும் அந்த இளைஞனைக் காதலிப்பதாக பொய்யாக நடித்து தனது இயக்க நடவடிக்கையில் அவள் ஈடுபடுவதாக



காண்பிக்கப்படுகின்றது. ஒரு தடவை அவளும் அந்த இளைஞனும் அவனது வானொலிப்பெட்டி திருத்தும் கடையினுள் உடலுறவில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது இயக்க இளைஞன் அதனை நேரில் காண்கின்றான். ஆனாலும் வாழவேண்டியதின் ஆசையும், வயிற்றிலுள்ள குழந்தையைக் காப்பதற்காகவும் கரும்புலிக் குண்டுதாரிகள் இருவரும் அந்த இளைஞனைப் பலி கொடுத்து வன்செயல் சுற்றாடலை சந்தர்ப்பமாகப் பயன்படுத்தி தப்பிச் செல்வதற்கு முயற்சி செய்கின்றார்கள்.

பெண் பொறுப்பாளரால் கடமை அடிக்கடி சுட்டிக்காட்டப்படுகின்றது.

கொழும்பு மாநகரில் மிகப் பெரிய ஆடம்பர பங்களாவில் அந்த ஜோடி வசிப்பதாகவும், கரும்புலித் தாக்குதலுக்கு திட்டமிடுவதாகக் காண்பிக்கப்பட்டாலும், வெளிநாட்டு அரச தலைவரைக் கொல்வதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இடமாக ஒரு பாலம் காண்பிக்கப்படுகின்றது. அது பல நூற்றுக்கணக்கான மைல்களுக்கப்பால் உள்ள கம்பளைப் பிரதேசமாகும்.

அரச தலைவர் காரில் வரும்போது வெடிகுண்டைக் கட்டிக்கொண்டு காரில் சென்று மோதி வெடிக்க வைத்து அவரைக் கொல்ல வேண்டுமென்பதே அமைப்பினால் கொடுக்கப்பட்ட திட்டமாகும். அத்திட்டத்தின்படி கரும்புலிகள் மரணிக்க வேண்டும். ஆனால் வாழ வேண்டும் என்ற ஆசையினால் அந்தத் திட்டத்தினைச் செயற்படுத்தாது தங்கள் நடவடிக்கையினை மேற்கொள்கின்றனர். அதன்படி வானொலிப் பெட்டி திருத்தும் இளைஞனோடு தீவிரவாத யுவதி இருக்கும் வேளையில் தனது காலில் மறைத்து வைத்திருந்த பிஸ்ரலைக் கழற்றி கையில் ஏந்திய வண்ணம் அமைப்பு இளைஞனும் அங்குவந்து அவனைப் பயமுறுத்தி காரில் ஏற்றிச் செல்கின்றனர்.

வெளிநாட்டு அரச தலைவரது வாகனம் பாலத்தின் நடுவில் வருகின்றபோது பாதுகாப்பு வாகனங்களைத் தவிர்த்து, வானொலி திருத்தும் இளைஞனை காரை ஓட்டச் செய்து, தான் காரினின்றும் இறங்கி அரச தலைவரைச் சுட்டுவிட்டு பாலத்திலிருந்து நீரில் தப்பிச் செல்கின்றான் கரும்புலி இளைஞன். முன்பே திட்டமிட்டபடி கரும்புலி யுவதி காட்டின் ஒருபுறம் காரொன்றுடன் ஆயத்தமாக நிற்கின்றாள். அதில் இருவரும் தப்பிச் செல்கின்றனர்.

அரச தலைவர் இறக்கவில்லை என்பதையும், திட்டமிட்டபடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என்பதையும், தெரிந்து கொண்ட அமைப்பின் பொறுப்பாளர் மற்றும் போராளிகள் ஆத்திரமடைந்து கரும்புலி வீரர்கள் இருவரையும் தேடிச் செல்கின்றார்கள்.

முன்பு இயக்கத்தில் இருந்து முறைப்படி விலகாமல் தப்பியோடிவந்த யுவதி ஒருவரின் வீட்டில் அவர்கள் இருவரும் மறைந்து கொள்கின்றனர்.

இவர்கள் தங்கியிருந்த வீட்டிற்கு பெண் பொறுப்பாளரால் அனுப்பப்பட்ட கொலையாளி வந்து சேர்கின்றார். இவர்கள் இருவரும் ஒழிந்து கொள்கின்றனர். கொலையாளி வீட்டினுள் வந்து தேடிச் செல்லும் போது அலுமாரி ஒன்றினுள் சேலைத் தலைப் பொன்று வெளியே நீட்டியபடி தென்படுகின்றது. கொலையாளி தனது இயந்திரத் துப்பாக்கியினால் சல்லடை போட்டு விட்டுச் செல்கின்றான். வீட்டுக்கார யுவதி குழறிய வண்ணம் அலுமாரியைத் திறக்கின்றாள்.

அங்கு யாரும் இல்லை.

ஜோடி அங்கிருந்து மாறி வெற்றுப்பெட்டிகள் ஏற்றிய வாகனம் ஒன்றில் தப்பிச் செல்கின்றனர். அவ்வாகனம் கடற்கரைவெளி ஒன்றில் அவர்களை இறக்கிவிட்டுச் செல்கின்றது. கடற்கரையில் நிறுத்தப்பட்டிருக்கும் படகுக்காக இருவரும் தமது கரங்களைக் கோர்த்த வண்ணம் உல்லாசமாகப் பறந்து செல்கின்றனர்.

திடீரென்று காற்றைக் கிழித்தவண்ணம் துப்பாக்கி சடசடக்கின்றது. கதாநாயகன் முதுகில் குண்டு பாய்ந்து அவன் மடிந்து வீழ்கின்றான். கதறியபடியே கதாநாயகி திரும்புகின்றாள்.

அமைப்பினால் அனுப்பப்பட்டிருந்த பெண் பொறுப்பாளரும் கையில் துப்பாக்கியோடு கொலையாளியும் கண்களில் கனல்பறக்க நின்று கொண்டிருக்கின்றனர்.

கதாநாயகி தனது கழுத்தில் இருந்த குப்பியைக் கழற்றி வாயில் சயனைட்டைச் சாப்பிட்டு அவளும் கதாநாயகனின் கரத்தைக் கோர்த்தபடி இறந்துவிடுகின்றாள்.

அளவுக்கதிகமான ஆபாசக் காட்சிகளைக் காண்பித்ததன் மூலமும், நம்பமுடியாத விதத்தில் கதையை நகர்த்தியதன் மூலமும் விடுதலைப் போராட்டத்தினையும், தம் இன்னுயிர்களை ஈகம் செய்யும் கரும்புலிகளை - விடுதலைப் புலிகளை மாத்திரமன்றி தமிழினப் பெண்களையும் கேவலப்படுத்தும் ஈனச்செயலில் மொஹான் நியாஸ் ஈடுபட்டுள்ளார்.

மொஹான் நியாஸ் இந்தத் திரைப்படத்தினை தயாரித்தது பற்றி இவ்வாறு கூறுகின்றார்.

"எங்களது நாடுதான் தமது உயிரை அழித்துக் கொள்ளும் அதிகமானோர் உள்ளநாடு. தமதுயிரை அழித்துக்கொள்ளும் வன்செயல் இன்று உலகின் அடுத்த நாடுகளிலும் பரவியுள்ளது. இனி இதைப்பற்றி கதைக்கூடிய நாடு சிறிலங்காதான். ஆனபடியால் நான் இது போன்ற விடயத்தைத் தெரிந்து எடுத்தேன்.

அடுத்தது, கரும்புலிகள் இது போன்ற செயற்பாடுகளில் சம்பந்தப்பட்டாலும், அவர்களுக்குள்ளே மனிதத்தன்மை, காதல், ஆசை, குழந்தைமீது அன்பு போன்ற உணர்ச்சிகள் உண்டாகின்றன. அவை வன்செயல்கள் மீதுள்ள விருப்பையும் மீறி வெளிவருகின்றது என்பதைக் காண்பிப்பதற்கே நான் இந்தக் கதையில் காதலையும் சேர்த்தேன்.

இன்று காண்பிக்கப்படும் மேற்குலக படங்களோடு ஒப்பிட்டால் எனது 'களுசுதுமல்' திரைப்படத்தில் உடலுறவு திரைக்காட்சி இல்லை. கரும்புலிகளோடு பழகிக்கொள்வதற்கு எங்களுக்கு வாய்ப்புக்கள் கிடைக்கவில்லை. ஆனபடியால் பயங்கரவாத விசாரணைப்பிரிவின் உத்தியோகத்தர்களின் அனுசரணையோடு, கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ள கரும்புலிப் பயங்கரவாதிகளோடு கதைப்பதற்கு எனக்கு சர்ந்தர்ப்பம் கிடைத்தது.

'களுசுதுமல்' திரைப்படத்தில் பிரதான பாத்திரமேற்று நடித்த நிர்வாணக்காட்சிப்புகழ் தில்கானி அசோகமாலாவைக் தமிழ்ப் பெண்ணாகச்சித்திரித்து சென்ற ஆண்டும் ஒரு சிங்களத் திரைப்படம் வெளிவந்தது. அது டெல்லியில் 31.08.2001 இல் இடம்பெற்ற சர்வதேச திரைப்படப் போட்டியிலும் காண்பிக்கப்பட்டது.

அசோக ஹந்தகம என்பரால் தயாரிக்கப்பட்ட "மே மகே சந்தயி" (இது எனது சந்திரன்) என்ற அந்தத் திரைப்படம் பங்கர் ஒன்றினுள் யுத்தத்தினால் இடைநடுவில் அந்தரித்த தமிழ்ப் பெண் ஒருத்தி தனதுஉயிரைப் பாது காத்துக்கொள்வதற்காக பாய்கின்ற காட்சியோடு ஆரம்பமாகின்றது. பகிடி பரிகாசம் பண்ணிக்கொண்டு சிங்கள இராணுவ வீரன் துப்பாக்கியால் சுடுகின்றான். பங்கரினுள் உயிரைப் பாதுகாப்பதற்காக பாய்ந்த தமிழ்ப் பெண்ணைச் சுடுவதற்கு அவன் துப்பாக்கியை நீட்டுகின்றான். தன்னைக் கொல்வதற்காக துப்பாக்கியை நீட்டிய இராணுவ வீரன் முன்னால் தமிழ்க் குடும்பப்பெண்ணாகச் சித்திரிக்கப்படும் அவள் இராணுவ வீரனை தகாத செயலிற்கு அழைப்பதாகவும் அதன் பிறகு அந்த இராணுவவீரன் அவளோடு அந்த பங்கரினுள் உறவில் ஈடுபட்டிருக்கிறானாம்.

இக்காட்சியைப் பற்றி தில்கானா அசோகமாலா "இராணுவவீரன் அவளைக் கொல்லப்பார்க்கின்றான். என்னைக் கொல்லாமல் இருக்க எதையும் செய் என்கின்றஅர்த்தம் அதில் இருக்கின்றது'' என விபரிக்கின்றாள்.

பின்பு அந்த இராணுவ வீரன் இராணுவத்தினின்றும் தப்பி ஓடுகின்றானாம். அந்தத் தமிழ்ப் பெண்ணும் அவன்பின்னால் அவனது வீட்டுக்குச் செல்கின்றாளாம். அவனுக்கு ஊரில் மனைவியும் இருக்கின்றாளாம்.

நல்லகாலமாக அந்தத் திரைப்படத்தினையும் பார்க்கும் அவலம் எனக்குக் கிட்டவில்லை.

அந்தத் திரைப்படத்தைப் பார்த்தபின் வெறுப்பும் அருவருப்புடனும் கூடிய வேதனை ஏற்பட்டதாக டெல்லியில் அத்திரைப்படத்தினை பார்க்க நேர்ந்த இராணுவ உத்தியோகத்தர் கூறினார்.

கொடிய யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட அப்பாவி மக்களின் துன்பங்கள்-துயரங்கள் நிறைந்த ஆயிரக்கணக்கான கதைக்கான கருக்கள் இருக்கும்போது சிங்களச் சினிமா உலகத்தினர் ஏன்தான் இந்தவிதமான, அவர்களது உரிமைப் போராட்டத்தினையும் கொச்சைப்படுத்தும் விதமாக திரைப்படங்களைத் தயாரிக்கிறார்களோ தெரியவில்லை.




கிளிநொச்சி நகரில்

# காமதேனு தங்ககம்

# Kamathenu Lodge

*Kilinochchi.*

கிளிநொச்சி நகரின் மத்தியில்

(A9 வீதி, கிளிநொச்சி பிரதம தபாலகத்திற்கு அருகாமையில் )



- ★ சகல வசதிகளுடன் குறைந்த செலவில் நிறைந்த சேவை
- ★ தனித்தனி குளியல் அறைகள்
- ★ தனித்தனி தங்கும் அறைகள்
- ★ மின்சார வசதி
- ★ வாகன தரிப்பிட வசதி
- ★ உணவுத் தேவைக்கு ஏற்ப ஒருங்கிணைந்த சேவை
- ★ மேல் மாடியில் கூட்டாக தங்குபவர்களுக்கான தங்குமிட வசதி



குறைந்த செலவில் உங்கள் மனம் நிறைந்த சேவைக்கு இன்றே நாடுங்கள்

காமதேனு தங்ககம்

கிளிநொச்சி

[சீ - 7350]


## அமெரிக்க மைய....

விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தையை முறிக்க மாட்டார்கள் என்பது தற்போது சர்வதேச சமூகத்திற்கு நன்கு தெரியும். கடந்த இரண்டு ஆண்டுகளாக புலிகள் பேச்சுவார்த்தையில் தமது உறுதிப்பாட்டை வெளிப்படுத்தி வருவதுடன் எம்.ஓ.யூ. வினை நடைமுறைப்படுத்துவதில் புலிகளின் பங்கு திருப்திகரமாகவே உள்ளதாக அறிக்கைகள் பொதுவாக கூறுகின்றன.

இந்நிலையில் பேச்சுவார்த்தையானது சந்திரிகாவினால் குழப்பப்படாமல் பாதுகாக்க வேண்டிய பொறுப்பே தமக்கு இருப்பதாக வெள்ளை மாளிகை கருதுகின்றது. வெள்ளை மாளிகையைப் பொறுத்த வரை தீர்வு என்பது ரணிலைப் பாதுகாப்பது என்பது தான். அதேவேளை தீர்வு தமிழரால் ஏற்றுக்கொள்ளக் கூடியதாய் இருந்தால் தான் சமாதானம் சாத்தியமாகும் என்றும் வெள்ளைமாளிகை கருதுகின்றது. இந்த வகையில் மேற்கத்தேய பாணியிலான சமஷ்டி தீர்வினை வெள்ளை மாளிகை விரும்புகின்றது. கிழக்கு ஐரோப்பாவில் அமெரிக்கா இவ்வாறான தீர்வையே முன்வைத்தது.

சமஷ்டி தீர்வு, ஐ.தே.க.வினை ஸ்தாபிப்பது, நவீனமயமாக்கம், தென்னாசியாவை உலக வர்த்தகமயமாக்கல் ஆகிய இலக்குகளுடன் தான் வெள்ளை மாளிகை ரணிலை தழுவுகின்றது. மேற்குலக சமஷ்டி முறையை அமெரிக்கா விரும்பினாலும் சிங்கள இனவாதிகள் இந்திய அரசை சமஷ்டி முறைக்கு கீழ் தான் சிந்திக்கிறார்கள். வாஷிங்டனின் விருப்பம் சமஷ்டி ஆகும். இருந்தாலும் கூட அது கொழும்பை பகைக்காத வகையில் தான் தனது குரலை வைத்திருக்கும்.

இத்தகைய பின்னணியில் ரணிலை கவிழ்க்க சந்திரிகா எத்தனிக்கக் கூடாது என்பது தான் ஆமிரெஜ் மேற்கொண்ட இலங்கைக்கான அவசர விஜயத்தின் செய்தியாகும். எப்படியோ ஆமிரெஜினது விஜயத்தின் புளுக்கத்தை சந்திரிகாவால் தாங்க முடியாத நிலையில் விருப்புக் கொள்ளாமல் அவர் சிறகடித்துப் பறப்பவர் ஆனார். இந்நிலையில் நட்டாமுட்டியான ஜே.வி.பி. யையனைப் பயன்படுத்தி சமாதான முயற்சிகளை குழப்புவதற்கான இணைப்பாளர் பொறுப்பை அநுரா வகிக்கத் தொடங்கியுள்ளார். ஜே.வி. பி.க்குப் பின்னால் ஊர்வலங்களில் திரண்டு இருப்பது அநுரா ஆதரவு சு.க. வினர் தான் இதில் ஜே.வி.பி. யின் கணக்கு என்னவெனில் இச்சந் தர்ப்பத்தில் தமிழருக்கு எதிரான தீவிர இனவாத கோஷத்துடன் சு.க. ஆதரவு தளத்தைப் பயன்படுத்தி தன்னை வெற்றி வீரனாக்கி விட வேண்டும் என்பதாகும்.

சர்வதேச அரசியலில் யாருக்கும் பதில் சொல்லத் தேவையற்ற ஒரு பொறுப்பற்ற கூட்டமே ஜே.வி.பி. என்பதால் சந்திரிகாவும் அநுராவும் ஜே.வி.பி.யினருக்கு மந்திரமோதி கலையாடச் செய்கின்றனர். இப்பின்னணியில் சமாதானத்திற்கு எதிராக கடந்த செவ்வாய்க்கிழமை ஜே.வி.பி.யினர் மேற்கொண்ட ஊர்வலம் வழமையை விடவும் பெரிதாய் இருந்தது என்று விமர்சகர்கள் கூறுகின்றனர். ✽✽✽✽✽

## முல்லைவைத்திய சாலையில் வைத்தியர்கள் பற்றாக்குறை

(புதுக்குடியிருப்பு)

முல்லைத்தீவு மாவட்ட அரசினர் வைத்தியசாலையில் வைத்தியர் பற்றாக்குறை தொடர்கின்றது. வைத்தியர்களும் நோயாளர்களும் பெரும் சிரமங்களை எதிர் நோக்குகின்றதை அவதானிக்க முடிகின்றது.

முல்லைத்தீவு மாவட்ட அரசினர் வைத்திய சாலையில் கடந்த பல ஆண்டுகாலமாக வைத்தியர் பற்றாக்குறை நிலவி வருகின்றமை அனைவரும் அறிந்த விடயமே. ஆனால் இன்றுவரையும் அவ்வெற்றிடங்கள் நிரப்பப்படாமல் இருந்து வருகின்றமையால் நோயாளர்களும் தற்போது கடமையாற்றி வருகின்ற சில வைத்தியர்களும் வேலைப் பழுவால் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதை அவதானிக்க முடிகின்றது.

விடுதியில் உள்ள நோயாளர்களையும் பார்வையிட்ட பின்னர் வெளிநோயாளர் பிரிவில் உள்ள நோயாளர்களையும் பார்வையிட வேண்டிய ஓர் சூழ் நிலையில் உள்ளதாக உதவிவைத்திய அதிகாரி ஒருவர் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

வைத்தியர்கள் தமது சொந்த லீவில் செல்லுகின்ற போது பதிலுக்குயாரும் வருவதில்லை. அவ்வாறு பதிலுக்கு வைத்தியர்களை வருவிப்பதற்கும் வைத்தியர் பற்றாக்குறை வன்னி வைத்தியசாலை எங்கும் உள்ளதால் அதுவும் சாத்தியப்படாத விடயமாகவேயுள்ளது.

இதனால் சேவையில் உள்ள வைத்தியர்களும், நோயாளர்களும் தொடர் சிரமங்களையும் அவலங்களையுமே எதிர் கொண்டு வருகின்றனர். (08)

## மரண அறிவித்தல்

### திருமதி. கனகாம்பிகை விசுவலிங்கம்

புங்குடுதீவு 9ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், இல.59, பெரியகுளம் கண்டாவளையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி கனகாம்பிகை விசுவலிங்கம் அவர்கள் 2002-09-05ஆம் திகதி அகால மரணமடைந்துவிட்டார்.இவர் தம்பிஐயா அன்னம்மா தம்பதிகளின் பாச மகளும், காலஞ்சென்ற குணசிங்கம் விசுவலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், கனகரட்ணம், அன்னலட்சுமி, காலஞ்சென்ற சந்திரவதனி, யோகேஸ்வரன், மனோகர், மஞ்சுளா தேவி, தவச்செல்வம் (சுவீஸ்), ஜீவானந்தம் (லண்டன்), மதிவதனி (சுவீஸ்), அருளானந்தம் (பாபு- உரிமையாளர் அருள்மில் புளியம் பொக்கணைச் சந்தி) ஆகியோரின் பாசத் தாயாரும், மஞ்சுளாதேவி, பரமலிங்கம், வேலுப்பிள்ளை, கனகராசா, புவனேஸ்வரி (சுவீஸ்), எழிலினி (லண்டன்), வன்னியசிங்கம் (சுவீஸ்), உதயராணி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார். அன்னாரின் இறுதிச் சடங்குகள் பற்றிய விபரம் பின்னர் அறியத்தரப்படும்.

தகவல்:
அருளானந்தம் (பாபு)
மகன்

(2372)

## 31ஆம் நாளில் துயர் பகிர்கின்றோம்

கடந்த 07.08.02 அன்று இறைபதம் அடைந்த வைத்திய கலாநிதி சிவபாலன் அவர்களின் தாயாரான

### மீனாம்பிகை சின்னத்துரை

அவர்களின் 31ஆம் நாள் அந்தியேட்டி நிகழ்வை நினைவு கூருவதோடு அன்னாரின் குடும்பத்தாரின் துயரில் பங்கு கொண்டு அவரின் ஆத்மா சாந்திக்காக பிராத்திக்கின்றோம்.

-நன்றி-

நிர்வாகம்,
டாக்டர் பொன்னம்பலம் ஞாபகாத்த தனியார்
மருத்துவமனை,
புதுக்குடியிருப்பு, கிளிநொச்சி

(2137)

# நேர்நோக்கு

## துணிந்தால் முடியும்

சிறிலங்காவின் ஆட்சித்தலைவரும் நிறைவேற்று அதிகாரம் கொண்டவருமான சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, சமாதான முயற்சிகளுக்கு முட்டுக்கட்டை போடும் அறிவித்தல்கள் சிலவற்றைக் கடந்த சில தினங்களாக வெளியிட்டு வருகிறார். அவரது ஆட்சிக் காலத்தின் 80 வீதத்திற்கும் மேலான பகுதியை யுத்தத்தில் வீணடித்து விட்ட அவர், தன்னால் முடியாத சமாதான முயற்சிகள் சுமுகமாக மேற்கொள்ளப்படுவது கண்டு பொறுக்க முடியாது எப்படியாவது அதனைக் குழப்பி விடும் நடவடிக்கைகளை ஆரம்பித்து விட்டார் என்றே கூறவேண்டும்.

சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் யுத்த நெருக்கு வாரங்களிலிருந்து பொதுமக்கள் விடுவிக்கப்பட வேண்டுமென்பதும், மக்கள் இயல்பு வாழ்க்கை நிலைக்குத்திரும்ப வேண்டுமென்பதும் விடுதலைப்புலிகளால் பல ஆண்டுகளுக்கு முன்னரே வலியுறுத்தப்பட்டு வந்த விடயங்களாகும். அவரது கட்சி பாராளுமன்றத்தில் ஆளும் அணியாக இருந்தவேளையிலும் இவ்விடயம் புலிகளால் முன்வைக்கப்பட்டது.

சனாதிபதி சந்திரிகாவும், அவரது பிரதிப்பாதுகாப்பு அமைச்சரும் யுத்தம் முடிவுக்கு வருவதற்கான வீதக்கணக்குகளைக் கூறிக்கொண்டு இருக்கையிலும், யாழ்ப்பாணத்திலிருந்து கண்டிக்கு ஏ-9 வீதியூடாக பேருந்து விடப்போவதாக சவால் அடித்துக் கொண்டிருக்கையிலும், புலிகள் இவ்வாறாகவே வலியுறுத்தி வந்தனர். ஆனால் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் ஆட்சியோ இது புலிகளின் பலவீனத்தின் வெளிப்பாடு எனக் கூறிவந்தது.

அதன் பின்னர் வன்னிப்பிரதேசத்திலிருந்தும் ஆனையிறவிலிருந்தும் அவரது படைகள் தப்பி ஓடிவிட்ட பிறகும் புலிகள் சமாதானப் பேச்சுக்களுக்குத் தயாராகவே இருந்தனர். தமது சமாதானத்துக்கான விருப்பத்தை வெளிப்படுத்த, ஒரு தலைப்பட்சமான யுத்தநிறுத்தத்தையும் மேற்கொண்டனர். ஆனால் அவற்றையெல்லாம் உதாசீனம் செய்த சந்திரிகா அரசாங்கம் அச்சந்தர்ப்பத்தை சில இராணுவ அனுகூலங்களைப் பெறப் பயன்படுத்திக் கொண்டது. இறுதியில் பறிகொடுத்த ஆனையிறவை மீட்கும் முயற்சியில் இறங்கி தோல்வியைத் தழுவிக் கொண்டது.

அதன் பின்னரும் கூட சமாதான முயற்சிகளில் இறங்க சந்திரிகா அரசாங்கம் விரும்பவில்லை. புலிகளை "உலகளாவிய ரீதியில்" ஓரம் கட்டி அழித்தொழித்து விடலாம் என்றும், புதிது புதிதாக ஆயுதங்களைக் கொள்வனவு செய்து யுத்தத்தில் வெற்றி கொண்டு விடலாம் என்றுமே நம்பியது. ஆனால் சிறிலங்காவை பலவழிகளிலும் மீள முடியாத சகதிக்குள் தள்ளியதே அது கண்ட பலனாகும். அத்துடன் தனது ஆட்சி அதிகாரத்தையும் இழக்க வேண்டி வந்தது.

1994இல் விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதாகக் கூறி ஆட்சியில் அமர்ந்த அவர் அவ்வாக்குறுதிக்கு எதிராக நடந்தமையால் ஆட்சியை இழக்கும் நிலை ஏற்பட்டது. இப்போது அதே வாக்குறுதியுடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆட்சியில் அமர்ந்திருக்கிறார்.

மக்களின் விருப்பத்தைப் புரிந்து கொண்டு சமாதான முயற்சிகளை மெதுவாகவேனும் எடுத்துவரும் இவ்வேளையில் அதற்கு முட்டுக்கட்டை போட்டு தடம் புரளவைக்கும் நோக்கத்தை சந்திரிகா கொண்டிருக்கிறார்.

புலிகள் காவல் நிலையங்கள், வங்கிகள் நீதிமன்றங்களை அமைத்திருப்பதாகவும் நீதியாளர்களுக்குப் பயிற்சிகளை வழங்கி வருவதாகவும் அவர் கூறியிருக்கிறார். இவ் அமைப்புகள் புரிந்துணர்வு ஒப்பந்த காலத்தில் அதனைப் பயன்படுத்தி அமைக்கப்பட்டவை போன்ற ஒரு தோற்றப்பாட்டை ஏற்படுத்த ஜே.வி.பியைப் பின்பற்றி அவர் எடுத்திருக்கும் முயற்சி இதுவாகும். ஆனால் இவ் அமைப்புகள் 1994இல் அவரது அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தியபோதே இருக்கின்றன என்பது வெளிப்படையானதொரு விடயமாகும்.

இதேவேளை, ஆரம்பத்தில் புரிந்துணர்வு ஒப்பந்தமென்று ஏற்படுவதற்கு பலவழிகளிலும் முட்டுக்கட்டை போட்ட சனாதிபதி சந்திரிகா, ஒப்பந்தமேற்பட்ட பின்னர் தான் நினைத்தால் ஒரு கடிதத்துடன் இவ் ஒப்பந்தத்தைச் செயலற்றதாக்கி விடமுடியும் எனக் கூறிவந்தார். ஆனால் புறச்சூழ்நிலை அவரை அவ்வாறு செய்ய அனுமதிக்கவில்லை.

எனினும் அவரது கட்சியினரும் ஜே.வி.பி.யினரும் இணைந்து "புலிகளை நம்பமுடியாது அவர்கள் ஒரு சில மாதங்களில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மீறி விடுவார்கள்" என தென்பகுதியில் பிரச்சாரங்களை மேற்கொண்டனர். அதேவேளை அவர்களது விருப்பமாகவும் அதுவே இருந்தது. ஆனால் புரிந்துணர்வு ஒப்பந்தத்தைப் புலிகள் சரிவரக் கடைப்பிடிப்பதுடன் சமாதான முயற்சிகளில் அண்மையில் ஏற்பட்ட முன்னேற்றம் அவர்களுக்குப் பொறுக்க முடியாததாக உள்ளது.

இந்நிலையில் தனது நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி இம்முயற்சிகளை எவ்வாறேனும் குழப்பிவிடும் முயற்சிகளை மேற்கொள்ள சனாதிபதி சந்திரிகா முடிவு செய்திருக்கிறார் போலவே தெரிகிறது.

சமாதானப் பேச்சுவார்த்தைக்கான நாட்கள் குறிக்கப்பட்ட பின், அதற்கு முன்னோடி நடவடிக்கைகளாக புலிகள் மீதான தடையை நீக்கவும், கைதிகள் பரிமாற்றத்திற்கும் நடவடிக்கைகளை எடுக்க ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐ.தே.மு அரசாங்கம் முன்வந்தது. ஆனால் தடை நீக்கத்திற்கு எதிர்ப்பு தெரிவித்ததுடன் கைதிகள் விடுதலை செய்யப்படுவதற்கும் தடைபோடும் செயற்பாடுகளையும் அவர் மேற்கொண்டுள்ளார்.

புலிகள் மீதான தடைநீக்கம் என்பது சனாதிபதி சந்திரிகாவைப் பொறுத்து ஒரு கௌரவப் பிரச்சினையாகவும் அமையக்கூடும். ஏனெனில் இவ் விடயத்தில் அவரின் கடந்த காலச் "சாதனையாகக்" அவரிடம் அது மட்டுமே உள்ளது.

அத்துடன் தாய்லாந்தில் நடைபெறவுள்ள ஆரம்பகட்டப் பேச்சுக்களின் மூலப் பொருளான இடைக்கால நிர்வாக சபையை ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் அவர் கூறியுள்ளார்.

எவ்வாறாயினும் பொதுசன ஐக்கிய முன்னணியினரும் அதன் தலைவி சந்திரிகா குமாரதுங்கவும் ஜே.வி.பியும் சமாதான முயற்சிகளுக்கு என்றுமே ஆதரவாக இருக்கப் போவதில்லை என்பது வெளிப்படையாகும். அவர்கள் சமாதானம் ஏற்படுவதென்றே, இன்றைய நிலையில் சிறிலங்காவைப் படுகுழியிலிருந்து மீட்கமுடியும் என்பதைத் தெரிந்து கொண்டும் குறுகிய அரசியல் இலாபத்திற்காக அவ்வாறே நடந்து கொள்வர் என்பதும் வெளிப்படையானதாகும்.

ஆனால் இவர்களின் செயற்பாடுகளுக்காகச் சமாதான முயற்சிகளைத் தாமதப்படுத்துவதோ கைவிடுவதோ இயலாத காரியமாகும். விடுதலைப் புலிகள் சமாதான முயற்சிகளில் உளப்பூர்வமாக ஈடுபடுவது போலவே அரசாங்கமும் ஈடுபடுவதன் மூலம் இவ் எதிர்ப்புகளை முறியடித்து விடமுடியும் எனத் துணிந்து கூறிவிடலாம். தேவை அதற்கான துணிவும் செயற்திறமையும் மட்டுமே.

-வேலவன்

## படமும் தகவலும்



முன்னாள் சிறிலங்காவின் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்தரத்வத்தை தனது சட்ட ஆலோசகரும், வழக்கறிஞருமான டின்சில் குணரட்னாவுடன் கோட்டை மாஜிஸ்ரிட் நீதிமன்றில் இருந்து விசாரணையை முடித்துக்கொண்டு வரும் போது எடுக்கப்பட்ட படம் இது. உள்ளூர் வங்கி ஒன்றின் பாதுகாப்பு வைப்புப் பெட்டகங்களிலிருந்து ரத்வத்தையினதும், அவரது மனைவியின் பெயரிலுமான மில்லியன் கணக்கு ரூபா பெறுமதி மிக்க வைப்பு சான்றிதழ்கள் கைப்பற்றப்பட்டமை தொடர்பான விசாரணை தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவர் மீது ஏற்கனவே கொலை உட்பட பல்வேறு குற்றச்சாட்டுக்கள் மேற்கொள்ளப்பட்டு வந்ததும் தெரிந்ததே.



மல்வத்தபீட மகாநாயக்கர் வணக்கத்துக்குரிய ரம்புக்வேல சிறி விபசி மகாநாயக்க தேரரை சிறிலங்காவின் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன கடந்த வாரத்தில் சந்தித்துப் பேசினார். இதன் போது தற்போதைய பாதுகாப்புத் தொடர்பாகவும் வேறு முக்கிய பிரச்சினைகள் தொடர்பாகவும் திலக் மாரப்பன மகாநாயக்கருக்கு விளக்கியதாகவும் தெரிகிறது.



சந்தனக் கடத்தல் வீரப்பனால் கடத்தப்பட்டுள்ள முன்னாள் கர்நாடக அமைச்சர் நாகப்பாவையும், கடத்திய வீரப்பனையும் கடத்தப்பட்ட நாகப்பாவின் மனைவிக்கு ஆறுதல் சொல்லும் உறவினர்களையும் படத்தில் காணலாம்.




## தேவை

நன்கு அனுபவம் வாய்ந்த சாரதிகளும், உந்துருளி திருத்துநர்களும் தேவைப்படுகின்றனர். உணவு, இருப்பிடம் இல வசமாக வழங்கப்படும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

## விற்பனை

நல்ல நிலையிலுள்ள உந்துருளிகள் விற்பனை செய்யப்படுகின்றது. நேரில் பார்வையிட்டுப் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்புகட்கு:-

தினமும் காலை 8.00 மணி முதல் மாலை 5.00 மணிவரை புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள தமிழீழக் காவல்துறை நடுவப்பணியகத்தில் நேரில் தொடர்பு கொள்ளவும்.

நடுவப்பணியகம்,
தமிழீழக் காவல்துறை,
புதுக்குடியிருப்பு.

(சி.7351)